REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 17 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 117 | Friday 17, May, 2024 | 24 பக்கங்கள் | 50/-


## திருடர்களை பிடிப்போமென்ற கோஷம் அரசியல் மேடைகளில் இனி இல்லை



ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர். த சில்வா

விசேட நேர்காணல்

13 ஆம் பக்கம்

## உலக நீர் மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதி இந்தோனேசியா பயணம்



இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெறும் 10 ஆவது உலக நீர் மாநாட்டின் உயர்மட்டக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை (18) இந்தோனேசியா பயணமாகிறார்.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் (JokoWidodo) அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

"கூட்டு செழுமைக்கான நீர்" என்ற தொனிப்பொருளில் 10 ஆவது உலக நீர் மாநாடு மே 18 முதல் 20 வரை இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் மே மாதம்

06

குற்றச்செயல்களூடாக ஈட்டப்படும்

## சொத்துக்களை அரசுடமையாக்க விரைவில் சட்டம் கொண்டுவரப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்



குற்றச் செயல்கள் மூலம் மோசடியான வகையில் சம்பாதிக்கும் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கான புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதற்கான அனுமதியை கடந்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விரைவில் இதை, சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை

06

ரஷ்யா – உக்ரைன் போரில் தொடர்புபட்டிருக்கும்

# இலங்கையர் குறித்து ஆராய ரஷ்யாவுக்கு விசேட தூதுக்குழு

விரைந்து அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதி ரணில் உத்தரவு



**பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முன்னாள் ரஷ்யத் தூதுவர் மற்றும் வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள் குழு ரஷ்யா செல்லவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவிப்பு**

ரஷ்யா உக்ரைன் போரில் தொடர்புபட்டிருக்கும் இலங்கையர் குறித்து ஆராய்வதற்காக, விசேட தூதுக் குழுவொன்றை ரஷ்யாவுக்கு அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

இதற்கமைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முன்னாள் ரஷ்யாவின் தூதுவர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று உடனடியாக ரஷ்யாவுக்கு அனுப்பப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்:

தற்போது வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து ரஷ்யா - உக்ரைன் போரில் பங்கெடுத்திருக்கும் இலங்கையரின் கணக்கெடுப்பை நடத்தி வருகின்றன. சுற்றுலா விசாவில் இலங்கையர் சிலர் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. அவர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் முப்படைகளிலிருந்து ஓய்வு பெற்ற வீரர்கள். ரஷ்யாவுக்கு எத்தனை பேர் சென்றுள்ளனர் என்ற கேள்விதான் தற்போதைய பிரச்சினையாக காணப்படுகிறது.

06







## இராஜாங்க அமைச்சர் செஹானுக்கு அச்சுறுத்தல்

பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்



நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கு விடுக்கப்பட்டுள்ள மரண அச்சுறுத்தல் தொடர்பில், கொழும்பு கோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். நேற்று முன்தினம் பிற்பகல் இராஜாங்க அமைச்சருக்கு அவரது அலுவலக தொலைபேசி ஊடாக மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

06

G.C.E O/L மாணவர்களுக்கான

## A/L கல்வி நடவடிக்கைகள் ஜூன் 04ஆம் திகதி ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்



கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர வகுப்பு கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் ஜூன் 04ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று கல்வியமைச்சு விசேட அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கைக்கிணங்க எதிர்வரும் ஜூன் (04) உயர்தர வகுப்புக்கான கல்வி

06

## ரஷ்யப் போரில் காயமடைந்த இராணுவ வீரர் நாடு திரும்பினார்

பொலிஸார் தீவிர விசாரணை!

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மனைவிக்கு சிகிச்சை அளிப்பதற்கான பணத்தை திரட்டும் நோக்கில், ரஷ்ய இராணுவத்தில் இணைந்து, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இலங்கையர் ஒருவர் நாடு திரும்பியுள்ளார்.

குருநாகல், கும்புக்கெட்டே பகுதியைச் சேர்ந்த எரந்த சிந்தக்க தென்னக்கோன் என்பவரே, இவ்வாறு நாடு திரும்பியுள்ளார்.

வேறு தொழிலுக்காக ரஷ்யா சென்று, பின்னர் ரஷ்ய இராணுவத்தில் இணைந்து கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

06

## விஜேயதாசவுக்கு எதிராக மீண்டும் வழக்குத் தொடர்ந்தார் துமிந்த

நிராகரிக்கப்பட்ட தடையுத்தரவு கோரலை மீண்டும் உறுதிசெய்ய வழக்கு விசாரணை

லோரன்ஸ் செல்வநாயகம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, திருத்த முறைப்பாடு ஒன்றை தாக்கல் செய்வதற்கு அந்தக் கட்சியின் பதில் பொதுச்

06

## இந்தியாவின் PhonePe UPI கட்டண முறை இலங்கையில் அறிமுகம்

இலங்கையின் LankaPayQR உடன் இணைவு





இந்திய fintech நிறுவனத்தின் PhonePe Unified Payments Interface) கட்டணமுறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெளியீட்டு நிகழ்வில் (15) மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோர் கலந்து கொண்டு இதை அறிமுகப்படுத்தினர்.

நேற்று முன்தினம் முதல் Lanka

06



அயோத்யா இராம ஜனம் பூமி அறக்கட்டளையின் பிரதிநிதிகளாக இலங்கை வந்துள்ள ஸ்ரீஅவிநாஸ் திருப்பாத்தி தலைமையிலான குழுவினர் அயோத்தி நகரிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித கங்கை நீர், புனித மண் ஆகியவற்றை நேற்று (16) அறங்காவலர் சபை தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே. இராதாகிருஸ்ணனிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம்.

அந்தமானிலிருந்து கப்பல் வருவதில் தாமதம்

## காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவை மீண்டும் ஒத்திவைப்பு

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது



இந்தியா - இலங்கை இடையேயான பன்னாட்டு பயணியகள் கப்பல் போக்குவரத்து சேவை, மீண்டும் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இச்சேவை இன்று (17) வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட இருந்தது. இந்நிலையிலே எதிர்வரும் 19ஆம் திகதிக்கு இச்சேவை மாற்றப்பட்டுள்ளது. அந்தமானிலிருந்து நாகைக்கு வரவேண்டிய பயணிகள் கப்பல்

06

## தமிழ் தரப்பு பொது வேட்பாளர்; சகலரையும் இணைத்து தீர்மானம்

வேலன் சுவாமிகள்



தமிழர் தரப்பின் பொது வேட்பாளர் யார்? என்ற கேள்வி பலர் மத்தியில் காணப்பட்டாலும் தற்போது அதுபற்றி எவரும் பேசவில்லை. பொது வேட்பாளர் என்ற கோட்பாட்டை அனைவரிடமும் கட்டி எழுப்பி அனைத்து தரப்பையும் ஒன்று சேர்த்து அதன் பின்னர் பொது வேட்பாளர் யார்? என்பதை முடிவு எடுக்க தீர்மானித்துள்ளதாக பொத்துவில் பொலிகண்டி மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் தெரிவித்தார். நெடுந்தீவு குமுதினி படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நேற்று

06

## உயிருடன் இருப்பதாக போலி ஆவணம் தயாரித்த GS கைது



உயிரிழந்த பெண் ஒருவர் உயிருடன் இருப்பதாகப் போலி ஆவணம் தயாரித்து வழங்கியதாகக் கூறப்படும் கிராம சேவகர், ஒருவர் களுத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை, தேக்கவத்த கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடமையாற்றும் கிராம சேவகர் ஒருவரே

06

## பயணிகளை காப்பாற்றி விட்டு இ.போ.ச பஸ் சாரதி உயிரிழப்பு

லிந்துலை பொலிஸ் பிரிவில் சம்பவம்

தலவாக்கலை குறூப் நிருபர்



நுவரெலியாவிலிருந்து நாவலப்பிட்டிக்கு பயணிகளுடன் பயணித்த பஸ் சாரதி திடீரென உயிரிழந்துள்ளார். இலங்கை

06

# பொருளாதார,பௌத்த உறவுகள் மியன்மாருடன் மேம்படுத்தப்படும்

## பிரதமர் தினேஸ் மியன்மாருக்கு அழைப்பு



மியன்மார், இலங்கைக்கிடையில் வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் பௌத்த உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

மியான்மரின் பதில் தூதுவர் திருமதி லீ யி உடனான சந்திப்பு நேற்று (16) அலரி மாளிகையில் இடம்பெற்றது. இதன்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள், தேயிலை மற்றும் தென்னை வர்த்தகம், கனிமங்கள், பௌத்த சுற்றுலா போன்றவற்றுக்கு விசேட கவனம் செலுத்துவதன் மூலம் பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்த முடியும் என பிரதமர் சுட்டிக் காட்டினார்.

முன் பதப்படுத்தப்பட்டதென்னை உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்யும் இலங்கையின் அதிக தேவையை பூர்த்தி செய்ய, இலங்கையின் தென்னை உற்பத்தி போதுமானதாக இல்லை. இதனால், மியன்மார் இலங்கைக்கு தேங்காய்களை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு இருப்பதாக சுட்டிக்காட்டிய பிரதமர் , தேயிலைக்கு பதிலாக தென்னையை பண்டமாற்று செய்யமுடியும் எனவும் குறிப்பிட்டார்.

2600 ஆண்டுகளுக்குப் பின்னரும் புத்தரின் தத்துவம் இன்னும் பிரசித்தி பெற்று விளங்குவதாகவும், அது இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான நெருங்கிய மத மற்றும் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்த உதவியது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

குறிப்பாக தேரவாத பௌத்தத்தின் பாதுகாப்பிற்கு மியன்மாரிடமிருந்து கிடைத்த ஆதரவை நினைவுகூர்ந்த பிரதமர், நாட்டில் உபசம்பதாவை நிறுவுவதற்கு மியன்மார் வழங்கிய ஆதரவின் மூலம் கடந்த காலத்திலிருந்து இரு நாடுகளுக்கும் இடையே சமய ரீதியான நல்லுறவு இருந்ததையும் நினைவு கூர்ந்தார்.

மியன்மாரின் யாங்கூனில் நடைபெறவுள்ள வர்த்தக கண்காட்சியில், இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பின் சாத்தியங்கள் குறித்து ஆராய்வதற்காக இலங்கை பங்கேற்க முடியும் என பதில் தூதுவர் லீ யி வின் தெரிவித்தார். மியன்மாருக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு இவ்வருடம் 75 வருடங்கள் பூர்த்தியாவதாகவும் அவர் கூறினார். மியான்மார் 11 ஆம் நூற்றாண்டில் பதான் ராஜ வம்சத்தின் போது, தேரவாத பௌத்தம் நிறுவப்பட்ட 1000 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது என்றும் அவர் கூறினார்.

தினகரன்
THINAKARAN தினகரன்

# 92

## வருடங்களுக்கு முன் தினகரன்

### இன்று 17 மே 1932


விரித்த கத்தி
காலி கொள்ளை வழக்கு
விசாரணை
லக்ஷ்மணஞ் செட்டியார் வாக்குமூலம்
காலி, மே 14
காலி கொள்ளை வழக்கு விசாரணை போலீஸ் மாஜிஸ்ட்ரேட் முன்பாக இன் காலை ஆரம்பமானவுடன், பைத்தியகாரனுக்குரிய அறிகுறிகளைக் காட்டிய முதல் எதிரியை குணமெப்படி என்பதாக மாஜிஸ்ட்ரேட் கேட்டார். எதிரி பதிலொன்றுமளிக்காது கூரையை நோக்கிப் பித்தம் பிடித்தவனைப் போன்று பார்த்துக் கொண்டிருந்தான்.
கொள்ளையடிக்கப்பட்ட லக்ஷ்மணஞ் செட்டியார் முதல்முதலாவது வாக்கு மூலம் கொடுத்தனர். அப்போது அவர்

## விரித்த கத்தி

காலி கொள்ளை வழக்கு

### விசாரணை

லஷ்மணஞ் செட்டியார் வாக்குமூலம்

காலி கொள்ளை வழக்கு விசாரணை போலீஸ் மாஜிஸ்ட்ரேட் முன்பாக இன்று காலை ஆரம்பமானவுடன், பைத்தியகாரனுக்குரிய அறிகுறிகளைக் காட்டிய முதல் எதிரியை குணமெப்படி என்பதாக மாஜிஸ்ட்ரேட் கேட்டார். எதிரி பதிலொன்றுமளிக்காது கூரையை நோக்கிப் பித்தம் பிடித்தவனைப் போன்று பார்த்துக் கொண்டிருந்தான். கொள்ளையடிக்கப்பட்ட லஷ்மணஞ் செட்டியார் முதல்முதலாவது வாக்குமூலம் கொடுத்தனர்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

## எலுமிச்சம் பழத்தின் விலை 3,000 ரூபாவாக நேற்று அதிகரிப்பு

தம்புள்ளை உள்ளிட்ட பல பிரதேசங்களில் நேற்று முன்தினம் (15) ஒரு கிலோ எலுமிச்சம் பழத்தின் சில்லறை விலை 3,000 ரூபாவாக காணப்பட்டது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு ஊவா மாகாணத்திலிருந்து எலுமிச்சை விநியோகம் செய்யப்படுவதாகவும், போதியளவு எலுமிச்சை கிடைக்காததால் இந்த நாட்களில் எலுமிச்சையின் மொத்த மற்றும் சில்லறை விலைகள் அதிகரித்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

# சஜித் – அனுர விவாதத்தைப் பார்க்க நாட்டு மக்களுக்கு பொது விடுமுறை

## ஜனாதிபதியிடம் கோரப் போவதாக அமைச்சர் ஹரீன் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவும் நடத்தப் போகும் விவாதத்தை நாட்டு மக்கள் பார்க்கும் வகையில், அன்றைய தினத்தை பொது விடுமுறையாக அறிவிக்க வேண்டுமென அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரிவித்து அன்றைய தினத்தை பொது விடுமுறை தினமாக அறிவிக்குமாறு, அவரிடம் கோரப் போவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். வெறும் வாய்ச்சவாடலே தவிர விவாதத்தை நடத்துவதில் இரு தரப்பினரும் ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இவ்விரண்டு முக்கிய வேட்பாளர்களிடமும் நான் கோரிக்கையொன்றை முன்வைக்க விரும்புகின்றேன். அதுதான், தயவுசெய்து அந்த விவாதத்தை விரைவில் நடத்துங்கள். ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்து பொது விடுமுறையை அறிவித்து, இந்த விவாதத்தைப் பார்க்குமாறு நாட்டு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருவரதும் விவாதத்தில், நாட்டை அவர்கள் எப்படி கட்டியெழுப்ப போகிறார்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள முடியும்.

நாடு நெருக்கடிக்குள் இருந்தபோது சவால்களை ஏற்றுக் கொள்ளமுடியாதவர்கள், நாட்டை எவ்வாறு கட்டியெழுப்ப போகிறார்கள் என முதலில் பார்க்க வேண்டும். இவர்கள் இருவரும் இந்த விவாதத்தை நடத்த மாட்டார்கள் என்பதும் தெரிகிறது. வெறும் வாய்ச்சவாடலே இது என்றும் தெரிகிறது. ஒருவர் கடும் சிங்களத்தில் பேசுகிறார். மற்றவர் கடும் ஆங்கிலத்தில் பேசுகிறார். அவர்கள் பேசுவது அவர்களுக்கே புரிவதில்லை.

# அரச ஊழியருக்கு இவ்வருடம் சம்பள அதிகரிப்பு கிடையாது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்க ஊழியர்களுக்கு இந்த வருடத்தில் மீண்டும் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை அமைச்சரவையில் அறிவித்ததாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் இவ்வருடத்தில் மீண்டும் சம்பள அதிகரிப்புக்கு எவ்வித வாய்ப்புக்களும் இல்லை என்றும் அடுத்த வருடத்திலேயே அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கால்நடை அபிவிருத்தி சபை தொழிற்சங்கத்தினருடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தையையடுத்தே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:



இந்த வருடத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை மீண்டும் அதிகரித்தால், நாடு பொருளாதார ரீதியில் மீண்டும் பெரும் பாதிப்பை எதிர் நோக்க நேரும் .

அரசாங்க ஊழியர்களுக்கு இந்த வருடத்தில் பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது.

அந்த வகையில் மீண்டும் இந்த வருடத்திலன்றி அடுத்த வருடத்திலேயே அவர்களுக்கான சம்பள அதிகரிப்பு இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் மைத்திரிக்கு எதிராக முறைப்பாடு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயற்குழு உறுப்பினரான மொன்டேகு சரத்சந்ரவே இம் முறைப்பாட்டை தாக்கல் செய்துள்ளார். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அவர் தெரிவித்துள்ள விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விற்று பெற்றுக்கொண்ட முற்பணத்தில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் களுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நட்டஈட்டை செலுத்தியுள்ளார். இந்நிதி எவ்வாறு பெறப்பட்டது. இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கோடி ரூபா இழப்பீட்டை செலுத்துமாறு நீதிமன்றம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உத்தரவிட்டிருந்தது. அதற்கிணங்க, ஒன்றரை கோடி ரூபாவை அவர் செலுத்தியுள்ள நிலையில், எஞ்சிய பணத்தை செலுத்த தம்மிடம் வசதி இல்லை என்றும் பகுதி, பகுதியாக செலுத்த பத்து வருடங்கள் கால அவகாசம் தருமாறும் மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய பின்னணியில் கடந்த (13) 28 மில்லியன் ரூபா நிதி அவரால் செலுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளி வருகின்றன. எஞ்சிய பணத்தை செலுத்த 10 வருடங்கள் கால அவகாசம் கோரியிருந்த நிலையில் திடீரென அந்த பணத்தை அவர் செலுத்தியுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வகையில் அந்தப் பணம் ஈட்டப்பட்ட விதம் தொடர்பில் ஆராயுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயற்குழு உறுப்பினர் மொன்டேகு சரச்சந்திர, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# நுண், சிறு, நடுத்தர தொழில் முனைவோர் மன்றத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் கருத்தை யதார்த்தமாக்க, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தொழில் முனைவோர் மன்றத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல், உள்ளூர் வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல் உள்ளிட்ட நோக்கங்களை மேம்படுத்த இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

புதிய தொழில் முயற்சிகளில் இது தனித்துவ வாய்ப்பாக அமைந்துள்ளதாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் டொக்டர் சாரங்க அழகப்பெரும தெரிவித்தார்.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சார்பில் தலைவர் டொக்டர் சாரங்க அழகப்பெருமவும், நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி மன்றம் சார்பில் தலைவர் திருமதி சசிகா டி சில்வாவும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாக, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் தொழில் முயற்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்கவும் அவர்களை ஊக்குவிக்கவும் ஆதரவளிக்கவும் நடவடிக்கை எடுக்கும்.




கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரனவின் வழிகாட்டுதலின் கீழ், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் உள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்வதில் சபையின் மாவட்ட அலுவலகங்கள் மூலம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

மேலும், தொழில்முனைவோரின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு சிலோன் பிளாசா என்ற நல்ல மேடையை ஏற்கனவே பெற்றுக் கொடுத்துள்ளது.

இதன் மூலம் தொழில்முனைவோர் அனைவரும் இலவசமாக சேவையைப் பெற முடியும். இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வில், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.எஸ். மகேந்திர பெரேரா, எஸ்.என். ராகவன், தேசிய அமைப்பாளர் அஜித்குமார், பொருளாளர் ஷெஹான் விஜேசிங்க, செயலாளர் நந்தலால், நிறுவனர் சுரான் வீரரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண பேரவை புதிய செயலாளராக நியமனம்

(கிண்ணியா தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாண பேரவை செயலகத்தின் புதிய செயலாளராக, இலங்கை திட்டமிடல் சேவையைச் சேர்ந்த ஏ.எஸ்.எம்.பாயிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் விசேட நியமனத்தின் அடிப்படையில், கிழக்கு மாகாண முதலமைச்சில் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய மூதூரைச் சேர்ந்த ஏ.எஸ். எம். பாயிஸ் கிழக்கு மாகாண பேரவை செயலகத்தின் புதிய செயலாளராக புதன்கிழமை (15) நியமிக்கப்பட்டார். அதேவேளை, பேரவை செயலகத்தின் செயலாளர் கடமையையும்



இவர், பொறுப்பேற்றுக்கொண்டார். இவர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் திட்டமிடல் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண சுற்றுலாத் துறை பணியகத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# தியத்தலாவை Fox Hill விபத்து; காயமுற்ற மாணவியும் மரணம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தியத்தலாவை பொக்ஸ் ஹில் கார் ஓட்டப் பந்தயத் திடல் விபத்தில், காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மாணவியும் நேற்று உயிரிழந்தார். இவ்விபத்து,கடந்த மாதம் (21) இடம்பெற்றிருந்தது.விபத்து இடம்பெற்று 24 நாட்களுக்குப் பின்னர் இச்சிறுமி உயிரிழந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

தியத்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல் எதண்ட பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய இம்மாணவி பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி இம்மாணவி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.பொக்ஸ் ஹில் கார் ஓட்டப் பந்தய விபத்தில் ஏற்கனவே ஏழு பேர் உயிரிழந்தனர். எட்டாவது நபராக இம்மாணவி உயிரிழந்துள்ளார்.

# நுவரெலியா ,சீத்தாஎலிய
# ஸ்ரீ சீதையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்
## 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை



### தலைவரின் வாழ்த்துச் செய்தி

வரலாற்று சிறப்புமிக்க சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்விற்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் பெரிதும் மனமகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஆலயத்தின் நான்காவது கும்பாபிஷேகத்தை எனது தலைமையில் நடாத்துவதற்கு எனக்கு கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை ஒரு பாக்கியமாகவும் கருதுகின்றேன்.ஆலயத்தின் வளர்ச்சி பல சவால்களை கடந்து வந்தது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.அந்த சவால்களை வெற்றி கொள்வதற்கு எனக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வருகின்றஆயுள் காப்பாளர்கள் காப்பாளர்கள் நிர்வாக சபை உறுப்பினர்கள் இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் இருக்கின்ற பக்தர்கள் வர்த்தகர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அந்நேரத்தில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆலயத்திற்கு எதிராக சில விசமிகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை முறையடித்து இந்த ஆலயத்தை பாதுகாப்பதற்கு முழுமையான பங்களிப்பை செய்த அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் உட்பட அரசியல் பிரமுகர்களையும் அரச அதிகாரிகளையும்,மற்றும் ஆலயத்தின் நீண்ட கால உறுப்பினரும், ஆயுட் காப்பாளருமாகிய வீ.ஆதிமூலம் உள்ளிட்ட குழுவினரையும் நன்றி உணர்வுடன் மீட்டிப்பார்க்கின்றேன்.

தொடர்ந்தும் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதோடு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தருகின்ற அனைவரையும் எங்களுடைய நிர்வாக சபையின் சார்பில் வருக வருக என வரவேற்கின்றேன்.

டாக்டர்.வேலுசாமி இராதாகிருஷ்ணன் (பா.உ)
தலைவர்,
நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன்
சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயம்.



ஆலய நிர்வாக சபையினர்

இடமிருந்து வலம்
கரு.சுப்ரமணியம் (காப்பாளர்), எம்.செல்லையா (காப்பாளர்), எஸ்.கணேசன் (ஆயுட்காப்பாளர்), இரா.பாலகிருஷ்ணன் (காப்பாளர்),ஏ.சந்திரன் (காப்பாளர்),வீ.ஆதிமூலம் (ஆயுட்காப்பாளர்) ,கௌரவ தலைவர் கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் (பாராளுமன்ற உறுப்பினர்), பூ.லிங்கராஜா (செயலாளர்) ,எஸ்.பாதசிவம் (பொருளாளர்) ,என்.பாலகிருஷ்ணன் (உபதலைவர்), என்.புவனேஸ்வரன் (உபதலைவர்) ,எம்.பெரியசாமி (உபசெயலாளர்) ,ஆர்.குணசேகரன் (உபபொருளாளர்)
பின்வரிசை
என்.யோகேஷன் , எம்.கருணாநிதி, ஆர்.ரங்கராஜ், எஸ்.நித்தியானந்தன், வீ.பிரதீப் ,டி.விஜயராஜ், எம்.ஜெயராம், ஆர்.சிவாநந்தன் , வி.சிவகுமார், பி.இளங்கோவன்,எஸ்.சிவகவி, எஸ்.பத்மநாதன்,ஆர்.பாலகிருஷ்ணன்,டி.ராஜேந்திரன், எம்.விஸ்வநாதன், என்.கண்ணன் , ஜே.குமரேஷ், கே.நெடுமாறன்


**சிவனடியார் சாமி கங்காதரன்**
கங்காதீஸ்வரர் யாக பீடம்
145/ 1 காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06

நாட்டுக்கோட்டை நகரத்தார்
**புதிய கதிரேசன் கோவில்**
339 காலி வீதி, கொழும்பு - 4 மற்றும்
251 செட்டியார் தெரு, கொழும்பு- 11

**Mitta**
Book Shop
No 13E, Frist Floor,
Parkwood Complex,
Park Road, Nuwara Eliya
052-2223935
LICENCED PAWN BROKERS
Reg No.. CP/PB/NE/ 41
No 09,Central Market,
Nuwara Eliya,
052-2234697
077 9230703

**Rupika Traders**
2G. St. Andrew's Drive,
Nuwara Eliya
052-2223506
071-4020041

**லலிதா ஜுவலரி**
இல 14.புதிய கடை வீதி,
நுவரெலியா
052- 2235006

**New Jeyashankar Traders**
No 295,Court Lodge junction,
Kandapola
052-5625093,072-9060013,
076- 4253513, 076-3552593

**கவிதாஸ்**
லோசன் வீதி, நுவரெலியா
052-2222419

**S.Y.G TRADERS**
107, NEW ROAD,
KANDAPOLA
076-4799995

**SHAGAR AGRI CARE**
No 2/F, ST. ANDREW' S DRIVE.
NUWARAELIYA

சம்மாங்கோடு
**ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்**
141.முதலாம் குறுக்குத்தெரு
கொழும்பு -11

**காயாஸ் உணவகம்**
இல 41.லோசன் வீதி , நுவரெலியா

**TVK ENTERPRIZE**
No 14.Main Street,
Kandapola, 077-3407881

**Rajan Trader**
(licensed Pawn Brokers & Upcountry Tea)
No 51, Kandy Road,
Nuwara Eliya
052-2222096,071-5970318
077-3399296

**S.P.ARCK ELECTRICAL (PVT)LTD**
No 119,Bandaranayake Mawatha,
Colombo -12
011-2322419,011-23222587,
011-2322419 ,077-3791658,
071-8526688
sp.arckelc @gmail.com progashperumal 1980@ gmail.com

**AERO LANKA ENTERPRISES**
No 323,2/9 Old Moor Street,
Colombo -12
011-2439233.011 5635893
011-2439233 07777 45195

**SELVAS PHARMACY**
No 12, Main Street, Nuwara Eliya
052-2223350 077-9699490
selvasne@gamil,com

**Kavitha Jewellery & Pawn Brokers**
No 81, Ragala Bazaar, Halgranoya.
052-2265457,072-6655554.
070-775554
Branch ; Kavithas Textiles, No 79, Ragala Bazzar, Halgranoya

**IONA TRADERS**
No 2/B, ST. ANDREW'S DRIVE.
NUWARA ELIYA
C22, C24 DEDICATE ECONOMIC
CENTRE, NUWARAELIYA
052 -2222923,2223096

**Vijaya's**
No 10, New Bazaar Street,
Nuwara Eliya
052 -2222460
E-mail vijayas052-2222460@ gmail.com

**அருணா ஜுவலரி**
இலக்கம் 22, புதிய கடை வீதி, நுவரெலியா.
052-2222165 ,0774440975

**UTC & SONS**
No 251 A, UDAPUSSELLWA ROAD,
NUWARA ELIYA
052- 2220104

**கங்கா கொமினிகேசன்**
நாதன் கொம்பிளெக்ஸ் ,நுவரெலியா

**SATHIYAS PAWN BROKERS**
NO 50, NEW BAZAAR STREET,
NUWARA ELIYA,0522222687

**KAYA TRADERS**
No 06,25, Udapussellawa
Road, Kandapola
052-2229770,072-9033330

SINCE 1958
**NEW SIVA TRADERS**
C16,17 DEDICATED ECONOMICS
CENTRE, NUWARA ELIYA

**கிருஸ்ணசுவாமி விவேகானந்தன்**
(சட்டத்தரணி)
நுவரெலியா

**NUWARAELIYA MOTOR ENTERPRISE**
NO 30, Kandy Road,
Nuwara Eliya
052-2223099

**வாழும் கலை அமைப்புக்குழு**
நுவரெலியா

நிகழ்வு சிறப்புற வாழ்த்துகின்றோம்
**இந்து கலாசார பேரவை**
நுவரெலியா

**இந்திரா ஸ்டோர்ஸ்**
சுப்ரமணியம் சேனாதிராஜா
பிரதான வீதி, கந்தபளை
052- 2229659

**Keerthana Traders**
Main Street,Kandapola
0777- 165500

**New R.S.Traders**
Udapusellawa Road,
Main Street, Kandapola
0777-165500


பங்களிப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி... எஸ்.தியாகு (ஊடகவியலாளர் )

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 04ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 08

**குறள் தரும் சிந்தனை**



என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்

*அறம் எதுவென அறிந்தும் அதனைக் கடைப்பிடிக்காதவரை, அவரது மனச்சாட்சியே வாட்டி வதைக்கும். அது வெயிலின் வெம்மை புழுவை வாட்டுவதுபோல இருக்கும்.*

# மறுமலர்ச்சியை இலக்காக கொண்ட கல்வி மறுசீரமைப்பு

தனிநபரினதும் சமூகத்தினதும் மாத்திரமல்லாமல் நாட்டினதும் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் கல்வி இன்றியமையாததாகும். கல்வியின் ஊடாகவே முன்னேற்றங்களை அடைந்து கொள்ள முடியும். கல்வி இன்றி முன்னேற்றத்தை எட்டிக்கூடப் பார்க்க முடியாது என்பதுதான் அறிஞர்களின் கருத்தாகும்.

அந்த வகையில் சுதந்திரத்திற்கு முன்பே கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட இலங்கை எட்டு, ஒன்பது தசாப்தங்களாக இலவசக் கல்விக் கொள்கையை முன்னெடுத்து வருகின்றது. இதன் நிமித்தம் வருடா வருடம் வரவு செலவுத்திட்டத்தின் ஊடாகக் கோடானு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்து செலவிடுகின்றது. இக்கல்விக் கொள்கையை வெற்றிகரமாக முன்னெடுக்கவென விசாலமான உட்கட்டமைப்பு வசதிகளையும் பௌதிக வளங்களையும் ஆளணியையும் இந்நாடு கொண்டுள்ளது.

இதன் பயனாக இந்நாட்டில் 92 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் எழுத்தறிவைப் பெற்றுக் கொண்டவர்களாக உள்ளனர். ஆன போதிலும் வளர்ச்சி அடைந்த நாடுகளின் மட்டத்தில் எழுத்தறிவு மட்டம் காணப்பட்டும் கூட கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் இந்நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானதோடு நாடும் மக்களும் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் முகம்கொடுத்தார்கள்.

இப்பின்புலத்தில் இந்நாட்டின் கல்வியை வினைதிறனாக்க வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. அதற்கான வலியுறுத்தல்களும் அதிகரித்துள்ளன. ஏனெனில் கடந்த காலங்களில் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெற்று வெளியாகின்றவர்களில் குறிப்பிடத்தக்களவிலானோர் தொழிலை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டிய நிலைக்கு உள்ளானவர்களாக இருந்து வந்தனர். அவர்களுக்கு அரசாங்கமே தொழில் வாய்ப்பை வழங்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

அதன் காரணத்தினால் இந்நாட்டின் கல்விக் கொள்கையை நவீன உலகிற்கு ஏற்ப மறுசீரமைப்பதன் அவசியம் அடிக்கடி வலியுறுத்தப்பட்டது. அவ்வாறான மறுசீரமைப்பின் ஊடாக பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியாகின்றவர்கள் தொழிலுக்காக காத்திருக்க வேண்டிய தேவை ஏற்படாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தச் சூழலில் தான் கல்வியின் ஊடாக நாட்டில் துரித மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தபட்டிருக்கின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு கல்விக் கொள்கையில் திருத்தங்களை மேற்கொண்டு நவீன யுகத்திற்கு ஏற்ற விதத்தில் கல்வி முறைமையை மாற்றியமைக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இந்நாட்டின் இளம் பராயத்தினர் அனைவருக்கும் கல்வி பொதுத்தராதர உயர்தரம் வரையும் கல்வியை பெற்றுக் கொடுப்பத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப இவ்வருடம் முதல் கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுற்றதும் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்களை உடனடியாக ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்து இருக்கிறது. இதற்கேற்ப ஜுன் மாதம் 04 ஆம் திகதி முதல் இம்முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதியுள்ள மாணவர்களுக்கு உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இதன் நிமித்தம் நேற்றுமுன்தினம் விஷேட சுற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ள கல்வி அமைச்சு அந்த சுற்றறிக்கையை மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இத்திட்டத்தை இந்நாட்டின் புத்திஜீவிகளும் கல்விமான்களும் மாத்திரமல்லாமல் மாணவர்களும் பெற்றோரும் பெரிதும் வரவேற்றுள்ளனர். இந்நடவடிக்கையின் ஊடாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிய பின்னர் உயர் தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் வரையில் மாணவர்களின் நேர காலம் வீண்விரயமாவது தவிர்க்கப்படுகிறது.

முன்பெல்லாம் க.பொ.த சாதாண தர பொதுப்பரீட்சை எழுதி பெறுபேறு வெளிவந்த பின்னர் பெறுபேறுகளின் அடிப்படையில் தான் உயர் தர வகுப்புகளுக்கு மாணவர்கள் உள்வாங்கப்படுவர். இதனால் பெறுபேறு வெளிவரும் வரையும் சில மாணவர்கள் தொழில்களுக்கு செல்லக்கூடியவர்களாக விளங்கினர். இவர்களில் பலர் இடைநடுவில் கல்வியை கைவிட்டு விடக்கூடியவர்களாக இருந்தனர். இன்னும் ஒரு தொகுதி மாணவர்கள் பெறுபேறு வெளியாகும் வரை கல்வியுடன் எவ்வித தொடர்பும் அற்றவர்களாக இருந்து வந்தனர்.

இவ்வாறான மாணவர்களில் பெரும்பாலானவர்கள் பொதுப் பரீட்சை பெறுபேறு வெளியான போதிலும் உயர் தரக்கல்வியைத் தொடர விரும்பாதவர்களாக இருந்ததும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் மாணவர்களின் நலன் கருதி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுற்றதும் உயர்தரக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதன் முக்கியத்துவம் கல்விமான்களால் அடிக்கடி எடுத்துக் கூறப்பட்டு மாணவர்கள் இடைநடுவில் கல்வியைக் கைவிடுவதை குறைத்துக்கொள்ளலாம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இப்பின்னணியில் மாணவர்களது நலன்களை முன்னிலைப்படுத்தி சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவர முன்னர் உயர்தரக் கல்வியைத் தொடர மாணவர்களுக்கு வாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படுகிறது. நாட்டில் எல்லா மாணவர்களுக்கும் உயர்தரம் வரை கல்வியைப் பெற்றுக்கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன் ஊடாக மாணவர்கள் மாத்திரமல்லாமல் நாடும் கூட நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும். இதனை உறுதிபடக்கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டில் புதிய சட்ட முறைமையுடன் கூடிய அரசியல் கலாசாரமொன்று உருவாக்கப்படும்

## தெல்தெனிய புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதி திறப்புவிழாவில் ஜனாதிபதி உரை





கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 75 புதிய சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதாகவும், தெற்காசியாவில் புதிய சட்டங்களைச் செயற்படுத்தும் நாடாக இலங்கை மாறியுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கம் திருடர்களைப் பாதுகாக்கின்றதென்று சிலர் குற்றம் சுமத்தினாலும், தற்போதைய அரசாங்கம் திருடர்களைப் பிடிப்பதற்காக சட்டங்களை கொண்டு வந்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஊழல் ஒழிப்பை அரசியல் கோஷமாகக் பயன்படுத்தும் யுகம் முடிவுக்கு வரும் எனவும் தெரிவித்தார்.

தெல்தெனிய புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நேற்றுமுன்தினம் (15) காலை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கத்தின் காரணமாக தெல்தெனிய நகரிலிருந்த பழைய தெல்தெனிய நீதவான் நீதிமன்றம் நீரில் மூழ்கியது. அடுத்து தெல்தெனிய கரலியத்த புதிய நகர நிர்மாணத்தின் போது தெல்தெனிய நீதிமன்றக் கட்டடம் உடைத்து அகற்றப்பட்டது. இந்த இடத்தில் நீதி அமைச்சினால் இந்த புதிய நீதிமன்ற வளாகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாடிக் கட்டடம் கொண்ட தெல்தெனிய நீதிமன்ற வளாகத்தில், நீதவான் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய வசதிகள் உள்ளன.தெல்தெனிய, ரங்கல, உடுதும்பர, பல்லேகல, மெனிக்ஹின்ன, வத்தேகம மற்றும் பன்வில ஆகிய பொலிஸ் பிரிவுகளின் வழக்குகள் இங்கு விசாரிக்கப்படும்.

தெல்தெனிய நகரிலுள்ள தெல்தெனிய கூட்டுறவு காணியில் உள்ள கட்டடத் தொகுதியில் தெல்தெனிய நீதிமன்றம் தற்காலிகமாக இயங்கி வந்த நிலையில், அந்த இடத்தில் வசதிகள் இன்மையால் வழக்கு விசாரணைக்கு வந்த பொதுமக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்த நிலையில், இந்தப் புதிய கட்டடத் தொகுதி திறந்துவைக்கப்பட்டுள்ளது. நினைவுப் படிகத்தைத் திரைநீக்கம் செய்து, புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதியை திறந்து வைத்த ஜனாதிபதி, கண்காணிப்பு விஜயத்தையும் மேற்கொண்டார்.

தெல்தெனிய சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நினைவுப் பரிசொன்றை வழங்கியது. சட்டத்தரணிகளுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாவது:



"ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, சட்டத்துறையில் பல புதிய சீர்திருத்தங்களைச் செய்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் 75 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சில பாராளுமன்றங்கள் 04 அல்லது 05 வருடங்கள் செயற்பட்ட போதிலும் இந்த அளவு சட்டங்களை நிறைவேற்றியதில்லை.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தை கையிலெடுத்துக் கொண்டு சொத்துக்களை அழித்தால் அங்கே சட்டமே இருக்காது. ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை சட்டத்தின் ஆட்சியிலேயே தங்கியிருக்கிறது. நீதி நிலைநாட்டப்படும் போது மாத்திரமே நாடு என்ற வகையில் அங்கீகாரம் கிடைக்கும். இல்லாவிட்டால் நாட்டில் அபிவிருத்தி இருக்காது. முதலீடுகளை எதிர்பார்க்கவும் முடியாது. அதனால் புதிய சட்டக் கட்டமைப்பை நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறோம்.

மேலும், நாட்டில் தற்போது புதிய பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். அதற்காக பல சட்டங்களை கொண்டுவர சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக மத்திய வங்கிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, மத்திய வங்கி சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டத்தை சமர்ப்பித்துள்ளோம். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு மின்சார சபையின் நஷ்டமும் ஒரு காரணமாகும். வலுவான மின்சார சபையை செயற்படுத்த வேண்டும்.

மேலும் மூன்று சட்ட மூலங்களை அரசாங்கம் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளது. திங்கட்கிழமை அமைச்சரவையில் அதற்கான அங்கீகாரம் பெறப்படும். அதன் கீழ் கடன் முகாமைத்துவத்தையும் நாம் முன்னெடுத்திருக்கிறோம்.

இறக்குமதிப் பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நாம் மாற

## ஊழலை ஒழிக்க பல புரட்சிகர நகர்வுகள்

வேண்டும். அதற்கான பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும். அதன்படி சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

மேலும் நமது நாட்டில் ஊழல் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. சர்வதேச நாணய நிதியமும் எமக்கு கடன் வழங்கிய நாடுகளும் எம்முடன் இது தொடர்பில் கலந்துரையாடின. அதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்வைத்தோம். அதில் திருத்தங்கள் சேர்க்கப்பட்டு, இணக்கப்பாடு எட்டப்பட்டதையடுத்து, தற்போது புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. அதற்காக 04 முக்கிய சட்டங்கள் உள்ளன. அதில் முதலாவதாக 21 ஆவது திருத்தத்தை முன்வைத்தோம்.

அடுத்தது அரச நிர்வாக விசாரணை அறிக்கை. அந்த பொறிமுறையைத் தயாரிக்கும் நிபுணத்துவம் எமக்கு இருக்கவில்லை. எனினும், சர்வதேச நாணய நிதிடம் அந்த வளம் இருந்தது. இதுகுறித்த அறிக்கையைத் தயாரித்துத் தருமாறு கோரினோம். அதனை மீண்டும் ஆராய்ந்து, திருத்தங்களைச் செய்து, அரச நிர்வாக விசாரணை அறிக்கையை அரசாங்கம் தயாரித்துள்ளது.

மேலும், முறைகேடாக பெறப்பட்ட சொத்துக்கான சட்ட மூலம் தயாரிப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறன. அரசாங்கம் திருடர்களைப் பாதுகாப்பதாக சிலர் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் திருடர்களை பாதுகாக்க வந்ததாக இந்த அரசாங்கம் மீது குற்றஞ்சுமத்தினாலும், திருடர்களைப் பிடிக்க இந்த அரசாங்கமே சட்டம் கொண்டு வந்துள்ளது"

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ உரையாற்றுகையில், "தெல்தெனிய பிரதேச மக்களுக்கு இன்றைய தினம் வரலாற்று சிறப்புமிக்க நாளாகும். 2015ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பகுதிக்கு புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதியை வழங்க முயற்சித்தார். இந்த இடத்தில் இருந்த பழைய கட்டடத்துக்குப் பதிலாக புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதியை இன்று காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதித்துறையின் முன்னேற்றத்திற்காக செய்ய வேண்டிய அனைத்தையும் செய்துள்ளார். ஒரு நாட்டுக்கு நீதித்துறை மிகவும் முக்கியமானது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மக்கள் தவிக்கும் நேரத்தில், இந்த நாட்டைப் பொறுப்பேற்க யாரும் இருக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொண்டார். தற்போதைய அரசாங்கம் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றியது" என்றார்.

நீதி, சிறைச்சாலைகள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அனுராதா ஜயரத்னவும் உரையாற்றினார்.

மகாசங்கத்தினர் உட்பட சர்வமதத் தலைவர்கள், இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பாராளுமன்ற உறுப்பினர் உதயன கிரிந்திகொட, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் என்.எம். ரணசிங்க, மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு. கமகே, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், தெல்தெனிய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சுனில் அமரதுங்க, மேல்நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# நுவரெலியா, கொழும்பு, திருமலைக்கு விஜயம் செய்யும் ஸ்ரீ ரவிசங்கர் குருஜி

வரலாற்றுச் சிறப்பு மிக்க நுவரெலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவில் எதிர்வரும் 19ஆம் திகதி மனிதநேயத் தலைவர், ஆன்மீககுரு, அமைதித் தூதுவர் மற்றும் வாழும் கலை பயிற்சியின் நிறுவுனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்கள் கலந்து கொள்கின்றார். நாளை சனிக்கிழமை அவர் இந்தியாவிலிருந்து வருகை தரவுள்ளதாக நுவரெலியா சீதைம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். குருஜியுடன் நூற்றுக்கும் அதிகமான பக்தர்களும் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி மற்றும் 12 பேர் கொண்ட விசேட குழுவினரை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் உள்ளடங்கலான குழுவினர் வரவேற்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை இந்தியாவின் பெங்களூர் விமான நிலையத்தில் இருந்து தனிவிமானம் மூலம் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களுடன் 154 பேர், இலங்கையின சீதாஎலிய கும்பாபிஷேகப் பெருவிழாவிற்காக நாளை வருகை தரவுள்ளார்கள். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்திக்கும் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி தலைமையிலான குழுவினர், மதிய போசனத்தைத் தொடர்ந்து, தரை மார்க்கம் ஊடாக நுவரேலியாவை சென்றடைவார்கள்.

சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவில் 19ஆம் திகதி கலந்து கொள்ளும் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்கள், நுவரேலியாவில் தனிப்பட்ட ரீதியாக தனது பக்தர்களை சந்திப்பார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெறும் 'மலையகம் 200' நிகழ்வில், மலையக மக்களை அங்கீகரிக்கும் வகையில் வெளியிடப்படும் அஞ்சல் முத்திரையின் முதல்



பிரதியை ரவிசங்கர் குருஜி அவர்கள் பெற்றுக் கொள்ளவுள்ளார். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் சில தனிப்பட்ட நிகழ்வுகளிலும் குருஜி கலந்து கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை செந்தில் தொண்டமானின் அழைப்பை ஏற்று, வான் மார்க்கமாக திருகோணமலை செல்லும் ரவிசங்கர் குருஜி, திருக்கோணேஸ்வர ஆலயத்தில் இடம்பெறும் சிறப்பு பூஜை வழிபாடுகளில் பங்கேற்பார்.

அதனைத் தொடர்ந்து போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ பெண்களை சந்திக்கும் குருஜி, ஆன்மீக சொற்பொழிவு ஊடாக அவர்களை ஆற்றுப்படுத்துவார். தொடர்ந்து கிழக்கு மாகாண ஆளுனர் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்தைத் தொடர்ந்து, திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் பக்தர்களை சந்திக்கும் குருஜி, ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு திரும்பி, தனிவிமானம் ஊடாக இந்தியா சென்றடைவார்.

**உமாச்சந்திரா பிரகாஷ்...**

# இன, மத பேதங்கள் கடந்த மாணவர் புத்துணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா யுனைட்ஸ் செயற்பாட்டு நிலையங்களைச் சேர்ந்த மூவின மாணவர்கள் இன, மத, மொழி மற்றும் கலாசார வேறுபாடுகளுக்கு அப்பால் இணைந்து புத்துணர்வு நிகழ்வொன்றினை திருகோணமலை மாவட்டத்தில் நடத்தினர்.

உகன, கல்முனை, நாவிதன்வெளி, கல்லடி, வாழைச்சேனை போன்ற பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றிணைந்து இனநல்லுறவை கட்டியெழுப்பும் வகையிலும், பரஸ்பர ஒற்றுமையை வலுவூட்டும் வகையிலும் கல்விச் சுற்றுலா ஒன்றின் மூலம் சேருவில ரஜமஹா விகாரை, கிண்ணியா வெந்நீர் ஊற்று, திருக்கோணேஸ்வரம் கோயில் மற்றும் உள்ளூர் பொழுதுபோக்கு இடங்களுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.





இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்கள் இணைந்த குழு செயற்பாடுகளை உருவாக்குதல், குழந்தைகள் தலைமையிலான திட்டங்களை செயற்படுத்துதல், தலைமைத்துவம் மற்றும் தகவல் அமர்வு மூலம் இனஒற்றுமை, சமாதானம், நல்லிணக்கம் பற்றிய அமர்வுகள் அங்கு இடம் பெற்றன.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

# கோப்பாயில் அம்மாச்சி பாரம்பரிய உணவகம் திறந்துவைப்பு




யாழ். கோப்பாய் பிரதேசத்தில் அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் நேற்று வியாழக்கிழமை திறந்து வைத்துள்ளார்.

நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் நோக்குடன் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் அம்மாச்சி பாரம்பரிய உணவகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்போது வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 12 தையல் இயந்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன. பெண்களுக்கான பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்த அம்மாச்சி பாரம்பரிய உணவகம் கைகொடுக்குமெனவும் பெண்களுக்கு பொருளாதார விடுதலை கிடைக்கும் போது அது குடும்பம், சமூகத்துக்கு கிடைக்கும் விடுதலையாக அமையுமெனவும், வடமாகாண ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய வடமாகாண ஆளுநர்,

"கிராமிய அபிவிருத்திக்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆளுமை பெற்றவையாக காணப்பட வேண்டும். உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது ஆளுமைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும். தற்போது முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகள் மகிழ்ச்சி அளிக்கின்றது.

பெண்களை வலுப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பெண்கள் பொருளாதாரத்தில் சுதந்திரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். தங்களை தாங்களே வலுப்படுத்திக்கொள்ள வேண்டும். இதனூடாக பெண்கள் தங்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு தாங்களே தீர்வை பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்களென்ற நம்பிக்கை உள்ளது" என்றார்.

# கதிர்காம பாத யாத்திரை குழுவினருக்கு உதவி



**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம், வடமராட்சி தொண்டைமானாறு செல்வ சந்நிதி கோயிலிலிருந்து கதிர்காமக் கந்தன் கோயிலுக்கு பாத யாத்திரை செல்லும் பாத யாத்திரைக் குழுவினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தினர் உதவி அளித்துள்ளனர்.

தருமபுரம், நெத்தலியாறு பிரதேசத்தில் அமைந்துள்ள பிள்ளையார் கோயிலில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான சந்நிதியான் ஆச்சிரமத்தினர் உதவி அளித்துள்ளனர்.

இதன்போது கதிர்காம பாத யாத்திரைக் குழுவினருக்கு சத்துணவு பொதிகள், ஜீவாகரம், பழ வகைகள் உள்ளிட்டவற்றை சந்நிதியான் ஆச்சிரமத்தினர் வழங்கி வைத்துள்ளனர்.

# நுவரெலியாவில் அடை மழை

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று மதியம் அடை மழை பெய்யத் தொடங்கியதாகவும் குறிப்பாக நுவரெலியா, நானுஓயா, லிந்துலை, தலவாக்கலை, கொட்டகலை, ஹட்டன், வட்டவளை, கினிகத்தேனை, தியகல, நோட்டன், மஸ்கெலியா, சாமிமலை, நல்லதண்ணி ஆகிய இடங்களில் அடை மழையுடன் கடும் பனி மூட்டம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடை மழையால் வெள்ளம் பாயத் தொடங்கியுள்ளதாகவும் அங்கிருக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை எட்டியுள்ளது. காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அந்நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் சற்று உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மஸ்கெலியாவிலுள்ள அனைத்து நீர் ஓடைகள் மற்றும் அருவிகள், ஆறுகளில் வெள்ளம் நிரம்பியுள்ளது.

### தேயிலை செடிகளை அழித்து

# கோப்பி கன்றுகள் பயிரிடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்




**தலவாக்கலை குறூப் நிருபர்**

உடரதல்ல தோட்டத்தில் காணப்படும் தேயிலை செடிகளை அழித்து அவ்விடத்தில் கோப்பி கன்றுகளை நடுவதற்கு அத்தோட்ட நிர்வாகத்தினர் முன்னேற்பாடுகள் செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து உடரதல்ல தோட்டத் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உடரதல்ல தோட்டத்திலிருந்து ஊர்வலமாக பதாகைகளை தாங்கியும் கோஷங்களை எழுப்பியும் அணிதிரண்டவாறு நானுஓயா நகருக்கு ஊர்வலமாக சென்ற உடரதல்ல தோட்ட தொழிலாளர்கள், அதன் பின்னர் நுவரெலியா பிரதான வீதியோரமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோப்பி கன்றுகளை பயிரிடுவது தொடர்பில் தோட்ட அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்த ஆண் தொழிலாளர்கள் மூவருக்கு எதிராக அத்தோட்ட அதிகாரி, நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன், அவர்களுக்கு வேலைநிறுத்தமும் செய்யப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# குருக்களின் தங்க சங்கிலி திருட்டு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ். சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பிரதேசத்தில் கோயில் குருக்கள் ஒருவரின் இரண்டு பவுண் தங்கச் சங்கிலி நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் திருட்டுப் போயுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

சாதகம் எழுத வேண்டுமெனக் கூறி குருக்களுடைய வீட்டுக்குச் சென்ற இருவர், அவரை நெருங்கி அவரது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# மேல் மாடியிலிருந்து விழுந்து பெண் மரணம்

**அக்குறணை குறூப் நிருபர்**

கம்பளை நாரம்விட்ட, பிஹில்லதெனிய பிரதேசத்தில் உலரவிட்ட துணிகளை எடுக்க மேல் மாடிக்குச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் தவறி கீழே விழுந்து உயிரிழந்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. 35 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

### கல்முனை உப பிரதேச சபை விவகாரம்

# பிரச்சினை உக்கிரமடைவதற்கு சுமந்திரன் எம்.பியே காரணம்



### சபையில் ஹரீஸ் எம்பி குற்றச்சாட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்ச்சைக்குள்ளாகியுள்ள கல்முனை வடக்கு உப பிரதேச செயலக பிரச்சினைக்கு சுமந்திரன் எம்.பி.தான் முக்கிய காரணம் என்றும் அவர், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கே பிரச்சினை உக்கிரமடையக் காரணம் என எச். எம்.எம். ஹரீஸ் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பலஸ்தீனத்தின் தற்போதைய நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தமிழர்களுக்கு எதிரானவர் என்ற கருத்தை கடந்த பாராளுமன்ற அமர்வில் உரையாற்றிய யாழ். மாவட்ட எம்.பியான கஜேந்திரன், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு எதிராக அவர் செயற்படுவதாகவும் சபையில் குற்றஞ்சாட்டினார்.

அதனை தாம் முற்று முழுதாக நிராகரிப்பதாக தெரிவித்த அவர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தமிழ், முஸ்லிம், சிங்களவர் என்ற பேதமின்றி செயற்படும் ஒருவர் என்றும் அவர் சிறந்த சேவையை வழங்கி வருகின்றார்.

# அநுராதபுரம் மாவட்டத்தில் 'டினியா' தோல் நோய் பரவல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டம் முழுவதும் தற்போது 'டினியா' எனப்படும் தோல் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நோய் தொடர்பில் கவனக்குறைவாக சிகிச்சை அளிக்கப்படாமல் இருந்தால் அது நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும்.







## பெறுகை அறிவித்தல்

### ஊடக அமைப்பு

### இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

தலைவர், பெறுகைக் குழு, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் கீழ்க்காணும் வேலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் தேசிய போட்டி கேள்விமுறையின் கீழ் கோரப்படுகின்றன.

| கேள்விகோரல் இலக்கம் | விடய விபரம் | மீளளிக்கப்படாத வைப்பு (ரூபா) |
|---|---|---|
| NFC/BID/S/2024-02 | DEVELOPMENT OF THE WEBSITE FOR NATIONAL FILM CORPORATION OF SRI LANKA | 3,000.00 |

01. மேற்படி வேலைக்காக கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு தேவையான கேள்வி ஆவணங்களை குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் மூலம் விண்ணப்பித்துள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்பு இல. 303, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு - 07 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திலிருந்து கொள்வனவு செய்யலாளம்.
02. கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இடம்பெறுவதுடன் 2024.05.17 முதல் 2024.06.10 வரை கொள்வனவு செய்யலாம்.
03. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் 2024.06.11 முதல் 2024.09.09 வரை (90 நாட்கள்) செல்லுபடியாதல் வேண்டும்.
04. கேள்விகளுடன் சம்பந்தப்பட்ட சகல கேள்வி ஆவணங்களினதும், கேள்வி பத்திரங்களினதும் குறித்த இடங்களிலும் சமர்ப்பிக்கப்படும் நிறுவன / நிறுவனத்தின் அதிகாரம் அளிக்கப்பட்டவர்கள் கையொப்பமிட்டு முத்திரையிடல் வேண்டும்.
05. பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்வி இல. 303, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு - 07 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் வைப்புச் செய்யலாம் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு 2024.06.11 பி.ப. 1.00 இற்கு கிடைக்குமாறு அனுப்பவேண்டியதுடன் குறித்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் விடய விபரத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
06. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2024.06.11 பி.ப. 1.00 இற்கு முடிவடைவதுடன் அவ்வேளையிலேயே கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு வருகை தரலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
07. ஒரு கேள்வி அல்லது பல கேள்விகள் அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் அதிகாரம் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன பெறுகைக் குழுவிற்கு உரியது. அக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.
08. இதுபற்றி மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவையாயின் 0112584295 தொ.பெ இலக்கத்தின் மூலம் உதவிப் பொது முகாமையாளர், வழங்கல் மற்றும் வர்த்தக (அ.நி) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்,**
**இல. 303, பௌத்தாலோக்க மாவத்த,**
**கொழும்பு - 07**



## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 160,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 மே 21ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124H234 | LKA18224K227 | LKA36425E239 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 25,000 | 65,000 | 70,000 | 160,000 |

| | | |
|---|---|---|
| ஏலவிற்பனைத் திகதி | : | 2024 மே 21 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2024 மே 27 |
| வழங்கப்படும் திகதி | : | 2024 மே 24 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2024 மே 21 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ. பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# ரஷ்ய இராணுவத்திற்கு இலங்கையரை அனுப்பிய முகவர்கள் இருவர் கைது

## முகவர் நிலைய அனுமதிப்பத்திரமும் இரத்து

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ரஷ்ய இராணுவத்திற்கு இலங்கையர்களை அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட இரண்டு நபர்களை கைது செய்துள்ளதாக, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ அனுமதிப் பத்திரத்தைக் கொண்டுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலைய உரிமையாளர் ஒருவரும் அந்த நிலையத்தின் முகாமையாளருமே கைது செய்யப்பட்டுள்ளதாக அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் பிற்பகல் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பணியகம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக தெரிவித்து ஒவ்வொருவரிடமும் தலா 15 இலட்சம் ரூபாவை இவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அவர்கள் ஒரு கோடிக்கும் அதிகமான நிதியை பெற்றுள்ளதாகவும் அது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு ஏழு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அந்த பணியகம் தெரிவித்தது. இதையடுத்து நுகேகொடை ஸ்டான்லி திலகரத்ன மாவத்தையில் இயங்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலைமொன்றை சுற்றிவளைத்து அதன் உரிமையாளர் மற்றும் முகாமையாளரை கைது செய்துள்ளதாகவும் அந்த முகவர் நிலையத்தின் அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த பணியகம் தெரிவித்துள்ளது.

அதே வேளை, ரஷ்யாவுக்கு இலங்கையர்களை அனுப்புவோர் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

போலியான முகவர்களை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் அவர் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார். இத்தகைய போலியான வாக்குறுதிகளை நம்பி, இலங்கையர்கள் ரஷ்யாவுக்கு சென்று நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள் என்றும் போலியான நபர்களிடம் ஏமாற வேண்டாம் என நாட்டு மக்களிடம் தாம் கேட்டுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார் .

# ஜூலை மாதம் மின் கட்டணம் குறைப்பு சதவீதம் அறிவிப்பு

## ஓரிரு தினங்களில் தீர்மானம்

மின் கட்டணம் குறைப்பு சதவீதம் தொடர்பான அறிவிப்பு ஜூலை மாதம் முதல் விரைவில் விடுக்கப்படவுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மின்சார கட்டணத்தை குறைப்பது தொடர்பான முன்மொழிவுகளை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க இன்று வெள்ளிக்கிழமை வரை கால அவகாசம் வழங்குமாறு, இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்திருந்தாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மே மாதம் முதலாம் திகதி ஆணைக் குழுவிடம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படவிருந்த போதிலும், மின்சார சபை விடுத்த கோரிக்கையின்படி கடந்த (10) வரை காலத்தை நீடிக்க பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

எவ்வாறாயினும், கடந்த 10 இல், இலங்கை மின்சார சபை உரிய முன்மொழிவுகளை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை என, பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்தார். உரிய முன்மொழிவுகள் கிடைத்த பின்னர் மின் கட்டணத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும், ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# இன்றைய பலன்கள்

(17.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :**
முக்கிய புள்ளிகளின் ஒத்துழைப்போடு தக்கவிதத்தில் தன வரவும் வந்து சேரும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உண்டு.

**ரிஷபம் :**
காரியத்தை தொடங்கி விட்டால் பணம் தானாக வந்து சேரும். கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும். கூட்டு முயற்சியிலிருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள்.

**மிதுனம்:**
வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். வெளிநாட்டில் உள்ள உறவினர்களின் அழைப்பின் பேரில் உல்லாச பயணம் செய்யும் சூழ்நிலையும் உருவாகும்.

**கடகம் :**
உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உண்டு. தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொழிலை விரிவு செய்வதற்காக கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம் :**
மூட்டு வலி, முழங்கால் வலி என்று ஏதாவது ஒரு தொல்லை வந்து கொண்டே இருக்கும். வாகன படுத்துகளால் வட்டம் ஏற்படும்.

**கன்னி :**
எதிர்மறை சிந்தனைகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் லாகா மாற்றம் உருவாகலாம். பொருளாதாரம் திருப்தி தரும். புதிய பயணங்கள் அதிகரிக்கும்.

**துலாம் :**
கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. வண்டி வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

**விருச்சிகம் :**
தொழிலில் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதலாவும் கிடைக்கும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு பொது வாழ்வில் புகழ் குவிப்பீர்கள்.

**தனுசு :**
உடன்பிறப்புகள் குணமறிந்து நடந்து கொள்வர். கொடுக்கல் வாங்கல்கள் சீரும் சிறப்புமாக இருக்கும். வீட்டுக்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழுவீர்கள்.

**மகரம் :**
வீடு இடம் வாங்கும் யோகம் உண்டு. கட்டிய வீட்டை பழுது பார்க்கும் முயற்சி ஒரு சிலருக்கு கை ககூடும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும்.

**கும்பம் :**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிறப்பாக பணிபுரிந்து மேலதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மீனம் :**
தொழில் சிறப்பாக நடைபெறும். அரசியல் களத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்பு வந்து சேரும். கைவிட்டு போன பொருள் மீண்டும் கிடைக்கும்.

யாழ். மாதகல் கடற்பகுதியில்

# கரையொதுங்கிய தமிழக கடற்தொழிலாளர் மூவர்

***யாழ்.விசேட நிருபர்***

யாழ்ப்பாணம் மாதகல் கடற்பகுதியில் படகொன்றில் கரையொதுங்கிய தமிழக கடற்தொழிலாளர்கள் மூவர் இளவாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாதகல் புளியந்தரை கடற்கரை பகுதியில் தமிழக படகொன்று மூன்று கடற்தொழிலாளர்களுடன் கரையொதுங்கியுள்ளது. அவர்களை அப்பகுதி கடற்தொழிலாளர்கள் மீட்டதுடன் , சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்கள்.

தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு வந்த இளவாலை பொலிஸார் தமிழக கடற்தொழிலாளர்கள் மூவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்த போது , படகு பழுதடைந்தமையாலையே கரையொதுங்கியதாக தெரிவித்துள்ளனர்.



அதனை தொடர்ந்து மூவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளத்துடன் , மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## விஜயதாசவுக்கு எதிராக மீண்டும்...

செயலாளர் துமிந்த திசாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நிராகரிக்கப்பட்ட மேற்படி தடை உத்தரவு கோரிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், நேற்றுக் காலை கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் மீண்டும் அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துமிந்த திசாநாயக்க தாக்கல் செய்துள்ள வழக்கின் விடயங்களை கவனத்தில் கொண்ட பின்னர், நேற்று முற்பகல் சம்பந்தப்பட்ட தடையுத்தரவு கோரலை நிராகரித்த மாவட்ட நீதிபதி, மேற்படி முறைப்பாட்டை திருத்தி மீண்டும் மேற்படி தடை உத்தரவு தொடர்பில் விடயங்களை உறுதிப்படுத்த முறைப்பாட்டாளருக்கு வாய்ப்பு வழங்கப்படுவதாக குறிப்பிட்டார்.

வழக்கின் நான்காவது மற்றும் ஐந்தாவது பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரை அடிப்படையாக வைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில், பிரதிவாதிகளின் வதிவிடமாக கொழும்பு டி.பி. ஜயா மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயம் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அந்த வகையில் அவர்களது உண்மையான வசிப்பிடத்தை உறுதி செய்வதற்கு முறைப்பாட்டாளர்கள் தவறியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வதிவிடம் உறுதிப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் சிவில் வழக்கு சட்டத்தின் 46 (2) ஆவது சரத்தின் கீழ், முறைப்பாட்டை நிராகரிப்பதற்கு அல்லது அதனை திருத்தி மீள சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்றும் நீதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அதே வேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக விஜயதாச ராஜபக்ஷவையும், பதில் செயலாளராக கீர்த்தி உடவத்தவையும் நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, அந்த கட்சியின் அமைப்புக்கள் மற்றும் அதிகாரிகள் செயற்படுவதற்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று காலை (16) நிராகரித்தது.

எவ்வாறாயினும், அந்த முறைப்பாட்டைத் திருத்தவும், உரிய தடை உத்தரவுக்கான சமர்ப்பணங்களை உறுதிப்படுத்தவும் வாதிக்கு அவகாசம் உள்ளதாக நீதிபதி சந்துன் விதான இதன்போது தெரிவித்தார்.

அதற்கிணங்கவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்கவினால் மேற்படி முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## உலக நீர் மாநாட்டில் பங்கேற்க...

20 ஆம் திகதி மாநாட்டில் விசேட உரையாற்றவுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இந்தோனேசிய ஜனாதிபதி உள்ளிட்ட அந்நாட்டின் பல உயர்மட்ட பிரதிநிதிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளார்.

ஜனாதிபதியுடனான விஜயத்தில் ஜனாதிபதி செயலக மற்றும் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவொன்றும் இணைந்து கொள்கிறது.

## ஈட்டப்படும் சொத்துக்களை...

எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். கண்டியில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியை, நீதி அமைச்சுக்கு சுவிகரிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகள் சங்கத்தினருக்காக புதிய அலுவலகமொன்றை நிர்மாணித்து, அதில் 134 சட்டத்தரணிகளுக்கான அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய நீதி அமைச்சர், சட்டத்தரணிகள் செய்வது வெறுமனே தொழில் அல்ல. கௌரவமிக்க சேவையாகவும் இது உள்ளது .

தாம், எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு வேறு எங்கும் சென்று தீர்வு பெற்றுக் கொள்ள முடியாது. இதனாலேயே மக்கள் நீதிமன்றத்தை நாடி வருகின்றனர்.எனவே, நீதிமன்றத்திற்கு வரும் மக்களின் உரிமையை நாம் பாதுகாக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியடைந்து, அராஜக நிலைக்கு உள்ளானது . இந்த சந்தர்ப்பத்தில் இநாட்டை பொறுப்பேற்பதற்கு எவரும் முன்வரவில்லை. அவ்வாறான நிலைமை இனியும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகும். நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டு பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு நீதி கட்டமைப்பு சிதைவடைந்தமையே காரணமாகும். அந்த வகையில் நாட்டின் பொருளாதாரம் பலம் பெற வேண்டுமானால் சட்ட ஆதிபத்தியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பயணிகளை காப்பாற்றி விட்டு...

போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸை செலுத்திக் கொண்டிருந்தபோதே, திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 41 வயதுடைய ஆரத்தனகே என்ற சாரதியே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை 03.10 மணியலவில் புறப்பட்டு, தலவாக்கலை ஊடாக பத்தனை சந்தி வழியாக நாவலப்பிட்டி நோக்கி இந்த பஸ் பயணித்துக்கொண்டிருந்தது.

இந்த பஸ், லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுக்கலை சந்தியை அண்மித்த பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, நெஞ்சுவலியை உணர்ந்த இவர், பஸ்ஸை வீதி ஓரமாக நிறுத்தியுள்ளார்.

உடனடியாக சாரதி அருகே ஓடி வந்து நிலைமையை ஆராய்ந்த நடத்துநர், மாரடைப்பினால் அவர் அவதியுறுவதை அவதானித்துள்ளார்.

உடனடியாக மற்றுமொரு வாகனம் ஒன்றில் சாரதியை லிந்துலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளையில் சாரதி உயிரிழந்துள்ளார். பிரேத பரிசோதணைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு சாரதியின் சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பஸ்ஸை நிறுத்யிருக்காவிட்டால் பாரிய அசம்பாவிதம் ஏற்பட்டிருக்ககூடுமென அங்கிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவின் PhonePe UPI கட்டண...

Pay உடன் இணைந்து இலங்கையில் UPI கட்டணத்தை ஏற்றுக்கொள்வதைச் செயற்படுத்தியதாக PhonePe அறிவித்துள்ளது.

இதன்மூலம் இலங்கைக்கு வருகை தரும் தமது செயலி (App) பயனாளிகள் தற்போது நாடு முழுவதும் உள்ள LankaPayQR வர்த்தகர்கள் மூலம் UPIஐப் பயன்படுத்தி பணம் செலுத்த முடியும் என்று PhonePe அறிவித்துள்ளது.

அத்துடன் PhonePe பயனாளிகள் பணத்தை எடுத்துச் செல்லாமல் அல்லது நாணய மாற்றங்களைக் கணக்கிடாமல் பாதுகாப்பான மற்றும் விரைவாக பணம் செலுத்த LankaPayQR குறியீட்டை ஸ்கேன் செய்யலாம் என்றும் PhonePe அறிவித்துள்ளது. கடந்த பெப்ரவரியில், இந்தியாவின் உடனடி கட்டண தொழில்நுட்ப சேவையான யுனிஃபைட் பேமென்ட் இன்டர்ஃபேஸ் UPI இலங்கை மற்றும் மொரீசியஸில் ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பான காணொளி மாநாட்டு நிகழ்வில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, மொரீசியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

UPI என்பது இந்தியாவின் மொபைல் அடிப்படையிலான வேகமான கட்டண முறையாகும். இது வாடிக்கையாளர் உருவாக்கிய விர்ச்சுவல் பேமென்ட் முகவரியை (VPA) பயன்படுத்தி 24 மணிநேரமும் உடனடியாக பணம் செலுத்த வாடிக்கையாளர்களுக்கு உதவுகிறது.

## காங்கேசன்துறை – நாகைப்பட்டினம்...

தாமதமானதாலேயே இதற்கு காணரமாகும். முன்பதிவு செய்த பயணிகள் பயணத் திகதியை மாற்றிக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகையிலிருந்து காங்கேசந்துறைக்கு 2023 அக்டோபர் 14 முதல் பயணிகள் கப்பல் போக்குவரத்து இயக்கப்பட்டது. கேரள மாநிலம் கொச்சியிலிருந்து 'செரியாபாணி' என்ற பெயர் கொண்ட பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழை காரணமாக 2023 அக்டோபர் 23 இல், இப்பயணிகள் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இந்த அறிவிப்பால் யாழ்ப்பாணம் செல்லவிருந்த சுற்றுலா பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். முன்பதிவு செய்த பயணிகள் பயணத் தேதியை மாற்றிக்கொள்ளலாம் அல்லது கட்டணத்தை திரும்ப பெற்று கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பயணத்தை மேற்கொள்வதற்காக பதிவுகளை மேற்கொண்ட பயணிகள் 19 ஆம் திகதியோ அல்லது அதன் பின்னரான திகதிகளில் பயணிக்க முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் தரப்பு பொது வேட்பாளர்;...

முன்தினம் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இதனை தெரிவித்தார். இங்கு கருத்து தெரிவித்த அவர்;

சிவில் அமைப்புகள், மதத்தலைவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகள் கலந்துரையாடி, பொது வேட்பாளர் தொடர்பான தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வவுனியாவில, இக்கலந்துரையாடல் இடம் பெற்றது.

தமிழ்த் தேசிய பாதையில் பயணிக்கும் சகல கட்சிகளையும் ஒன்று திரட்டி தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், தமிழருக்கு உரிமை சார்ந்த தீர்வை வழங்காது என்பதே கடந்த கால வரலாறு எனவும் அவர் தெரிவித்தார்.

## ரஷ்யப் போரில் காயமடைந்த...

தனது மனைவிக்கு ஏற்பட்ட புற்றுநோய்க்கான சிகிச்சைக்கு தேவையான பணத்தை திரட்டும் நோக்கிலேயே, தாம் ரஷ்ய இராணுவத்தில் இணைந்ததாக எரந்த சிந்தக்க தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து யுத்தத்தில் ஈடுபட்ட தம்மை , முன்னணி யுத்த களத்துக்கு அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் அனுப்பியதாகவும் அவர் கூறியுள்ளார். இந்நிலையிலேயே யுத்தக் களத்தில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி, காயமடைந்ததாகவும் காயமடைந்த தம்மை வைத்தியசாலையில் அனுமதிக்கக்கூட அந்நாட்டு அதிகாரிகள் முன்வரவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தாம், நண்பர்களின் உதவியுடன் கடந்த (09) இலங்கையை வந்தடைந்ததாக அவர் கூறியுள்ளார்.

மனைவி, குழந்தைகளை ரஷ்யாவுக்கு அழைத்து தேவையான சிகிச்சைகளை இலவசமாக வழங்குவதாக அந்நாட்டு அதிகாரிகள் உறுதியளித்த போதிலும், தனக்கு இறுதி வரை சம்பளம் கூட வழங்கவில்லை எனவும் எரந்த சிந்தக்க தென்னக்கோன் கூறியுள்ளார்.

மனைவியை குணப்படுத்துவதற்காக யுத்த களத்துக்கு சென்று காயமடைந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்தாகவும் அவர் கூறியுள்ளார். எனினும், புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த தனது மனைவி கடந்த மார்ச் மாதம் உயிரிழந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## உயிருடன் இருப்பதாக போலி...

கைதானவராவார். இவர் வஸ்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் ஒருவர் உயிருடன் இருப்பதாகப் போலி ஆவணம் தயாரித்து பள்ளிவாசலுக்கு வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து இந்தப் போலி ஆவணத்தை எடுத்துச் சென்ற பெண் ஒருவர், இந்த ஆவணத்தைப் பயன்படுத்தி வேறு ஒருவருக்குச் சொந்தமான காணிக்கு போலி உறுதி தயாரித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இப் பெண்ணை தனக்குத் தெரியாதெனவும் அவர் கேட்டதையடுத்து இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டதாகவும், சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

## A/L கல்வி நடவடிக்கைகள்...

நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமான தகவல்கள் கிடைக்காத பாடசாலை அதிபர்கள் சம்பந்தப்பட்ட மாகாண அல்லது வலய கல்விப் பணிமனையின் ஊடாக, தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர்களுக்கு இது தொடர்பில் தகவல்கள் தேவைப்படுமாயின், பாடசாலையின் அதிகாரிகளிடம் அதனை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## இராஜாங்க அமைச்சர்...

எதிர்வரும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நிதி இராஜாங்க அமைச்சருக்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் அச்சுறுத்தலையும் மீறி அவர் செயற்படுவாராயின் அவரை படுகொலை செய்வதாகவும் தொலைபேசி மூலம் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

உடனடியாகவே இராஜாங்க அமைச்சர் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாட்டுக்கு இணங்க பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இராஜங்க அமைச்சரின் அலுவலகம் நேற்று தெரிவித்துள்ளது.

## இலங்கையர் குறித்து ஆராய...

உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் படி ரஷ்யாவில் 600 முதல் 800 வரையிலானவர்கள் அல்லது அதற்கு அதிகமானவர்கள் சென்றிருக்கலாமென நம்பப்படுகிறது.

எவ்வாறாயினும், அரசாங்கம் என்ற வகையில், ரஷ்யாவிலிருக்கும் இலங்கையின் ஓய்வுபெற்ற இராணுவத்தினர் தொடர்பான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. ரஷ்யாவில் போரில் பங்கேற்றிருப்பது தொடர்பில் தகவல் வெளிப்படுத்திய ஊடகங்களுக்கு நன்றி. ரஷ்யாவில் இவர்கள் தங்கியிருக்கும் பிரதேசம் தொடர்பில் அறிய முடியாமல் இருப்பதே தற்போதைய சிக்கலாகும்.

ரஷ்யக் குடியுரிமை வழங்குவது போன்ற பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, ஆட்கடத்தல்காரர்கள் இவர்களை ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்றுள்ளதாக அறிய கிடைத்துள்ளது. இந்த ஆட்கடத்தல் செயற்பாடுகளில் இராணுவ உயரதிகாரியொருவருக்கும் தொடர்பு இருப்பதாக தெரிய வந்துள்ளது.

எவ்வாறாயினும் ரஷ்யாவுக்கு ஆட்களை அனுப்புவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மை நிலைமையை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். பின்னர், இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி அங்கு சென்றுள்ளவர்களை இலங்கைக்கு அழைத்து வர முடியுமென நம்புகிறோம். அரசாங்கம் இதற்காக முழுமையாக அர்பணிக்கும்.

வெளிவிவகார அமைச்சர் வெளிநாடு சென்றிருக்கும் நிலையிலும், ரஷ்ய உக்ரைன் போரில் பங்கெடுத்திருக்கும் இலங்கையர் குறித்து ஆராய்வதற்கான விஷேட தூதுக்குழுவொன்றை ரஷ்யாவுக்கு அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இலங்கைக்கான முன்னாள் ரஷ்ய தூதுவர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று ரஷ்யாவுக்கு அனுப்பப்படவுள்ளது. இது குறித்து ரஷ்ய தூதரகத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்" என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

# அட்டாளைச்சேனையின் அறநெறி அறிஞர் ஜே. எம். பதுறுத்தீன் மௌலானா

நிற்பது மரணம் என்றால் ஓடுவதே வாழ்க்கை. நதி நடந்து போகும் பாதையில் வெறும்நீரை மட்டுமன்றி இன்னும் பலவற்றையும் சேர்த்துக்கொண்டே ஓடுவது மாதிரி தன் மனித மாண்பை மக்கள் மனங்களில் உயர்ந்த வரலாறாய் கால ஓட்டத்தில் உயிர்ப்புடன் காத்து வைத்திருக்கிறார் அட்டாளைச்சேனை முன்னாள் மூத்த தலைவர் ஜே. எம். பதுறுத்தீன் மௌலானா.

நான் அரைக் காற்சட்டை அணிந்துகொண்டு பள்ளிச்சிறுவனாய் படித்துக் கொண்டிருந்த காலத்தில் என் மனசின் கிழக்கு வெளுக்கத் தொடங்கிய பொழுதுகளில் என் கிராமத்தில் நான் பார்த்து வியந்த தலைவர் அவர், இந்தத் தலைவரின் முகம் என் ஞாபகங்களின் ஆழத்தில் இன்னமும் மிதந்துகொண்டே இருக்கின்றது.

அவர் இஸ்லாமிய சமூக வாழ்வியலை வெண்பா வடிவில் எழுதிய ஓர் இலக்கியப் படைப்பாளர்: தூர நோக்குச் சிந்தனையாளர், ஆரோக்கியமான இளம் தலைமுறையை உருவாக்க வேண்டுமென்று பாடுபட்ட அறிவாளர், ஊதியம் ஆதாயம் தற்பெருமை எதையும் நினைத்தும், கூடப் பார்க்காத நேர்மையாளர்: தலைமைத்துவம் வேண்டும் என்று பெருந்தொகை கையாடுபவர்கள் அவசியம் படித்துப் பின்பற்றவேண்டிய பெருந்தகை.

கல்வி மொழி – கலாசாரம் சமூகம் பண்பாடு இலக்கியம் அரசியல் அறிவியல் ஆன்மிகம் மனித விழுமியம் என்ற பொருண்மைகளில் அவரது முகமும் முகவரியும் ஆழ்ந்து விரிந்து அகன்று நிற்கின்றன.

அவர் 'சேர்ட்' அணிவார். 'கோர்ட்' அணிவார். வெள்ளைச் சாறம் அணிவார். கறுப்புச் சப்பாத்தும் துருக்கித் தொப்பியும் போட்டுக் கொள்வார். முகம் மலர, பிறர் அகம் மலர மிடுக்காக நடப்பார். எதிலும் எப்போதும் கம்பீரமாகவே தோன்றுவார். நிறஆடை அணியமாட்டார். வெள்ளிக் கிழமைகளில் உற்சாகத்தை விதைத்துக்கொண்டு காலை பதினொரு மணிக்கே பள்ளிக்கு வருகை தருவார். தொழுகை – வழிபாடு நிர்வாகம் பொதுக் கூட்டம் என்று உற்சாகத்தேனீ போல் உலாவந்து எல்லாவற்றையும் முடித்த பின்னர்; இதயங்களை அறுவடை செய்துகொண்டே வீடு செல்வார்.

எந்த சபையிலும் பேசவேண்டிய விடயத்தைப் பேசுவதற்கு முன்பாக சார்ந்திருக்கும் சபை மீது கண்ணும், காதும், கவனமும் செலுத்தி பிறர் கருத்தைக் கேட்டறிவார். உணர்ச்சிக்கும், கருத்துக்கும் ஏற்ப ஒருமித்து முடிவெடுப்பதில் எல்லோரும் இணக்கமாக இருக்குமாறு பார்த்துக்கொள்வார். இலக்கிய மேடைகளில் இனிமையையும் அரசியல் மேடைகளில் பொறுப்புள்ள கொல்லனைப் போல அளவாக ஆனால் அழகாகக் கலப்பார்.

நான் வியந்தது அவரது மென்மையை, அவரது நேர்மையை:,அவரது திறமையை, அவர் காட்டிய மனிதாபிமானத்தை, அவருக்குள்ளிருந்த சமயத்தையும் சமூகத்தையும் அட்டாளைச்சேனையில் மர்ஹூம் செய்யது ஜமால்தீன் மௌலானா என்கிற செல்வாக்குள்ள குடும்பத்துச் செல்வந்தரது மூத்த புதல்வர்தான் ஜே. எம். பதுறுத்தீன் மௌலானா. அவர் முன்னாள் அதிபர்களான ஜே. எம். ஷம்சுத்தின் மௌலானா மற்றும் ஜே. எம். நசுறுத்தீன் மௌலானா ஆகியோரின் மூத்த சகோதரர் ஆவார். பதுறுத்தீன் மௌலானா அட்டாளைச்சேனையில் 1913ஆம் ஆண்டு பிறந்து வளர்ந்து வாழ்ந்து – உயர்ந்து (1913 – 1976); அறநெறி பிறழாத தலைவராய் அதே ஊரை ஆண்டார்.

அட்டாளைச்சேனையின் பெரிய ஜூம்ஆ பள்ளியின் நம்பிக்கையாளர் சபைத் தலைவராயிருந்த காலத்தில் பதுறுதீன் மௌலானா அந்த பழைய பள்ளியை ஊர்மக்களோடு சேர்ந்து உடைத்துவிட்டு புதிய கட்டுமானத்தைத் தொடக்கி வைத்தார். அப்படி விரிவு படுத்திக் கட்டிய புதுப்பள்ளி வாசல் தான் இன்று பிரதான பாதையூடாகத் தெரியும் பிரமாண்டமான புதிய மஸ்ஜித் ஆகும்.

அதுமட்டுமல்லாமல் அவர் ஊர் மக்கள் கடற்கரைக்குச் செல்லும் கோணாவத்தைப் பாலம் கட்டுவதற்கும், வளலவாய் வயலுக்குச் செல்லும் பாவங்காய்ப் பாதை அமைப்பதற்கும், பல்லாண்டு காலம் பல மைல் தூரம் சென்று பக்கத்து ஊரில் பலசரக்கு வாங்கிவந்த மக்களின் அன்றாட அவலநிலை போக்கிப் பொதுச்சந்தையை உருவாக்கிக் கொடுத்ததன் மூலம், ஊரில் புதியதொரு சமூக நிலையை உருவாக்கி பெருமை சேர்த்தார். இலட்சியம் என்பது வாய்ச்சொல்லில் மட்டும் இல்லாமல் தன் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் அவர் மேற்கொண்ட பயிற்சியும் முயற்சியும் தியாக உணர்ச்சியும், அபாரமானவை.

1970ஆம் ஆண்டு ஒலுவில் பாலமுனை உள்ளடக்கிய ஊர்களின் உதவி அரசாங்க அதிபர் அலுவலகப் பிராந்தியமான அட்டாளைச்சேனையில் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இலங்கை அரசாங்கம் இணக்கசபை என்னும் உள்ளூர் நீதிமன்றத்தை அமைத்து, அதற்கு பதுறுத்தீன் மௌலானாவைத் தலைவராகவும் நியமித்தது. நாளாந்தம் நூற்றுக் கணக்கான மக்கள் புகார்களை விசாரணை செய்து பதுறுத்தீன் மௌலானா வழங்கிய சமநீதி சத்தியமானவை என்பதனால் சமாதான நீதிவான் என்றே சமுதாயம் அவரைப் பாராட்டியது.

இப்படி சொந்த ஊரைத் தன் உள்ளன்பால் உவந்து நேசித்த தலைவர் பதுறுத்தீன் மௌவ்லானா அறபு ஆங்கிலம் சிங்களம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். அவர் ஒரு நல்ல தமிழாசிரியர் மட்டுமல்ல அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இலக்கியம், இலக்கணம் போதித்த தமிழ்விரிவுரையாளரும் ஆவார். அட்டாளைச்சேனையில் இன்று தேசிய பாடசாலையாய் இயங்கும் அன்றைய சாதனா பாடசாலையில் அவர் அதிபராக கடமையாற்றியபோது "ஓதாத கல்வி கெடும் ஒழுக்கமில்லா வாழ்வு கெடும்" என்ற அவ்வைப் பிராட்டியின் ஆதிமொழியை அகம்நிறுத்தி பள்ளிச் சிறார்களுக்கு 'கல்வி என்பது அரிச்சுவடியிலிருந்து ஊட்டப்படுமுன் ஒழுக்கத்திலிருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும்' என்று அதை அமுல்படுத்தினார்.

அட்டாளைச்சேனையின் இன்னொரு அறிவுக்களஞ்சியமான அரபிக் கல்லூரியில் பிரதம ஆலோசகராகவும், அதன் உயர்தர மாணவர் பரீட்சைக்குழு முதல்வராகவும், கமநல சேவைநிலையத்தின் முதல் தலைவராகவும், மட்டக்களப்பு மாநகர போதனா வைத்தியசாலை மேலாண்மைக்குழு மூத்த உறுப்பினராகவும் அவர் பணியாற்றினார். இப்படி கல்வியிலும் சிந்தனையிலும் சமூக மேம்பாட்டிலும் சிறந்து விளங்கிய பெருந்தகை பதுறுதீன் மௌலானாவின் மாண்பு பெருமதிப்புக்குரியது.

நெல்விளையும் சீமை அட்டாளைச்சேனை மக்களின் வாழ்வாதாரம் விவசாயம் என்றால் மற்றொரு வாழ்வாதாரம் கல்வி. அதற்கான ஏக்கமில்லா வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த பதுறுத்தீன் மௌலானா வாழும் தலைமுறைக்கு ஒழுக்கம் சமூகம் தேசம் என்கிற வாழ்வியலை இஸ்லாமிய இலக்கிய நெறியில் வார்த்தெடுத்து வருங்கால சந்ததிகள் எப்படி வாழவேண்டும் என்கிற உத்தம நபி (ஸல்) அவர்களின் மனிதத்துவத்தையும் புனிதத்துவத்தையும் தன் "முஸ்லிம் மூதுரை" நூலில் மொழிந்திருக்கிறார்.

"எல்லாம் படைத்தே எழிலாய்ப் பராபரிக்கும்
அல்லாஹ் உனக்கே அனைத்துபுகழ் சொல்லரிய
அன்போ டருளும் அமைந்தோய் அடிதொழுதே
உன்பா லிரந்தோம் உதவு" (பக்:111)

என்று பதுறுத்தீன் மௌலானா இறைஞ்சி எழுதிய முதலாவது பிரார்த்தனை பாவின் விளக்கமும் பிற பாக்களின் துலக்கமும் விரிவும் செறிவும்தான் நபிநாயகம் (ஸல்) அவர்களின் மொத்த வாழ்க்கையின் முழுத் திரட்டாகும்.

"கல்வி குறையாக் கருந்தனமாம் கல்வியைப்போல்
நல்விளக்கு நாடில் நமக்கில்லை – நல்வாக்கார்
சீனந்தான் சென்றாலும் தேடுகென்றார்
கானந்தான் காண்வரையுங் கல்" (பக்:215)

என்பது கல்வி என்ற பெரும்பொருளை 'சீனா சென்றேனும்; பெற்றுக் கொள்' என்ற எம் பெருமான் நபிகளாரின் கருத்துக்களை உள்வாங்குவதற்கு உள்ளம் வேண்டும். பதுறுத்தீன் மௌலானாவின் மேன்மைக்குக் காரணம் சொல் மட்டுமன்று: செயல். 'முற்போக்குக் கருத்துக்களை முன்மொழிந்த முன்னோரெல்லாம் நமது முன்னோடிகள்;' என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

"சூழ்கெடுதி தட்டும் சுடர்தருமம் செய்திடுக
பாழ்நரகு காக்கும் படையொக்கும் நீள்பசியை
ஆற்றுதற் கட்ட அரும்போ சனமீந்தார்
போற்றும் நபிகளார் பொன்" (பக்:3312)

வாழ்க்கைக்கு இரண்டு நிலைப்பாடு உண்டு. ஒன்று: இன்பம் தருவது. இன்னொன்று: துன்பம் தருவது. மனிதனுக்கு இரண்டு நிலைப்பாடு உண்டு. ஒன்று: நல்ல மனிதனாக வாழ்வது. இன்னொன்று:கெட்டமனிதனாகபிழைப்பது; அவர் முதலாவது நிலையை முன்னிறுத்தி மானுடத்தை மேம்படுத்த இப்படிப் பாடியிருக்கிறார்.

"நெஞ்சு நிலமாக நிய்யத்து வித்தாக
அஞ்சுதல் நீராக ஆராய்ந்து – செஞ்செழிப்பாய்
தீன்பயிரைச் செய்கவே தித்திக்கும் தீங்கனிகள்
ஈன்றிடுமாம் ஈருலகம் என்க" (பக்:6030)



என்று பாடிய பதுறுத்தீன் மௌலானாவின் அறிவும் செறிவும் வாழ்வும் நிலையாக வாய்த்திருக்கிறது.

"இன்றைய தலைமுறையினரிடத்தில் அறிவு இருக்கலாம் ஆனால் அந்த அறிவை அலங்கரிக்கும் பணிவையும் அடக்கத்தையும் காண்பது அரிதெ'ன்று கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி, இன்றைய இளைஞர் உள்ளத்தை உழுதிருப்பது போலவே இந்த வெண்பாவும் நமக்கு நன்மையின்பால் நன்னம்பிக்கை ஊட்டுகிறது.

காலத்தைப் பதிவு செய்கிறவன் படைப்பாளி. ஞானத்தைப் பதிவு செய்கிறவன் ஞானி. காலத்தையும் ஞானத்தையும் ஒருசேர ஞாலத்தில் பதிவு செய்கிறவன் மேதை. நூறுபேர் சிந்திப்பதை ஒருவன் சிந்தித்தால் அவன் அறிஞன். அப்படி நபியவர்கள் சிந்தித்ததை இந்த நூலாசிரியரும் சிந்திக்கிறார். முதலாவது வெண்பா இறைவனிடம் கேட்கும் ஒரு பிரார்த்தனையாக அமைந்திருப்பது நூலில் நுழையும்போது உள்மனசில் பெருமிதமளிக்கின்றது.

பழைய வித்தியோதயப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எம். எம். உவைஸின் (எம். ஏ) அணிந்துரையோடும் முன்னாள் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம். சமீமின்; வாழ்த்துரையோடும் மற்றும் அட்டாளைச்சேனை அரபிக்கல்லூரி முன்னாள் ஆசிரியர் சங்க அதிபர்களது ஆசீர்வாதத்தோடும் 1969இல் வெளிவந்த பதுறுத்தீன் மௌலானாவின் இந்த 'முஸ்லிம் மூதுரை' நூலில் 62 பக்கங்கள் கொண்ட 30 நான்கடிச் சந்தப் பாக்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் வார்த்தையாக அல்லாமல் வாழும்க்களுக்கு வாழ்க்கையாக அமைந்திருக்கின்றன.

இன்னும் அவர் எழுதிய நமது வாழ்க்கைக்கு வழி சொல்லும் 'நபி வழிக்கோவை' என்கிற நூலும் மற்றுமொரு ஹதீது நூலும் அச்சிலிருந்தபோதிலும் எதிர்பாராமல் ஏற்பட்ட அவரது உடல் நலக்குறைவால் அவை வெளிவராமல் போயின.

அறிவைத் தூண்டும் நூலாசிரியருடைய முகமறிவதற்கும், அறமும் திறமும் காண்பதற்கும், அவரது உள்ளும் புறமும் உணர்வதற்கும், மனித நாகரிகம் தெளிவதற்கும், ஈழத்துத் தமிழ் வளர்ச்சிக்கு இஸ்லாமிய எழுத்தாளர் பங்களிப்பு எப்படியானது என்பதை புலனாய்வு செய்வதற்கும், இந்தப் பெருவெளியில் நிகழ்காலம் நிமிர்வதற்கும் எதிர்காலம் நிலைப்பதற்கும் ஒவ்வொரு மனிதரும் இந்த 'முஸ்லிம் மூதுரை' கற்கலாம்.



கனடாவிலிருந்து
இனியவன் இசாறுத்தீன்

# போதிய பராமரிப்பு இன்றி காணப்படும் கிண்ணியா பிரதான மீன்சந்தை

(கிண்ணியா மத்திய நிருபர்)

கிண்ணியா நகர சபைக்குச் சொந்தமான பிரதான மீன் சந்தை போதிய பராமரிப்பு வசதிகள் இன்றி காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு வருடங்களாக மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக நுகர்வோர்களும் வியாபாரிகளும் தெரிவிக்கின்றனர்.

மீன் சந்தையில் போதிய சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றல் பணிகள் இடம்பெறாமையால், இங்கு ஒவ்வொரு நாளும் துர்நாற்றம் வீசுவதாக இவர்கள் கூறுகின்றனர்.

இதன் காரணமாக மீன் வாங்க செல்லும் பொதுமக்கள் சந்தைக்குள் நுழைந்தவுடன், சந்தையை விட்டு திரும்பி செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, பிரதான வீதியை அண்மித்து மீன் சந்தை அமைந்திருப்பதால், பிரதான வீதியில் செல்லும் பயணிகளும் துர்நாற்றத்தால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் . மேலும், இந்த மீன் சந்தையை சுற்றிவர அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலிகள் முழுமையாக சேதமடைந்துள்ளமையால் இரவு நேரங்களில் மீன்சந்தை கட்டடம் கட்டாகாலி நாய்களின் கூடாரமாக மாறியுள்ளது. இதனால் நாய்களின் கழிவுகளும் சேர்ந்து, இந்தச் சந்தையை மோசமாக பாதித்துள்ளது. மலசலகூடம் பாவிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்து காணப்படுவதால் வியாபாரிகள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.



ஒரு மீன் வியாபாரியிடம் நாளொன்றுக்கு 200 ரூபா நகர சபையால் அறவிடப்படுகின்றது. ஆனால், வியாபாரத்தை திருப்திகரமாக செய்வதற்கு, எந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லையென வியாபாரிகள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் நகர சபை கவனம் செலுத்தவேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பு நகரில் சுவாமி தந்திரதேவா மகராஜின் 74ஆவது ஜனன தினம்

(மட்டக்களப்பு விசேட நிருபர்)



அமெரிக்க நாட்டு இந்து சமயத்து றவி சுவாமி தந்திரதேவா மகராஜின் 74 ஆவது ஆண்டு ஜனன தின நிகழ்வுகள் நேற்று (16) மட்டக்களப்பு பிரதான பொலிஸ் நிலையம் அன்னாரின் சிலையருகில் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வு அதன் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இலங்கையில் இந்து சமயத்துக்கு அவர் ஆற்றிய சேவையை நினைவுகூர்ந்து அன்னாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டதோடு ஜனன தின பூஜையை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் நிகழ்த்தினார். மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் தலைவர் ஏ. செல்வேந்திரன், செயலாளர் கதிர் பாரதிதாசன், சைவப்புலவர் திருமதி சிவானந்த தேவி ஞானசூரியம், மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் சிவம் பாக்கியநாதன் ஆகியோர் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தினர்.

கதிர்காமம் பாதயாத்திரை

# தொண்டு நிறுவனங்களுடன் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கலந்துரையாடல்



(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டு நிறுவனங்களுடனான கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கதிர்காமம் பாதயாத்திரையின் போது தொண்டு பணிகளில் ஈடுபாடு கொண்ட நிறுவனங்களுடன் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

லாகுகல பிரதேச செயலாளர், திருக்கோவில் பிரதேச செயலாளர், அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர், ஆலையடிவேம்பு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் உட்பட தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கதிர்காம பாதயாத்திரை செல்லும் அடியவர்களுக்கு தொண்டு அமைப்புக்களினால் செய்யப்படுகின்ற உதவிகளுக்கு நன்றிகளை தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர், கதிர்காம பாதயாத்திரைக்கு செல்லும் அடியவர்களுக்கான தேவைகளை, சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு, போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

# பாரிய கனரக வாகனம் குடைசாய்ந்து விபத்து

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணும் திணைக்களத்தின் கண்காணிப்பில் பாறாங்கற்கள் போடும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கனரக வாகனமொன்று திடீரென குடை சாய்ந்து கடலுக்குள் விழுந்தது.

நீண்ட போராட்டத்தின் பின்னர் பிரதேச மீனவர்களின் உதவியுடன் கனரக வாகனம் கரைக்கு கொண்டு வரப்பட்டது. சம்பவத்தில் கனரக வாகனத்தின் சாரதி மயிரிழையில் உயிர்பிழைத்துள்ளார்.

# மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட சுய உதவி குழு அங்குரார்ப்பணம்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட சுய உதவி குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் இயங்கும் பிரதேச சுய உதவி குழுக்களை மையமாக வைத்து மாவட்ட சுய உதவி குழு புதிய நிர்வாக தெரிவுடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன்மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் உட்பட பல விடயங்களை எதிர்காலத்தில் பெற முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகள், பெற்றார்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# வாழைச்சேனை பிரதேச செயலக பிரிவில் வீடுகள் கையளிப்பு



கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேசசெயலக பிரிவில் சமுர்த்தி ரன்விமன வீடமைப்பு திட்டத்தில் இரண்டு வீடுகள் நேற்று பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.ராஜ்பாபு, பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில், மாவட்ட பிரதம கணக்காளர் எம். எஸ்.பசீர், உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ரமீசா, மாவட்ட செயலக தலைமை முகாமையாளர் ஜே .எப். மனோகிதராஜ், பிரதேசசெயலக தலைமை முகாமையாளர் எஸ்.ஏ. பசீர், முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எல்.ஏ.மஜீத், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களுக்கு சீல் வைப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

பூநகரி, முழங்காவில் பிரதேசத்தில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த இரண்டு உணவு கையாளும் நிலையங்களை நேற்று முன்தினம் புதன்கிழமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சீல் வைத்து மூடியுள்ளனர்.

பூநகரி பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தலைமையிலான குழுவினர் அண்மையில் பூநகரி, முழங்காவிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் சோதனை நடத்தினர். இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த 03 உணவு கையாளும் நிலையங்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண்டுபிடித்ததுடன், அவற்றுக்கு எதிராக கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, 03 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக 65 ஆயிரம் ரூபா அபராதத்தை நீதிமன்றம் விதித்ததுடன், ஏனைய 02 உணவகங்களுக்கு சீல் வைக்க உத்தரவிடப்பட்டது.

# பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பு

### இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கையளித்தார்

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளுக்காக விளையாட்டுத்துறை அமைச்சால் வழங்கி வைக்கப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்கள் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு நேற்று வியாழக்கிழமை கையளித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் உரிய பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்களை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து அதிபர்களிடம் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் கையளித்து வைத்துள்ளார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டதுடன், தமது பாடசாலைக்கான விளையாட்டு உபகரணங்களை இராஜாங்க அமைச்சரிடமிருந்து அதிபர்கள் பெற்றுக் கொண்டனர். இதற்கான நிகழ்வில் விளையாட்டுத்துறை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் உதயம்

## யாழில் பல்வேறு தரப்பினருடனும் அமெ. தூதுவர் ஜூலி சங் சந்திப்பு

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விஜயம் செய்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பல்வேறு தரப்பினரையும் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரை அமெரிக்கத் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குடனான சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

அத்துடன் மானிப்பாயிலுள்ள அமெரிக்க மிஷனரியின் கிறீன் மெமோரியல் வைத்தியசாலைக்கும் அமெரிக்கத் தூதுவர் விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை பார்வையிட்டுள்ளார்.

வடக்கு மாகாண கடற்படைத் தளபதியை காங்கேசன்துறை தலைமையகத்தில் அமெரிக்கத் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட இடங்களையும் அமெரிக்கத் தூதுவர் சென்று பார்வையிட்டுள்ளார்.

## யாழ். வடமராட்சியில் குடும்பப் பெண் கொலை; கணவர் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் குடும்பப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அப்பெண்ணின் கணவரை நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உடுத்துறை வடக்கு, தாளையடியைச் சேர்ந்த 44 வயதுடைய ஜெகசீலன் சங்கீதா என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை படுகொலை செய்யப்பட்டார். வீட்டின் கழிவறைக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த நீர் நிரப்பப்பட்ட பரலினுள் தலை மூழ்கிய நிலையில் இவர் சடலமாக காணப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனைக்கு ஒப்படைத்தனர்.

பரிசோதனையின் போது துணியொன்றால் இப்பெண் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தெரியவந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தாம் விசாரணையை முன்னெடுத்து வந்த நிலையில் அப்பெண்ணின் கணவரை கைது செய்துள்ளதாக, மருதங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

## உலக வங்கியின் ரூ.1,856 மில்லியன் நிதி உதவியில் மல்லாவி நகர நீர்வழங்கல் திட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை மற்றும் துணுக்காய் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கும் நோக்கில் மல்லாவி நகர நீர்வழங்கல் திட்டத்துக்கான நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்துக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் இதற்கான நிகழ்வில் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

உலக வங்கியின் 1,856 மில்லியன் ரூபா நிதி அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள மல்லாவி நகர நீர்வழங்கல் திட்டத்துக்கான நிர்மாணப் பணியை எதிர்வரும் 2025ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தினூடாக மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட 35 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 6,968 குடும்பங்களை சேர்ந்தவர்கள் நன்மை அடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக மல்லாவி நகர நீர்வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



## மலைச்சாரல்



# மலையக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே ஜனாதிபதியின் நோக்கம்

### ஐ.தே.க.வின் இரத்தினபுரி அமைப்பாளர் ஆனந்தகுமார்




(படங்கள்: எம். நஸார்)



மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே ஜனாதிபதியின் நோக்கமெனவும் அதனால் அவர்களின் பாதுகாப்பு நிச்சயம் உறுதிப்படுத்தப்படுமெனவும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்

தும்புரை தோட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக அரங்கேறிய வன்முறைச் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மலையக சிவில் உரிமைக்கான இயக்கத்தால் இரத்தினபுரி நகரில் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. சிவில் சமூக அமைப்புகளின் கூட்டிணைவின் அழைப்பாளர் க. சிவராஜின் அழைப்பின் பேரில் சுப்பையா ஆனந்தகுமாரும் இதில் பங்கேற்ற போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியே இலங்கையில் சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையாகும். அவரது ஆட்சியின் கீழ் அனைவருக்கும் சம உரிமைகள் கிட்டும். எவருக்கும் பாகுபாடு காட்டப்பட மாட்டாது. சட்டம், ஒழுங்கு முறையாக செயற்படுமென்ற உத்தரவாதத்தை என்னால் வழங்க முடியும். மேலும் தும்புரை தோட்டத்தில் நடைபெற்ற சம்பவத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. தோட்ட அதிகாரிகளின் அராஜக சம்பவத்தை வன்மையாக கண்டிக்கிறோம். மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கும் தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். தோட்ட நிர்வாகத்துக்கு இது தொடர்பாக தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களானவர்கள் வேற்றுக் கிரகவாசிகள் அல்லர். இந்நாட்டுக்காக உழைத்தவர்கள், கூடையை மட்டும் அல்ல பொருளாதாரத்தையும் சுமப்பவர்கள். அவர்களின் வாழ்வு மேம்பட வேண்டும். அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு நாம் இடமளிக்கப் போவதில்லை" என்றார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட தலைவராகவும் நுவரெலியா தொகுதி அமைப்பாளராகவும் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் நேற்று (16) நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம். ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் அருகில் காணப்படுகிறார். (படம்: ஷான் ரூபஸ்சர)



அரசாங்க பாடசாலைகளில் தொழில்நுட்ப கல்வியை மேம்படுத்தும் நோக்கில் இந்தியாவிலிருந்து வருகை தந்த நிபுணத்துவ குழுவினர், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரை அமைச்சு அலுவலகத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது இராஜாங்க அமைச்சர் அவர்களுடன் இணைந்து எடுக்கப்பட்ட படம்.

## யுத்தத்தில் உயிரிழந்த படை வீரர் நினைவுகூரல் நிகழ்வு



**ஊவா சுழற்சி, லுணுகல நிருபர்கள்**

தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு ஊவா மாகாண படைவீரர் தின நிகழ்வான 'ரணவிரு சமரும்' நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை பதுளையில் அமைந்துள்ள ஊவா மாகாண படைவீரர் நினைவுத்தூபிக்கு அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் கலந்துகொண்டார். தேசியகீதம் இசைக்கப்பட்டு, உயிரிழந்த படை வீரர்களை நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் உயிரிழந்த படை வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## ஊவா மாகாண சபையால் 'ஜன சஹன' நடமாடும் சேவை

**லுணுகல நிருபர்**

ஊவா மாகாண சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊவா வெல்லஸ்ஸ 'ஜன சஹன' நடமாடும் சேவையின் இரண்டாவது வேலைத்திட்டம் நேற்று முன்தினம் வெல்லவாய மஹிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலின் எண்ணக்கருவுக்கமைய மாகாண சபையின் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகள் மக்களிடம் சென்று, அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கண், பற்சிகிச்சை, தொற்றாநோய் தொடர்பான அறிவுறுத்தல், ஆயுர்வேத மருத்துவ கிளினிக் சேவைகள், தொழிற்பயிற்சிகளில் இளைஞர், யுவதிகளை ஈடுபடுத்தல், புலமைப்பரிசில் திட்டம், காணி தொடர்பான சிக்கல்களுக்கு தீர்வு, பொது போக்குவரத்துச் சேவை தொடர்பான சிக்கல்களுக்கு தீர்வு, சாரதி பயிற்சிக்கான பதிவு, சிறிய, நடுத்தர தொழிலாளர்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்கல், தொழில் ரீதியான வழிகாட்டல் சேவை, கல்வி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு உள்ளிட்ட பல சேவைகள் இதன்போது பொது மக்களுக்காக முன்னெடுக்கப்பட்டன.

## சப்ரகமுவ மாகாணத்தில் 900 பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் 4,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் இதற்கு தீர்வாக 900 பட்டதாரி ஆசிரியர்களை அடுத்த மாதம் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய தெரிவித்தார்.

இதேவேளை இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் 740 அதிபர்களுக்கு வெற்றிடம் உள்ளதாகவும், அவர் கூறினார்.

இரத்தினபுரி மாவட்ட இணைப்புக் கமிட்டி கூட்டத்தின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் ஜனாதிபதியின் அனுமதியுடன் 900 பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான பரீட்சை நடத்தப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

மேலும் இந்த வருடத்தில் ஓய்வுபெறவுள்ள ஆசிரியர்களின் தொகையை சேர்க்கும் போது, இந்த வருட இறுதியில் சப்ரகமுவ மாகாணத்தில் 5,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

## இ.போ.ச. பேருந்து சாரதி மாரடைப்பால் மரணம்

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்தை செலுத்திச் சென்ற அதன் சாரதி ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.10 மணியளவில் நாவலப்பிட்டி நோக்கி புறப்பட்டுச் சென்ற பேருந்து சாரதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சாரதி தனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு, லிந்துலை பொலிஸ் பிரிவில் வீதியோரமாக பேருந்தை நிறுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து இச்சாரதி லிந்துலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். (ஆ. ரமேஸ்)

# பல்துறை ஆளுமைமிக்க கல்வியியலாளனாக திகழ்ந்த மர்ஹூம் டொக்டர் உமர் மௌலானா



கல்வி, சமூக சேவை, எழுத்து , மருத்துவம், சாரணியம், முதலுதவிப் படை, சமயம் என தமது எல்லைகளை அகல விரித்து வெற்றி கண்டவர் கல்விப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.எம். எம். எஸ்.உமர்மௌலானா.

சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய அவர் எதிர்வரும் செப்டம்பர் 18 ஆம் திகதி பணிஓய்வு பெறுவதற்காகக் காத்திருந்தார். ஆனால் அதற்கிடையில் அன்னார் இயற்கை எய்தி விட்டார்.

பண்டாராவளை ஹல்தும்முல்ல நீட்வூட் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 1984.12.27 இல் ஆசிரியப் பணியை ஆரம்பித்த மௌலானா, 1990 முதல் 1998 வரையிலான காலப்பகுதியில் தான் கல்வி கற்ற மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் ஆசிரியப் பணி மேற்கொண்டார். தமிழ்மொழி கற்பித்தலில் தனியொரு பாணியை உருவாக்கிய அவர் சாரணியம்,முதலுதவி, ஒழுக்கக் கட்டுப்பாடு என முக்கிய பகுதிகளில் அதிக ஈடுபாடு கொண்டு உழைத்தார்.

மருதமுனையில் அடக்கம் செய்யப்பட்ட செய்யது அப்துல் றஹ்மான் மௌலானாவின் பரம்பரையைச் சேர்ந்த உமர்மௌலானாவின் மூத்த வாப்பாவின் பெயரே இவருக்கு சூட்டப்பட்டது. கலாநிதி மௌலானா மார்க்க விடயங்களில் அதிகம் ஈடுபாடு காட்டினார். மருதமுனையில் ஜமாஅதே இஸ்லாமி, தௌஹீத் ஜமாஅத் கொள்கைகள் நிலைக்க பாடுபட்டவர்களில் முன்னணி அணியானார். தான் பிறந்த அக்பர் கிராமத்தில் கல்வி, சமய எழுச்சியில் மௌலானாவின் பங்கு அளப்பரியது.

கல்வி நிருவாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி 2007.03.12 இல் அச்சேவைக்குள் நுழைந்த மௌலானா கல்முனை, சம்மாந்துறை வலயங்களில் கல்வி நிருவாகப் பணியாற்றினார். 2018.11.23 இல் மட்டக்களப்பு மத்தி வலய கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற மௌலானா, 2022 இல் சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்று வந்து மரணிக்கும் வரை பணியாற்றினார்.

ஹோமியோபதி மருத்துவரான இவர் அத்துறையில் பிரபல்யமானார். கல்வி நிருவாக சேவைக்குள் இருக்கும் போதே மருதமுனை அல்மனார் மத்திய கலலூரியின் அதிபர் பொறுப்பை 2009 ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டார். 'அல்மாரின் 2 ஆவது மஜீத்' என்ற அடைமொழிக்குத் தகுதியாக பணிகளை நிறைவேற்றினார்.

1994ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர மாணவர்களான எங்களை வழிப்படுத்தி 'மனாரியன்' என்ற உணர்வுள்ள வட்டங்களை உருவாக்கினார். மருதமுனையில் 'இயன்கள்' பாடசாலைகளில் உருவாக்க வழியேற்படுத்தினார்.

பாடசாலையின் இருப்பினை கருத்திற்கொண்டு 'மகா சபை' உருவாக்க ஓய்வுநிலை அதிபர் அணியினருடன் உழைத்தார். அச் சபையின் தலைமைப் பொறுப்பை மௌலானா ஏற்ற போது இணைப்பாளராக நாம் தொழிற்பட்டோம். ஆண்,பெண் பாடசாலைகளின் உருவாக்கம் முன்னெடுக்கப்பட்ட போது அல்மனார் அணியினருக்கு தளபதியாய் நின்று உழைத்தார். அதன் விளைவாக அல்மனாரின் ஆரம்பப் பிரிவு பெண்கள் பகுதியாக வர தம் பங்களிப்பினை நல்கினார்.

மருதமுனை நெசவுத் தொழில் சர்வதேச மயமாக ஓய்வு பெற்ற பீடாதிபதி மர்ஹூம் ஏ.ஆர்.ஏ.அஸீஸினூடாக பங்களிப்புச் செய்தார். சர்வதேச தொண்டு நிறுவனங்களின் நிதியாண்மையில் அம்பாறை மாவட்ட விஷேட தேவையுடையோர் வலையமைப்பு ஒன்று உருவாக வழியேற்படுத்தி அதன் தலைவராக செயற்பட்டார். இதன் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்காக கற்பிக்கும் ஆசிரியர்களை மாதாந்தக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுத்து வழிநடத்தினார்.



பல்துறைசார் தம் அனுபவங்களை 'உன்னை நீயே விசாரி' என நூலாக்கம் செய்து அதனை ஒய்வினை அடுத்து வெளியிட கருக்கொண்ட வேளையில் அவர் மறைந்து விட்டார். மௌலானா மறைந்தாலும் அவர் விட்டுச் சென்றவைகளால் அவர் நாமம் என்றும் வாழும்.

**ஜெஸ்மி எம்.மூஸா** (M.Phil)...
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)







விளையாட்டுத்துறைமற்றும் இளைஞர் விவகாரஅமைச்சு

சனாதிபதிவிளையாட்டுவிருதுகள்~ 2024

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுத் துறையினைப் பிரதிநிதிவப்படுத்தி வெற்றிகளை ஈட்டிய வீரவீராங்கனைகளை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 2021 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் விளையாட்டுத்துறையில் ஆற்றல்களை வெளிக்காட்டிய வல்லுநர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதன் பொருட்டு சனாதிபதி விளையாட்டு விருதுகள் விழா-2024 ஆம் வருடத்திற்கு ஏற்புடையதாக கீழ்வரும் பிரிவுகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க. மகேசன்
செயலாளர்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

ஆண்டின் சிறந்த வீர வீராங்கனைகள் தொடர்பாக

1. மிகச் சிறந்த விளையாட்டு ஆளுமை
2. சிரேஷ்ட விளையாட்டு வீரர்களின் அணி
3. சிரேஷ்ட விளையாட்டு வீர வீராங்கனைளின் அணி
4. சிறந்த விளையாட்டு வீரன்
5. சிறந்த விளையாட்டு வீராங்கனை
6. விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீரர்களின் அணி
7. விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீராங்கனைகளின் அணி
8. விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீரன்
9. விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீராங்கனை.

குறிப்பிட்ட விளையாட்டுத் துறை தொடர்பாக.

20. ஆண்டின் திறமையான விளையாட்டு அறிஞர்
21. ஆண்டின் திறமையான விளையாட்டு மருத்துவர்
22. ஆண்டின் திறமையான மகிழ்வூட்டும் விளையாட்டு தொகுப்பாளர்
23. ஆண்டின் திறமையான விளையாட்டு மேம்படுத்துனர்
24. ஆண்டின் திறமையான விளையாட்டு மேம்படுத்துனர் (பாடசாலைகள் தொடர்பாக)
25. ஆண்டின் திறமையான விளையாட்டு புகைப்பட கலைஞர்

ஆண்டில் வளர்ந்து வரும் விளையாட்டு வீர வீராங்கனைகள்

10. திறமையான விளையாட்டு வீரர்களின் அணி
11. திறமையான விளையாட்டு வீர வீராங்கனைளின் அணி
12. திறமையான விளையாட்டு வீரன்
13. திறமையான விளையாட்டு வீராங்கனை
14. திறமையான விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீரர்களின் அணி
15. திறமையான விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீராங்கனைகளின் அணி
16. திறமையான விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீரன்
17. திறமையான விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீராங்கனை
18. திறமையான விசேட தேவை கொண்ட மத்தியகஸ்தர்/போட்டித் தீர்ப்பாளர்.
19. திறமையான பயிற்றுவிப்பாளர்



விண்ணப்பப் படிவங்களை 2024 .06. 07 ஆம் திகதி பி.ப 4.00 மணிக்கு முன்னர் நேரில் அல்லது பதிவுத் தபால் / மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கவும்.

தலைவர்
சனாதிபதி விளையாட்டு விருதுகள்- 2024
இல. 9 பிலிப் குணவர்தன மாவத்தை
கொழும்பு 07
Email :presidentialsportsawards@moys.gov.lk

சகல விபரங்கள் மற்றும் விண்ணப் படிவத்தின் பொருட்டு www.moys.gov.lk இற்கு பிரவேசிக்கவும். மேலதிக தொடர்புகளுக்கு
H. C. N. தர்மபால (பணிப்பாளர்- அபிவிருத்தி)- +94(0)718661776
K. G. சுபாசினி விஜயரட்ன (அபிவிருத்தி உத்தியோகஸ்தர்) - + 9494702421887

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# உண்மை: சுவனத்திற்கான பாதை

உலகத்தில் தோன்றிய எல்லா மதங்களும், சித்தாந்தங்களும் ஒப்புக்கொண்ட ஒரே நற்பண்பு 'உண்மை'. உண்மையாளனாக வாழ வேண்டும் என்பதை ஒவ்வொரு சராசரி மனிதனும் விரும்புகிறான். உண்மைக்கு புறம்பாக செயல்படும் மனிதர்கள் விரும்பப்படுவதுமில்லை, ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை. பொய்யானவர்கள் என்று சிலரை புரிந்து கொண்டதன் பிற்பாடு நிர்ப்பந்தமாக அவர்களோடு உறவாட கிடைத்தாலும் முழு மனதோடும், முக மலர்ச்சியோடும் அவர்களோடு உறவாட முடிவதில்லை. காரணம் பொய் முகங்களை எம்மால் அவ்வளவு எளிதாக ஏற்றுக்கொள்ளவோ, மறக்கவோ முடியாது.

இவைகளுக்கப்பால் எந்த மனிதனிடம் உண்மையில்லையோ அவனது வாழ்வில் உயிர்ப்பை இழந்து விடுகிறான். இதனால் அவனது வாழ்வு முழுவதுமே அர்த்தமற்றதாகி விடுகிறது. இதன் காரணமாகத்தான் இஸ்லாம் உண்மை எனும் உயரிய பண்பு குறித்து ஆழமான கவனத்தை செலுத்தியுள்ளது. அல்லாஹுதஆலா எம்மை உண்மையாளர்களாக வாழும்படியும், உண்மையாளர்களோடு சேர்ந்து இருக்கும் படியும் பின்வரும் வசனங்களில் குறிப்பிடுகின்றான்.

"ஈமான் கொண்ட விசுவாசிகளே....! அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். மேலும் நேர்மையான கூற்றையே கூறுங்கள். (அல் அஹ்சாப்: 70)

"ஈமான் கொண்ட விசுவாசிகளே! அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். மேலும் உண்மையானவர்களோடு இருங்கள் (தவ்பா: 119)



உண்மையாளர்களாக இருப்பதும், உண்மையாளர்களோடு சேர்ந்திருப்பதும் இஸ்லாமியர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து பிறப்பிக்கப்பட்டிருக்கும் மிக முக்கியமான ஒரு கட்டளையாகும். ஒரு மனிதன் தன்னை இஸ்லாமியனாக அடையாளப்படுத்துவதற்கான அடிப்படை பண்பாக அல்லாஹ் 'உண்மையை' வைத்திருக்கிறான்.

உண்மையாளர்களின் பட்டியலில் சேர்த்து விடும்படி பிரார்த்தனை செய்யுமாறு அல்லாஹ் எம்மை பணிக்கிறான். உலகத்தில் தோன்றிய மிகச்சிறந்த மனிதர்களாகிய நபிமார்களின் அடிப்படை பண்பாக உண்மை இருந்தது. அல்குர்ஆனில் பல இடங்களில் இது குறித்து அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் நுபுவத் கிடைப்பதற்கு முன்பே (அல் ஸாதிக்) உண்மையாளன் எனும் பட்டப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்கள். அவரிடம் காணப்பட்ட இவ்வுயரிய பண்பு நுபுவத் கிடைப்பதற்கு முன்பே அவரது சமூகத்தில் மிகப்பெரும் நன்மதிப்பை பெற்றுக் கொடுத்திருந்தது. அன்றைய அறியாமை சமூகம் கூட அவரோடு ஈர்ப்புக் கொண்டு அன்பாக நடப்பதற்கும், அவர் வார்த்தைகளை செவிமடுத்துக் கேட்பதற்கும் காரணமாக அமைந்தது.

இவ்வளவு சிறப்புகளை தாங்கி நிற்கும் 'உண்மை' எனும் இப்பண்பு முறையாகவும் முழுமையாகவும் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதனை இன்று பலரின் செயல்பாடுகள் உறுதி செய்கின்றன. உண்மை என்றால் நாவோடு மட்டும் சம்பந்தப்பட்ட ஒரு அம்சமாகவே பலராலும் பார்க்கப்படுகின்றது. நாவால் பேசப்படும் வார்த்தைகளில் உண்மை பேணப்பட வேண்டியது போல, ஒரு மனிதனது வெளிப்படையான மறைமுகமான செயற்பாடுகளிலும் உண்மை இருக்க வேண்டும் என்பதனை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு ஒரு மனிதன் உள்ளத்தால் எண்ணும் எண்ணங்களிலும் உண்மை இருக்க வேண்டும். உண்மையற்ற வார்த்தைகளையோ, எண்ணங்களையோ, செயற்பாடுகளையோ அல்லாஹ் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக உண்மைக்கு புறம்பாக செயல்படுபவர்கள் நரகத்தை நோக்கி செல்கிறார்கள் என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"உண்மை நன்மைக்கே வழிகாட்டும். நன்மை சுவனத்திற்கு வழிகாட்டும். ஒரு மனிதன் உண்மையைப் பேசி உண்மையை தேடினால் அல்லாஹ்வின் பதிவேட்டில் அவர் ஓர் உண்மையாளர் என்று அறியப்படுகின்றார். பொய் பாவத்திற்கு வழிகாட்டும். பாவம் நரகத்திற்கு வழிகாட்டும். ஒரு மனிதன் பொய் பேசும் காலம் எல்லாம் அல்லாஹ்வின் ஏட்டில் அவன் ஒரு பொய்யர் என்று அறியப்படுவார்" என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

'உண்மை' என்னும் உத்தமர்களின் உயரிய பண்பு ஒரு மனிதனது சுவர்க்கத்தை தீர்மானிக்கும் உயரிய சக்தி என்பதை மேற்படி நபிமொழி மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை மற்றுமொரு நபி மொழியில் நபி (ஸல்)அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள். "உண்மை பேசுவதை எனக்கு உத்தரவாதம் தாருங்கள். சுவனத்தை நான் உங்களுக்கு உத்தரவாதம் தருகிறேன்". (ஆதாரம்: அஹமத்).

நபி (ஸல்) அவர்கள் உண்மையாளனுக்கு சுவர்க்கத்தை உத்தரவாதம் கொடுத்துள்ளார்கள்.' உத்தம நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள். இதிலிருந்து உண்மை என்ற உன்னத பண்பின் மாண்பை எளிதாக புரிந்து கொள்ளலாம். இவ்வுயர் பண்பின் பெறுமானத்தை புரியாதவர்களையே இவ்வுலகில் இன்று அதிகம் காணக் கூடியதாக உள்ளது.

உண்மையாளர்களை காண்பது மிகவும் அரிதாகிவிட்டது. கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் உண்மையாக இல்லை. பெற்றோர்களுக்கு பிள்ளைகளும் பிள்ளைகளுக்கு பெற்றோர்களும், முதலாளிக்கு தொழிலாளர்களும் தொழிலாளிக்கு முதலாளியும், அண்டை வீட்டுக்காரனுக்கு அண்டை வீட்டுக்காரனும் உண்மையாக இல்லை.

இன்றைய நாகரீக வீச்சில் சிக்குண்டு பலரும் பொய்யான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த நூற்றாண்டில் வாழ வேண்டும் என்றால் பொய் சொல்லாமல் காலம் கடத்த முடியாது என்ற எண்ணம் பரவலாக மக்களிடம் இருக்கின்றது. உண்மை மட்டும் பேசுபவனை உதவாக்கரை என்று பட்டம் கொடுத்து ஒரு மூலையில் அமர வைத்திருக்கும் கேவலமான மனப்பதிவை இச்சமூகத்தின் மிகப்பெரும் சாபமாகவே கருத முடியும்.

பொய்யர்களால் ஆளப்படும் எந்த சமூகமும் ஆரோக்கியமான சமூகமாக ஒருபோதும் இருக்க முடியாது. தன் சுயலாபத்திற்காக கஞ்சனை கொடையாளி என்று புகழ்கிறான், கோழையை மாவீரன் என்று புகழ்கிறான். 'சமூகம்' என்ற பதத்திற்கான பொருளையே தெரியாதவனை சமூகத்தின் விடிவெள்ளியே என்று புகழ்ந்து தள்ளுகிறான்.

இவ்வாறு பொய்யாக புகழ்பவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு எச்சரித்தார்கள்: "பொய்யாகப் பிறரை புகழ்பவர்களின் முகங்களில் மண்ணை அள்ளி வீசுங்கள் என்று எங்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள் என அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்".

(ஆதாரம்; திர்மதி).

எந்த ஒரு விடயத்திற்காகவும் எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு முஸ்லிம் பொய் சொல்வதற்கான அனுமதியை இஸ்லாம் வழங்கவில்லை.

நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து இவ்வாறு கேட்டார்! இறைவனின் தூதரே! ஓர் இறை நம்பிக்கையாளன் கோழையாக இருப்பானா? அதற்கு நபி (ஸல்) அவர்கள் சில சமயம் இருக்கலாம்.... ஓர் இறை நம்பிக்கையாளன் கஞ்சனாக இருப்பானா? சில சமயம் இருக்கலாம்.... ஓர் இறை நம்பிக்கையாளன் பொய்யனாக இருப்பானா? அதுவரை ஒரு சுவர் மீது சாய்ந்த நிலையில் அமர்ந்திருந்த அண்ணலார் (ஸல்) அவர்கள் நிமிர்ந்து அமர்ந்தவராக இவ்வாறு கூறினார். இல்லை, இல்லை. ஒருபோதும் ஓர் இறை நம்பிக்கையாளன் பொய்யனாக இருக்க மாட்டான்"

(ஆதாரம்: திர்மதி).

இந்த நபிமொழியில் இருந்து ஒரு பொய்யன் இஸ்லாமியன் என்பதற்கான தகுதியை இழந்து விடுகிறான். மற்ற மனிதர்களை நயவஞ்சகத்தனமான முறையில் பொய் சொல்லி ஏமாற்றுபவர்களை இஸ்லாம் மிகப்பெரும் சமூக துரோகிகளாக அடையாளப்படுத்தி உள்ளது. இது குறித்த நபி (ஸல்) அவர்களது கூற்று மிக உன்னிப்பாக கவனிக்கத்தக்கதாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்! "பிறருக்கு நீ செய்யும் மோசடியிலேயே மிகப்பெரிய மோசடி எது தெரியுமா? நீ உண்மைதான் சொல்கிறாய் என்று நம்பும் உனது சகோதரனிடம் பொய்யை மட்டுமே நீ பேசுவது".

(ஆதாரம்: அபூதாவுத்).

எனவே நம் பொய்யான முகங்களை களைந்து உண்மையாளர்களாக வாழ்வதற்கான எத்தனங்களை மேற்கொள்ள வேண்டும். இதற்காக நாம் அல்லாஹ்விடம் எங்களை உண்மையாளர்களின் கூட்டத்தில் சேர்க்கும் படி பிரார்த்தனை செய்ய வேண்டும். அல்லாஹுத்தஆலா எம் அனைவரையும் உண்மையாளர்களின் கூட்டத்திலே சேர்த்தருளட்டும்.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons, (Al Azhar University, Egypt) M.A.&
PhD (International Islamic University, Malaysia)

# பொறாமையின் விபரீதங்கள்!

பொறாமை என்பது ஓர் உள நோயாகும். இது ஓர் இறை விசுவாசியிடம் இருக்கக்கூடாத கெட்ட குணம். ஒரு முஃமின் தான் விரும்புவதை தனது சகோதரனுக்கும் விரும்பாதவரை அவர் பூரண விசுவாசியாக முடியாது என்பது நபியின் வாக்கு. ஆகவே பிறர்மீது பொறாமை கொள்ளல் ஈமானை பலவீனப்படுத்தி விடும்.



பொறாமை என்பது ஒருவர் தன் சகோதரனிடம் இருக்கும் ஓர் இறையருள் தனக்கு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை அவரிடம் அது இருக்காது நீங்க வேண்டும் என்ற குறுகிய மனநிலை கொள்வதற்கு பொறாமை எனப்படும். இது ஒரு சைத்தானிய குணமாகும். இப்லீஸ் ஆதம் (அலை) அவர்களுக்கு சிரம் பணியுமாறு அல்லாஹ் கட்டளையிட்டபோது ஆணவம் மற்றும் பொறாமையின் காரணத்தினாலேயே அதற்கு அடிபணிய மறுத்தான். அதனால் சுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டு மறுமைநாள் வரைக்கும் சபிக்கப்பட்ட, தூக்கி வீசப்பட்ட கேவலமான ஒரு நிலையை அவன் அடைந்தான். இவ்வாறே ஆதம் நபியின் இது புதல்வர்களில் ஒருவர் மற்றவர் மீது பொறாமை கொண்டதனால் அவரைக் கொலைசெய்யும் நிலை ஏற்பட்டது. இவ்வாறே யூசுப் நபியின் சகோதரர்கள் யூசுபின் மீது பொறாமைப்பட்டு அவர்களை பாழடைந்த கிணற்றில் தள்ளி விட்டனர்.

பிறர் மீது பொறாமைப்படும் துர்க்குணம் கெட்டவர்களிடம் மாத்திரம் இருப்பதில்லை. சிலவேளை நல்லவர்களிடத்தில் கூட அது வந்து விடலாம்.

பொறாமை கொள்பவனுக்கு அவனது பொறாமையால் தன் எதிரிக்கு தீங்கு செய்ய முடிவதில்லை. மாறாக தனக்குத் தானே குழி வெட்டி அதில் தானே விழுந்து வேதனைப்படும் நிலை ஏற்படும். மறுமையில் தனது நற்செயல்களை தானே அழித்துக் கொள்ளும் ஒரு துரதிஷ்ட நிலை இதற்கும் அவன் உள்ளாவான்.

யூதர்களிடம் குடி கொண்டிருந்த பொறாமை மற்றும் பல இழி செயல்களினால் அல்லாஹ்வின் சாபத்துக்கும் கோபத்துக்கும் உள்ளாகி அவர்கள் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் மாற்றப்பட்டதாக அல்குர்ஆன் கூறுகின்றது.

நபியவர்கள் மீது கொண்ட பொறாமையினால் யூதர்கள் நபியவர்களை ஏற்க மறுத்ததன் விளைவு நபியவர்களின் தயவிலேயே அவர்கள் வாழ வேண்டிய நிலையை அல்லாஹ் மதீனாவில் தோற்றுவித்தான் . பின்னர் அவர்கள் மதீனாவை விட்டு வெளியேற்றப்பட்டு கேவலமடைந்த நிலைக்கும் உள்ளானார்கள். அவர்களின் பொறாமையும் இழி குணங்களுமே இதற்கு காரணமென அல் குர்ஆனும் ஹதீஸுகளும் எடுத்தியம்புகின்றன.

பொறாமை கொள்வதால் ஒரு மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புகளை இரு வகையாகப் பிரிக்கலாம். அவற்றில் ஒன்று உலகம் சார்ந்தவை. மற்றவை மறுமை சார்ந்தவை. பொதுவாக பொறாமை கொள்வது ஒரு பெரும் பாவமும் ஹராமுமாகும். நபி (ஸல்) கூறுகின்றார்கள். மக்களே நீங்கள் பொறாமை கொள்ளாதீர்கள்! பகைமை பாராட்டாதீர்கள்! கோபப்படாதீர்கள்! அல்லாஹ்வின் நல்லடியார்களாகவும் சகோதரத்துவத்துடனும் வாழுங்கள். (ஆதாரம்: புஹாரி)

ஒரு முஸ்லிம் பொறாமை கொள்வதால் பொறாமைக்காரனின் நற்செயல்கள் பொறாமை கொள்ளப்பட்டவரின் ஏட்டுக்கு மாற்றப்படுகின்றன. இறுதியில் நன்மைகள் பல செய்தும் வங்குரோட்டு நிலையடைந்து நரகம் செல்லும் துர்ப்பாக்கியத்தை பொறாமை பெற்றுத் தருகின்றது.

'நீங்கள் பொறாமைப் படுவதை எச்சரிக்கின்றேன். ஏனெனில் நெருப்பு விறகை எரிப்பது போல் பொறாமை நற்காரியங்களை அழித்து விடும்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: அபுதாவுத்)

இதேவேளை பொறாமை கொள்வதால் இறைவனின் கோபமும் அவனது பொது மன்னிப்புக்கான தகுதியை இழக்கும் நிலையும் ஏற்படலாம்.

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் அடியார்களின் நல்லமல்கள் இரு தடவைகள் இறைவனிடம் எடுத்துக்காட்டப்படுகின்றன. அவர்களின் அதிகமானோருக்கு பொது மன்னிப்பளிக்கும் அல்லாஹ் ஒருவருக்கொருவர் பொறாமையுடனும் வஞ்சகத்துடனும் இருந்தவர்களைப் பார்த்து இவ்விருவரும் தனது பொறாமையை விட்டு நீங்கி ஒற்றுமையாகும் வரை அவர்களின் பாவங்களை அப்படியே விட்டு வையுங்கள் என்று கூறி விடுகின்றான். (ஆதாரம் : முஸ்லிம்)

ஆகவே பொறாமையை தவிர்த்து அல்லாஹ்வின் அருளையும் அன்பையும் அடைந்து கொள்ள முயற்சிப்போம்.

மௌலவி ஏ.ஜி.எம்.ஜெலீல்...
(மதனி) பகுதித் தலைவர், விரிவுரையாளர்,
மஃஹதுஸ் ஸுன்னா அரபுக் கல்லூரி, காத்தான்குடி

# இஸ்லாம் வலியுறுத்தும் நீதி

மனித குலம் நாட்டின் பெயரால், மதத்தின் பெயரால், நிறத்தின் பெயரால், இனத்தின் பெயரால், மொழியின் பெயரால் உலகில் அதிகமான அழிவை சந்தித்துக் கொண்டிருக்கின்றது. இந்த அழிவிற்கும் அமைதி இன்மைக்கும் என்ன காரணம்? என்று பார்க்கும்போது, அது நீதி செலுத்துவதில் ஏற்பட்ட பின்னடைவே ஆகும்.

எங்கெல்லாம் நீதி நசுக்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் அழிவு என்பது தானாகவே வந்து விடுகிறது. அத்தகைய அழிவை இறைவன் இயற்கையின் சீற்றத்தைக் கொண்டும் ஏற்படுத்தி விடுகிறான்.

பாரபட்சமின்றி நீதி செலுத்துவதும், அதனை நிலை நாட்டுவதும், உண்மைக்கு சாட்சியாக இருப்பதும், அதனை நேசிக்கும் மனிதர்களுக்கு கட்டாயம் இருக்க வேண்டும். அது தனக்கோ தன்னைச் சார்ந்தவர்களுக்கோ, பெரும் பாதிப்பை ஏற்படுத்திய போதிலும் நீதி தவறக்கூடாது என்பதையும் அல் குர்ஆன் இவ்வாறு வலியுறுத்துகின்றது.

'முஃமின்களே! நீங்கள் நீதியின் மீது நிலைத்திருப்பவர்களாகவும், உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும், அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள். (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும் (உண்மையான சாட்சியம் கூறுங்கள்). ஏனெனில் அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதையுடையவன். எனவே நியாயம் வழங்குவதில் மன இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள். மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது (சாட்சி கூறுவதைப்) புறக்கணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான்'. (4:135)

நீதியை வலியுறுத்தும் அல் குர்ஆன் ஒரு நாட்டினருக்கோ, ஒரு மொழியினருக்கோ, ஒரு மதத்தினருக்கோ, ஓர் இனத்திற்கோ உரியது அல்ல. அது உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது.

'குர்ஆன்' என்ற வார்த்தைக்கு 'ஓதப்படுவது' என்பது பொருளாகும். அத்தகைய அல் குர்ஆன் உலகில் உள்ள அனைவராலும் ஓதப்பட வேண்டும், அதன் வழிகாட்டுதலின் படி யாவரும் நேர்வழி பெற வேண்டும் என்பதே அதன் உள்ளார்ந்த கருத்தாகும்.

அல் குர்ஆன், 'ஓ மனிதர்களே' என்றழைக்கிறது. 'ஆதமுடைய மக்களே' என உலக மக்களை அழைக்கின்றது. 'வேதத்தையுடையவர்களே', 'விசுவாசம் கொண்ட முஃமின்களே' என்றெல்லாம் கூறி நேர்வழியின் பக்கம் மனித குலத்தை அல் குர்ஆன் அழைத்துக் கொண்டே இருக்கிறது.



அல் குர்ஆனின் மேன்மை குறித்து நபி (ஸல்) அவர்கள் கூறியதை அலி (ரழி) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

'அல் குர்ஆன் அல்லாஹ்வின் வேதமாகும், அது உலகில் ஏற்படும் குழப்பங்களுக்கு தீர்வு காண்பதற்கு சிறந்த வழியாக இருக்கின்றது'. (நபிமொழி)

'உங்களுக்கு முன்னர் நடந்துள்ள செய்திகளும், உங்களுக்கு பின்னர் நடக்க போகின்ற நிகழ்வுகளும் அதில் உள்ளது. சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக் கூடிய குர்ஆன் பரிகாசமானது அல்ல'.

'அதனை பெருமை கொண்டு (பின்பற்றாது) எவர் விடுவாரோ, அவரை அல்லாஹ் துண்டு துண்டாக்கி விடுவான். குர்ஆனை விட்டு விட்டு, அது அல்லாததில் நேர்வழியை தேடுபவரை (அல்லாஹ்) வழிதவறச் செய்து விடுவான். ஞான உபதேசமான குர்ஆன் அல்லாஹ்வின் உறுதியான கயிறு ஆகும்'.

இதனை திரும்பத் திரும்ப ஓதுவதால் சளிப்பு ஏற்படாது, குர்ஆனுடைய ஆச்சரியங்கள் முடிவடைந்து விடாது, இதனை ஓதுகின்ற நாவுகள் பிசகி விடாது, இதனை உறுதி கூறியவர் உண்மை சொல்லிவிட்டார்'.

'இதனை செயல்படுத்தியவர் நன்மை வழங்கப்பட்டவராவார், இதனை கொண்டு தீர்ப்பு செய்தவர் நீதி செலுத்திவிட்டார், இதனை கொண்டு (மக்களை) நேர் வழியில் பக்கம் அழைத்தவர் நேர் வழிகாட்டி விட்டார்'. (ஆதாரம்: மிஷ்காத்).

தன் அறிவை பெரிதாக மதித்து பெருமையுடன் குர்ஆனின் நல்லுபதேசத்தை யார் புறக்கணிக்கிறார்களோ, அவர்களின் நிலை குறித்து குர்ஆன் இவ்வாறு பேசுகின்றது:

'எந்த மனிதன், கருணைமிக்க இறைவனின் அறிவுரையை விட்டு விட்டு அலட்சியமாக இருக்கின்றானோ, அவன் மீது ஒரு ஷைத்தானை நாம் ஏவிவிடுகின்றோம். அவன் இவனுக்கு நண்பனாகி விடுகின்றான்'. (43:36)

சைத்தான் ஒருவருக்கு நெருங்கிய நண்பனாகிவிட்டால் அழிவை தவிர அவர் எதிர்கொள்ளபோவது வேறொன்றுமில்லை. சைத்தானோ பேரழிவில் கொண்டுபோய் சேர்த்து விடுவான். எனவே குர்ஆனின் நேர்வழிகாட்டுதலின் படி நடந்து மகத்தான வாழ்வை பெறுவோம். பாவமான காரியங்களில் நடப்பதற்காகவே, நீதியை நாம் தவறவிடுகின்றோம். அதனால் ஏற்படும் நாசம், தரையிலும், கடலிலும் பரவி விட்டதையும், அதன் வேதனையை கண்ட பின்னராவது மனிதன் மனம் திருந்தி இறைவன் பக்கம் திரும்ப வேண்டும் என்பதையும் அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது:

'மக்கள் தங்கள் கைகளால் எதைச் சம்பாதித்தார்களோ, அதன் காரணமாக தரையிலும், கடலிலும் அராஜகமும் குழப்பமும் தோன்றிவிட்டிருக்கின்றன. அவர்கள் செய்த சில செயல்களின் விளைவை அவர்கள் சுவைப்பதற்காக! (அதனால்) அவர்கள் விலகிவிடக் கூடும்'. (30:41)

நியாயமாக நடப்பவர்கள் இறைவனை தவிர்த்து வேறு எதற்காகவும் அஞ்சுவதில்லை. நிம்மதியை இழப்பதில்லை. தன்னை சுற்றி எந்தச் சூழ்நிலை ஏற்பட்டாலும் அவர்கள் அதனை கண்டு பயப்படுவதில்லை. அத்தகைய நீதி மிக்கவர்களாக நாம் மாறுவோம்.

பிந்த் இஸ்மாயீல்...



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

01. அடுத்து வரும் உரு யாது?



…………..

i. ii. iii.

02. 8*l*, 5*l*, 3*l* கொள்ளளவுடைய 3 கொள்கலன்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இதில் 8*l* கொள்ளளவுடைய பாத்திரம் முழுமையாக நீரினால் நிரப்பப்பட்டுள்ளது. அந்த நீரை 4*l* வீதம் சமமாக இந்த மூன்று பாத்திரங்களிலும் ஊற்றி அளந்து கொள்ள

i. முடியும்
ii. முடியாது
iii. கூற முடியாது




03. எல்லா மிருகங்களும் பாய்ந்து பாய்ந்து செல்லும்.
யானை ஒரு மிருகம்
ஆகவே யானை ………………..

i. நடந்து செல்லும் ii. பாய்ந்து பாய்ந்து செல்லும்
iii. ஊர்ந்து செல்லும்

04. கீழுள்ள உருவில் $\frac{4}{8}$ ஐ நிழற்றுவதற்கு இன்னும் எத்தனை கூட்டங்கள் நிழற்ற வேண்டும்?

i. 5
ii. 3
iii. 4



05.  = 600ml

 = 200ml

 சமனாவது எதற்கு?

i. 1200ml ii. 1800ml iii. 900 ml

06. கீழே சதுரமுகியொன்றின் வெவ்வேறு பக்கங்கள் காட்டப்பட்டுள்ளது




இதில் B எனும் எழுத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து எது?

i. D ii. C iii. E

07. கிழங்கு 1kg + சீனி 500g → ரூ. 240.00
பருப்பு 500g + கிழங்கு 1kg → ரூ. 290.00
கிழங்கு 2kg + பருப்பு 500g + சீனி 500g இன் விலை யாது?

i. ரூ. 530.00 ii. ரூ. 520.00 iii. ரூ. 580.00

08. தரப்பட்ட உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

i. 11
ii. 10
iii. 12



09. 2025 ஜனவரி 01ஆம் திகதி புதன்கிழமை எனின் அந்த வருடத்தில் ஜூலை 10ஆந் திகதி என்ன கிழமையாகும்?

i. புதன் ii. வெள்ளி iii. வியாழன்

10. வட்ட வடிவிலான காணியொன்றின் சம தூரத்தில் 3 கொடித் தூண்கள் நடப்பட்டுள்ளன. அந்த கொடித்தூண்கள் இரண்டிற்கும் இடையில் 3 பூச்சாடிகள் வைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள பூச்சாடிகளின் மொத்த எண்ணிக்கை 30 எனில் அங்கு உள்ள கொடித் தூண்களின் எண்ணிக்கை யாது?

i. 10 ii. 11 iii. 9

11. கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | 3 | ப | 5 | S | 9 | ண | 5 |

i. இலக்கங்களை விட எழுத்துக்கள் அதிகம்
ii. எழுத்துக்களை விட இலக்கங்கள் அதிகம்
iii. எழுத்துக்களும் இலக்கங்களும் சமம்

12.  இதன் நிறை 15kg ஆயின்  இதன் நிறை,

i. 7kg ii. 8kg iii. 7.5 kg

13.  +  +  = **28kg** ஆயின்  இதன் நிறை,

i. 30kg ii. 5kg 500g iii. 40 kg

14. அம்மா தன்னிடம் இருந்த பணத்தின் $\frac{1}{2}$ பங்கைபுத்தகங்களை வாங்குவதற்காக செலவிட்டார். மிகுதிப் பணத்தை இரண்டு சம பங்குகளாகப் பிரித்து அதன் ஒரு பங்கை பழங்கள் வாங்குவதற்கு செலவிட்டார். அவரிடம் மிகுதியாக இருந்தது ரூபாய் 50.00 ஆகும். அவள் புத்தகம் வாங்குவதற்காக செலவிட்ட பணம் எவ்வளவு?

i. ரூபாய் 50.00 ii. ரூபாய் 100.00 iii. ரூபாய். 200.00

15. சாரதாவின் தற்போதைய வயது 12 வருடங்களாகும். அது அவருடைய தங்கையின் வயதின் 4 மடங்காகும். சாரதா இன்னும் எத்தனை வருடங்களில் தனது தங்கையின் வயதின் இரு மடங்கை அடைவாள்?

i. 6 வருடங்களில் ii. 10 வருடங்களில் iii. 3 வருடங்களில்

16. 100 இன் $\frac{1}{2}$ ஐ 4ஆல் பெருக்கி 5ஐக் கூட்டினால் பெறப்படுவது?

i. 25 ii. 30 iii. 205

17. பின்வரும் நிகழ்ச்சி நிரலை சரியான முறையில் ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க.

A – பரிசும் சான்றிதலும் வழங்குதல்
B – நன்றியுரை
C - வரவேற்புரை
D – மங்கள விளக்கேற்றல்
E - சமய வழிபாடு

i. DECAB ii. DECBA iii. ACBDE

- வாழைப்பழங்கள் 2 இன் விலை ரூபாய் 30.00 ஆகும். கொய்யாப்பழம் ஒன்றின் விலை வாழைப்பழம் ஒன்றின் விலையை விட 5 ரூபாய் அதிகமாகும். மாம்பழம் ஒன்றின் விலையானது வாழைப்பழம் ஒன்றினதும் கொய்யாப்பழம் ஒன்றினதும் கூட்டுத்தொகைக்கு சமனாகும்.

18. கொய்யாப் பழத்தின் விலை

i. ரூபாய் 20.00 ii. ரூபாய் 15.00 iii. ரூபாய் 10.00

19. மாம்பழத்தின் விலை

i. ரூபாய் 35.00 ii. ரூபாய் 40.00 iii. ரூபாய் 45.00

20. இவ்வுருவில் நிறந்தீட்டப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்

i. $\frac{1}{8}$
ii. $\frac{4}{8}$
iii. $\frac{7}{8}$



21.  ஆனது 4785 எனக் குறிப்பிடின்  **0** என்பது பின்வருவனவற்றுள் யாதாக இருக்கலாம்?

i. 7849 ii. 7858 iii. 8769

22. ஒரு பிரயாணத்தில் $\frac{7}{10}$ தூரத்தை முடித்த ஒருவர் அப்பிரயாணத்தை சம்பூரணமாக முடிப்பதற்கு இன்னும் 9 கிலோ மீற்றர் செல்ல வேண்டி இருப்பின், அப்பிரயாணத்திற்கான மொத்த தூரம்

i. 28 km ii. 40 km iii. 30 km

23. ஒரு சதுர வடிவக் காணியின் ஒரு பக்க நீளம் 20m ஆகும். இதனைச் சுற்றி 2m இடைவெளியில் வேலிக் கம்பம் நடப்படின் தேவையான கம்பங்கள் எத்தனை?

i. 40 ii. 20 iii. 36

24. 2020 ஆம் ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின், அதே வருடம் டிசெம்பர் 31ஆம் திகதி என்ன நாள்?

i. சனிக்கிழமை ii. ஞாயிற்றுக் கிழமை iii. திங்கட் கிழமை

25. 1964 ஆம் ஆண்டு எத்தனையாவது நூற்றாண்டிற்குரியது

i. 20 ii. 18 iii. 19

26. அம்மா செவ்வாய்க்கிழமை காலையில் இருந்து தினமும் ரூபா 50.00ஐ ஒரு உண்டியலில் இட்டு மாலை அதிலிருந்து ரூபா. 25.00 திரும்ப எடுப்பார். உண்டியலில் முதல் தடவையாக ரூபா 100.00 சேர்வது எத்தினத்திலாகும்.

i. புதன் மாலை ii. வியாழன் காலை iii. வெள்ளி மாலை

27. A எனும் பிள்ளை கிழக்குத் திசையில் 50 மீற்றர் பயணம் செய்து, தமது இடது கைப்பக்கம் திரும்பி மேலும் 10 மீற்றர் தூரம் பயணம் செய்து, மீண்டும் தமது இடது கைப்பக்கம் திரும்பி மேலும் 30 மீற்றர் பயணித்தார். தற்போது அவர் நிற்கும் திசை யாது?

i. கிழக்குத் திசையில் ii. மேற்குத் திசையில் iii. வடக்குத் திசையில்

28. கம்பியொன்றை மடித்து சமபக்க முக்கோணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பக்க நீளம் 8cm ஆகும். அக்கம்பியில் ஒரு சதுரம் அமைக்கப்படின் அச்சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?

i. 8 cm ii. 4 cm iii. 6 cm

29. அருளின் மகள் மதிவதனி. மதிவதனியின் மகள் சித்மி, சித்மியின் மாமா விபுலாநந்தன் ஆயின் சித்மிக்கும் அருளிற்கும் உள்ள உறவு யாது?

i. பேத்தியும் - பாட்டனும் ii. மாமாவும் - மருமகளும்
iii. சிறிய தந்தையும் - மகளும்

30. கோலத்திற்கேற்ப வெற்றிடத்துக்கு பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

i. 8
ii. 11
iii. 12




31. கீழே காட்டப்பட்டுள்ள கனவுருவில் நிழற்றப்பட்ட பகுதி வெட்டி நீக்கப்பட்டுள்ளது. இப்போது எஞ்சியுள்ள பகுதியில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

i. 7
ii. 8
iii. 10



(12ஆம் பக்கம் பார்க்க)

(11 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

32. மூன்று பிள்ளைகள் ஓரிடத்தில் ஆரம்பித்து 600m தூரம் ஓடினார்கள். ஒரு பிள்ளை ஓடிய தூரமாவது,
i. 600m ii. 200m iii. 400m

33. இரண்டு பக்கங்களிலும் சமமாக உள்ள வரியைத் தெரிவு செய்யுங்கள்.
i. 7 8 9 1 5 - 5 1 8 9 6 ii. K P T R A - A K P T R
iii. ○ △ ▭ □ - ○ ○ △ ▭

34. ஒரு பென்சிலின் விலை 6 ரூபாய் 50 சதம். ஒரு பேனாவின் விலை 8 ரூபாய் 50 சதம். இரண்டினதும் மொத்த விலை யாது?
i. ரூபாய் 10 சதம் 50 ii. ரூபாய் 14.00 iii. ரூபாய் 15.00

35. ஒரு பிள்ளைக்கு 8 புத்தகங்கள் வீதம் கிடைக்கக்கூடியதாக 864 புத்தகங்கள் பங்கிடப்பட்டன. அப்புத்தகங்களை எத்தனை பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்?
i. 108 ii. 110 iii. 120

36. 969 → 699 → 996 → ...... இடைவெளிக்கு வரவேண்டிய எண்?
i. 699 ii. 969 iii. 996

37. தொடக்கத்திலுள்ள உருவில் குறைவாக இருக்கும் விடையைத் தெரிவு செய்க.



i. ii. iii.

38. கீழேயுள்ள படத்தின் உள்ளே காணக்கூடிய செங்கோணங்களின் எண்ணிக்கை
i. 10
ii. 15
iii. 20



39. சதுரவடிவான ஒரு கடதாசியை நான்காக மடிக்கப்பட்டு படத்தில் காட்டியவாறு துளையிடப்பட்டது



கதடாசியை விரிக்கும் போது தோன்றும் உரு.



i. ii. iii.

40. ஒரு கம்பியின் இரு அந்தங்களும் ஒன்றை ஒன்று தொடுமாறு படத்தில் காட்டியவாறு மடிக்கப்படும் போது தோன்றும் உரு?





i. ii. iii.

# கடந்த வார (10.05.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. நல்ல
02. கவி
03. மரம்
04. ஆடும்
05. அழுகிறது
06. குட்டி / பறழ்
07. i. விவசாயிகள் மண்வெட்டிகளை எடுத்துக் கொண்டு காலையில் வயலுக்குச் சென்றனர்.
ii. பிள்ளைகள் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்கின்றனர்.
08. தொடர்ந்தது
09. இயற்றிய
10. தொடங்கியது

**II.**
11. i. அன்வர் கடுமையான காய்ச்சலால் துன்பப்பட்டான்.
ii. நாம் அஞ்சல் நிலையத்தினால் பல வகையான நன்மைகளை அடைகிறோம்.
12. i. நீ ii. நூலகம் iii. பூக்கள் iv. கேத்தல்
13. i. நாய் ii. ஓடியது iii. முயலை
14. i. கொடையாளி ii. சுத்தவாளி
iii. அறிவியல் iv. புளியங்காய்
15. i. கீச்சிடும் ii. உறுமும்
iii. கனைக்கும் iv. குரைக்கும்
16. i. குடு குடு ii. கணீர் கணீர்
iii. கல கல iv. மட மட
17. i. மாரி - கோடை ii. இலாபம் - நட்டம் iii. வரவு - செலவு
அ. தோல்வி - வெற்றி ஆ. அழிவு - ஆக்கம் இ. மறுமை - இம்மை
18. i. பளபள ii. நறநற
19. i. குடய ii. மொனறா
20. i. தயவுசெய்து உட்காருங்கள்
ii. This is my book

**III.**
21. அறுபத்து நான்காயிரத்து முந்நூற்று பதினொன்று
22. 9854
23. i. V ii. IX
24. i. 10, 5 ii. 8, 20
25. 2
26. i. 2 ii.



27. 5741
28. ரூபாய் 394.00
29. 12, 16

**IV.**

| | | |
|---|---|---|
| 30. 2 | 39. 2 | 49. 2 |
| 31. 1 | 40. 3 | 50. 2 |
| 32. 3 | 41. 3 | 51. 3 |
| 33. 2 | 42. 1 | 52. 2 |
| 34. 3 | 43. 3 | 53. 3 |
| 35. 1 | 44. 2 | 54. 2 |
| 36. 3 | 45. 3 | 55. 1 |
| 37. 3 | 46. 1 | 56. 3 |
| 38. 1 | 47. 2 | 57. 2 |
| | 48. 2 | 58. 3 |
| | | 59. 1 |

# மட்டக்களப்பு மாவட்ட காணி பிணக்குகளை ஆராயும் கலந்துரையாடல்





மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் காணி பிணக்குகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது மயிலத்தமடு, மாதவனை மற்றும் எல்லையோர காணிப்பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதோடு மகாவலி அதிகார சபையினால் மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் அறிக்கை செய்யப்பட்டது. மேலும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்கள் இணைந்து மாவட்ட எல்லைப்பிரச்சினைகளை சுமூகமாக தீர்த்து வைத்ததுடன், அப்பிரதேச மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் காணிகளை பகிர்ந்தளிக்குமாறு இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் இதன்போது பணிப்புரை விடுத்திருந்தார். இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந், திருமதி நவருபரஞ்சினி முகுந்தன் (காணி), பிரதேச செயலாளர்கள், மகாவலி அதிகார சபையின் உயர் அதிகாரிகள், நில அளவை திணைக்கள அதிகாரிகள், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரின் பிரத்தியோக செயலாளர் த.தஜீவரன், வன ஜீவராசிகள் திணைக்க உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# பதவிஸ்ரீபுர பிரதேசத்தில் ஆளுநரால் வைத்தியசாலை திறந்து வைப்பு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் அதி கஷ்டப் பிரதேச மக்களின் சுகாதார சேவையை மேம்படுத்தும் நோக்கில் பதவிஸ்ரீபுரவில் பிரதேச வைத்தியசாலையொன்று நிறுவப்பட்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 35 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியசாலையால் அப்பிரதேச மக்கள் பெரும் நன்மையடையவுள்ளனர்.

# அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் இரத்ததான நிகழ்வு



(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று இரத்த வங்கியில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை கருத்திற் கொண்டு அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு நேற்று (16) நடைபெற்றது. 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வியியற் கல்லூரியின் 2022/2024 ஆம் பிரிவு ஆசிரிய பயிலுநர்கள், கல்வி, கல்விசாரா உத்தியோகத்தர்கள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர். அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து அட்டாளைச்சேனை தேசிய கல்வியயிற் கல்லூரி ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு முழு நாள் நிகழ்வாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் வர்த்தக நிலையங்களில் சோதனை



சம்மாந்து றை சுகாதார வைத்திய அதிகா ரி பிரிவில் பாரிய வர்த்தக சோதனை (Mass Trade inspection) நேற்று நடைபெற்றது.

சம்மாந்துறையுடன் காரைதீவு, நிந்தவூர், இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரிகளும், அவர்களது சிரேஷ்ட மற்றும் பொதுச் சுகாதார அதிகாரிகளும் இணைந்து பாரியளவிலான சோதனையை நடாத்தினர்.

சுமார் 67 விற்பனை நிலையங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது மனித பாவனைக்கு தவாத உணவுப் பொருட்களை தம் வசம் வைத்திருந்த 13 விற்பனை நிலையங்களிலிருந்து உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டன.

தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட 13 நிறுவனங்களுக்கு எதிராக ரூ.105000 தண்டப்பணம் அறவிடப்பட்டது.

# பொத்துவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி கலந்துரையாடல்

(பாலமுனை விசேட நிருபர்)



பொத்துவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆகியோரின் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் (15) பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வைத்திய அத்தியட்சகர் ஏ.பி.மசூத், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர், வைத்திய அதிகாரிகளான டொக்டர் எம்.எம்.எம்.றஹீம், டொக்டர் எஸ்.எச்.எம்.யசீர், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு தலைவர் டொக்டர் எப்.எம். உவைஸ் உள்ளிட்ட அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலைக்குரிய Master plan தயாரித்தல், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்களுக்கான விடுதி வசதிகள் குறித்தும் வைத்தியசாலைக்கு மேலதிக காணியினைப் பெற்றுக்கொள்ளல், வைத்திய நிபுணர்களை நியமித்தல் மற்றும் ஏனைய ஆளணி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள், நோயாளர் விடுதிகளுக்குத் தேவையான மெத்தைகள் (Matres) என்பன பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பிராந்திய பணிப்பாளர் ஆகியோரினால் வைத்திய அத்தியட்சகரிடம் கையளிக்கப்பட்டது.

# கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வரலாற்று நினைவுக்கல் திறப்பு





(துறைநீலாவணை நிருபர்)

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வரலாற்று நினைவுக்கல் திறப்பு விழா அதன் பணிப்பாளர் வைத்திய கலாநிதி யு.பீ.சுளு சந்திரசேன தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகருமான வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் கலந்து கொண்டு நாடாவை வெட்டி நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்து வைத்தார்.

மேலும் நினைவுக் கல்லை நிர்மாணிப்பதற்கான நிதியுதவியை வழங்கிய பிரபல சமூக சேவையாளரும் தொழிலதிபருமான க.பிரகலதனின் சேவையைப் பாராட்டி வைத்தியகலாநிதி இரா.முரளீஸ்வரன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# திருடர்களை பிடிப்போமென்ற கோஷம் அரசியல் மேடைகளில் இனி இல்லை



## ஜனாதிபதி சட்டத்தரணி யு. ஆர்.த சில்வா

இந்த நாட்டின் அரசியல் அரங்கில் பரபரப்பாக பேசப்பட்ட தலைப்பான ஊழலை தவிர்த்தல், திருடர்களை பிடிப்பது போன்ற கோஷங்களை யதார்த்தமாக மாற்றுவதற்கு கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கம் பல புதிய சட்டங்களை உருவாக்கியுள்ளது. புதிய சட்டங்கள் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கும்? என்பது தொடர்பாக ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர். த சில்வாவுடனான கலந்துரையாடல்.

**கேள்வி; திருடர்களைப் பிடிப்பது மற்றும் ஊழலைத் தவிர்ப்பது என்பது பல தசாப்தங்களாக தேர்தல்களின் போது எழுப்பப்படும் முழக்கங்களாகப் பார்க்கப்படலாம். ஆனால் அவை இப்போது வரை வெறும் கோஷங்களாகவே இருந்தனவே தவிர , அவை யதார்த்தமாக மாறவில்லை. இந்த நிலைமை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

அரசியல் அரங்கில், ஏமாற்றிய திருடர்களைப் பிடி, அல்லது இவர்கள் திருடர்கள் என்ற முழக்கம், வாக்காளர்களை ஏமாற்றும் முழக்கமாக மட்டுமே மாறியிருந்தது. இந்தக் காலக்கட்டத்தில் ஆட்சிக்கு வந்த அனைவரும் திருடர்களை பிடிப்போம் என கூறினர், ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் திருடர்களை பிடிக்கவில்லை. சிலர் திருடர்களைப் பிடிக்க பல்வேறு வழிகளில் முயற்சித்தார்கள். ஆனால் அது வெற்றியளிக்கவில்லை. திருடர்களைப் பிடிக்கவும், லஞ்சம் ஒழிக்கவும் வாய்ப்பு இல்லாததே இதற்கு முக்கியக் காரணம். திருடர்களைப் பிடிப்போம், லஞ்சத்தை நிறுத்துவோம் என்று சொன்னாலும், அவர்களைத் தடுக்க சரியான சட்ட அமைப்பு இல்லை. இவற்றைக் கட்டுப்படுத்த சரியான சட்ட அமைப்பு இல்லாததே முக்கியக் காரணம். எனவே, மேடைகளில் பேசுவதற்கு பதிலாக, லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக வலுவான சட்ட அமைப்பை உருவாக்க வேண்டும் என்பது ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் நான் நினைத்த ஒன்று. ஆனால், இது வரை ஆட்சிக்கு வந்த எந்தத் தலைவரும், அரசும் நேர்மையாக இதில் கவனம் செலுத்தவில்லை. ஆனால், நாட்டு மக்களிடையே லஞ்சம், ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்ற வலுவான கருத்து நிலவியது. அதனால்தான் அந்த முழக்கம் கடந்த காலங்களில் சமூகத்தில் அதிகமாகக் கேட்டது.

**கேள்வி; ஊழலுக்கு எதிரான சட்டம் குறித்த உங்கள் கருத்தை விளக்க முடியுமா?**

ஊழலுக்கு எதிரான சட்டங்கள் மூலம் இந் நாட்டில் சட்டம் மேலும் வலுப்படுகிறது, அதன் மூலம் ஊழல் கட்டுப்படுத்தப்படுவதோடு பொருளாதாரம் வலுப்படவும் இடமுண்டு. இதுவரை அனைவரும் பேசினாலும் ஏற்படுத்தப்படாத ஊழல் தடுப்புச்சட்டங்கள் சமீப காலமாக ஏராளமாக இயற்றப்பட்டுள்ளன.

**கேள்வி; நீங்கள் குறிப்பிடும். சட்ட அமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் பெரும் மோசடியாளர்களுக்குப் பதிலாக, சாதாரண மக்களே பிடிபடுவார்கள் என சில தரப்பினர் தங்கள் சந்தேகங்களை வெளியிடுகிறார்கள் அல்லவா?**

இப்படி ஒரு சந்தேகம் ஒருவருக்கு எழுவது நியாயமானதே. ஆனால் கடந்த காலங்களில் , புதிய சட்டங்களை உருவாக்கியதன் மூலம் லஞ்சத்தை குறைக்க அரசாங்கம் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது. உண்மையில், கடந்த இரண்டு ஆண்டுகளில், சட்டம், நீதி, ஊழலைக் குறைத்தல், லஞ்சத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற முக்கியக் கூறுகளை இலக்காகக் கொண்டு பல சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உண்மையில், இந்த கடுமையான சட்டங்களை இயற்றும் பணி மூலம் எமது நாடு உலகுக்கே எடுத்துக்காட்டாக திகழ்கின்றது.

சில அரசு நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களின் இழப்புக்கு அவற்றின் பணிப்பாளர்கள் மற்றும் தலைவர்களின் ஊழல் முக்கிய காரணமாக மாறியுள்ளது. ஆனால் தமது பதவியை இழந்து ஓய்வு பெறுகிறார்கள். இல்லையென்றால், வேறு நிறுவனத்திற்குச் செல்கிறார்கள். ஆனால், அவர்கள் பணிப்பாளர்களாக இருந்த நிறுவனங்கள் தொடர்ந்தும் சரிவடைந்து வங்குரோத்து நிலைமையை அடைகின்றன. ஆனால் பணிப்பாளர்கள் குழு அல்லது நிறுவனத்தை விட்டு வெளியேறிய தலைவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படாது, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் பொதுச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் சட்டத்தை நடைமுறைப் படுத்த புதிய சட்ட அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய ஓட்டைகளை அடைத்து, இன்று உருவாக்கப்பட்டுள்ள புதிய சட்டங்கள், பெரிய அளவிலான ஊழலை நிறுத்தவும், அடுத்த கட்டமாக ஊழல், லஞ்சத்தை தடுக்கவும் உதவும். புதிய சட்டங்களைத் இயற்றுவதன் மூலம் நாட்டில் இது போன்ற முறைகேடுகள், ஊழல், லஞ்சம் ஆகியவற்றைக் குறைக்க முடியும் என்பது மகிழ்ச்சியளிக்கும் உண்மையாகும்.

**கேள்வி; கடன் வாங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் கடந்த காலத்தில் ஊழல் மற்றும் மோசடிக்கான முக்கிய காரணிகளாக அறியப்பட்டன. இதில் உங்கள் கருத்து என்ன?**

நம் நாட்டில் கடன் வாங்குவது பற்றி தவறான பிம்பமும், தவறான கருத்தும் நிலவுவதால், கடன் வாங்கிய உடனேயே பெரிய மோசடி செய்பவராகி விடுவார் என்ற கருத்து சமூகத்தில் இருக்கும் அளவுக்கு இருக்கிறது. சர்வதேச அளவில் அதிக அளவு பணம் கடன் வாங்கப்பட்டபோது, அதில் கணிசமான சதவீத பணம் விரயமாக்கப்பட்டுள்ள து, கடன் வாங்குவது மோசமான விடயமல்ல. ஆனால் கடந்த காலங்களில் கடன் தொகையை முறையாக பயன்படுத்தாமல் ஊழலுக்கும், வீண் விரயத்துக்கும் வழிவகுத்த சம்பவங்களை பார்த்திருக்கிறோம். அதனால் கடன் வீணானது. உண்மையில், இறுதி விளைவாக நம் நாடு வங்குரோத்தானது.

இந் நிலைக்கு கடன் வாங்குவது பற்றியோ, கடனை முறையாகப் பயன்படுத்தாதது குறித்தோ விசாரணை கூட இல்லாமையே முக்கியக் காரணம். ஆனால் தற்போது இந்தப் பிரச்சினையையும் கருத்தில் கொண்டு புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியம் கூட இதை உன்னிப்பாக கவனித்து வருகிறது. எனவே, எதிர்காலத்தில், சர்வதேசக் கடன்களைப் பெற்ற பிறகு, அவற்றைச் செலவு செய்வதில் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும். அதற்கான விரிவான சட்ட அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கேள்வி; முறையான ஊழல் தடுப்பு மற்றும் திருட்டு தடுப்புச் சட்டங்களை இயற்றுவதன் மூலம் திருட்டு,லஞ்சம் மற்றும் ஊழலை கட்டுப்படுத்த முடியும் என்று நம்புகிறீர்களா?

ஆம். சரியான சட்ட அமைப்பை உருவாக்காமல் என்ன செய்தாலும் பலனில்லை. அப்படிச் செய்வது நேரத்தை வீணடிக்கத்தான் செய்யும். ஊழலையும், திருட்டையும் ஒழிக்க கடந்த காலத்தில் சிறப்புப் பிரிவுகளைக் கூட உருவாக்கினோம் என்பதை நினைவில் கொள்கிறோம். திருடர்களை பிடிக்க முயன்றவர்களுக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை. தற்போதுள்ள சட்டம் கடுமையான சட்டம் அல்ல. இதன் விளைவாக இந்த செயல்முறை தோல்வியடைந்தது. ஆனால் அந்தச் சட்டத்தை யாரும் நடைமுறைப்படுத்த முயற்சி செய்யாவிட்டாலும் அது வெற்றியடையாததால் இதை ஆழமாகப் பரிசீலித்து தேவையான நடவடிக்கையாக புதிய சட்டங்களை உருவாக்க முடியும். மேலும், 2031 ஆம் ஆண்டிற்குள், நாட்டின் கடன்களை கணிசமான அளவு குறைக்கும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இவற்றின் காரணமாக, நம் நாட்டில் ஊழலைக் குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**கேள்வி; பல தசாப்தங்களாக, மத்திய வங்கி ஒரு சுயாதீன நிறுவனமாக செயல்படவில்லை. பல்வேறு அரசியல் நலன்களுக்காக செயல்படும் நிறுவனமாக காணப்பட்டது. தற்போது மத்திய வங்கி ஒரு சுயாதீன நிறுவனமாக செயற்படுகின்ற நிலையில், இந்த நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஊழலை நிறுத்துவதற்கும் எவ்வாறான ஆதரவு வழங்கப்படுகின்றது?**

நீங்கள் கூறியது போல், கடந்த காலங்களில் மத்திய வங்கி ஒரு அரசியல் கட்சியினது அல்லது அவ்வேளையில் இருந்த அரசாங்கங்களின் அதிகாரங்களின் ஒரு பகுதியாக இயங்கியது. அப்போது மத்திய வங்கி அரசியல் தேவைகளை நிறைவேற்றும் வகையில் செயல்பட்டு வந்தது. தொலைநோக்கின்றி அவ்வேளையில் வேலை செய்ததாகத் தெரிகிறது. இறுதி முடிவு என்னவென்றால், கடந்த காலத்தில் பொருளாதார நெருக்கடியை நாங்கள் அனுபவித்தோம், ஆனால் இப்போது அந்த நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுக்க அரசாங்கம் உழைத்துள்ளது, அதன் பலனாக தான் மத்திய வங்கி சுயாதீனமாக முடிவுகளை எடுக்கும் ஒரு நிறுவனமாக நடவடிக்கையில் ஈடுபட தேவையான சட்டம் மற்றும் சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்துள்ளது.

தற்போது மத்திய வங்கி எவ்வித அரசியல் கட்சிக்கும் சார்பில்லாத சுயாதீன முடிவெடுக்கும் அணுகுமுறை கொண்டது என்று கூறினால் தவறில்லை. மத்திய வங்கி பொம்மையாக இல்லாமல் சுயாதீனமாக வேலை செய்ய தேவையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது மற்றும் அதற்கான சட்டத்தை இயற்றியது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு பாராட்டைத் தெரிவிக்க வேண்டும்.

**கேள்வி; கோப் குழுக்கள் போன்ற நிறுவனங்கள் இருந்தாலும், அவற்றிற்கு நடைமுறைப்படுத்துவதற்குப் போதிய அதிகாரங்கள் இல்லை. இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் அல்லவா?**

ஆம். கோப் கமிட்டி போன்ற நிறுவனங்கள் இருந்தாலும், அவை செயல்படும் அதிகாரம் இல்லாததால், அதனால் பெரிய பணியை செய்ய முடியாது. சில சந்தர்ப்பங்களில், சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு விஷயத்தை விசாரிக்கும் போது பாராளுமன்ற கூட்டத்தொடர் நிறைவு செய்யப்படுகிறது. அதனுடன் கோப் குழுவும் ரத்தாகிறது. இது போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பழமைவாதத்திற்கு பதிலாக நவீனத்துவத்தை கொண்டு வரக்கூடிய அதிகாரிகள் குழு உருவாக்கப்படுவதோடு சட்டங்களும் இயற்றப்பட வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளில் பல புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்தகைய சட்டங்கள் தேசிய கொள்கைகளாக செயல்படுத்தப்பட வேண்டும். யார் ஆட்சிக்கு வந்தாலும் அவற்றை மாற்றக்கூடாது. உண்மையில் ஜனாதிபதியின் தலையீட்டின் ஊடாக திருடர்களைப் பிடிக்க சட்டங்களை கொண்டு வருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாக குறிப்பிடப்பட வேண்டும்.

நட்டமடைந்தன என்று கூறுவதற்கு முன்னால் அந்த அரசு நிறுவனங்கள் எவ்வாறு நட்டம் அடைந்தன என்பதைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலம் குற்றவாளிகளை அறிந்து கொள்ள முடியும். அதே போன்று சபைகள், நிறுவனங்கள் என்பவற்றை நட்டத்தில் இயங்குகின்றன எனக் கூறி விற்பதற்கு முன்னர் அதற்கான காரணம் என்ன என ஆராய வேண்டும். அவ்வாறு செய்தால் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை நட்டத்தில் இருந்து மீட்பதற்கு முடியும் என்பதோடு தனியார் துறைக்கு வழங்குவதையும் நிறுத்த கூடியதாக இருக்கும்

*உதித்த குணவர்தன*
*தமிழில் வீ.ஆர்.வயலட்*

---

### பேருவளை மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய

# அஷ் செய்ஹ் முஸ்தபா நாயகம் வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில் கௌரவிப்பு விழா

## ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் 125 பேரும் சமூக சேவையாளர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் 25 பேரும் கௌரவிப்பு

**பேருவளை பீ.எம்.முக்தார்**

தினகரன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு 92 ஆண்டுகள் நிறைவையொட்டி எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பேருவளையில் மாபெரும் விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





தென்னி லங்கையில் முன்னணி முஸ்லிம் பாடசாலைகளுள் ஒன்றான பேருவளை மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) அஷ் செய்ஹ் முஸ்தபா நாயகம் வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில் அன்றைய தினம் மு.ப. 9:00 மணிக்கு தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும் இப் பெரு விழாவில் கல்வி அதிகாரிகள், கல்விமான்கள், உலமாக்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், பேருவளை தினகரன் வாசகர் வட்ட உறுப்பினர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொள்வர் என ஏற்பாட்டு குழு சார்பில் பிரபல சமூக செவையாளரும் அறிவிப்பாளரும் எழுத்தாளருமான அல்ஹாஜ் எம்.பாஸி ஸுபைர் தெரிவித்தார்.

இவ் விழாவினை முன்னிட்டு களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளின் ஓய்வு பெற்ற அதிபர்கள் மற்றும் பேருவளை தேர்தல் தொகுதியில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் 125 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்தோடு முன்னணி சமூக சேவையாளர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் 25 பேரும் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேருவளை தொகுதியில் உள்ள சீனன் கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி, மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை, மருதானை அல் பாஸியத்துல் நஸ்ரியா மகா வித்தியாலயம், மகொட ஐ.எல். எம்.ஸம்ஸுதீன் மகா வித்தியாலயம், மக்கொனை அல்ஹஸனியா மஹா வித்தியாலயம், தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி, அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை, அல்ஹம்ரா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழி மூலம் தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. மேலதிக விபரங்களுக்கு எம்.பாஸி சுபைருடன் 0770812420 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.








# நகர்வலம்



### நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்த நிலையில்

# நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்கு முன்வந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே

### ஹம்பாந்தோட்டை ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் மனுஷ நாணயக்கார

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

இந்த நாடும் மக்களும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருந்த நிலையில் நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்கு துணிச்சலுடன் முன் வந்த தலைவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார் என தொழில் மற்றும் வெளிநாட்டுவேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அங்குனுகொல பெலஸ்ஸவில் ஏற்பாடு செய்திருந்த ஹம்பாந்தோட்டை மாவட்ட ஊடகவியலாளர்கள் மன்றத்தினை ஸ்தாபிக்கும் நிகழ்வில் விசேட அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் மின்சக்தி பிரதியமைச்சர் டி.வீ. சானக, முன்னாள் அமைச்சர் ஆனந்த குலரத்ன மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ஆகியோருக்கு நாட்டைப் பொறுப்பேற்று முன்னெடுத்துசெல்லுமாறுஅழைப்புவிடுத்தார். இதன் போது இவர்கள் எவருக்கும் நாட்டை முன்னெடுத்து செல்வதற்கான துணிச்சல் இருக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பொறுப்பேற்று துணிச்சலுடன் முன்னெடுத்து வருகிறார்.

அந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் டொலர் இருக்கவில்லை. எரிபொருள் பெறுவதற்காக மக்கள் வரிசையில் காத்திருந்தனர். பலர் உயிரிழந்தார்கள். நாமும் அப்போதைய அரசாங்கத்திற்கு எதிரானவர்களாகவே இருந்தோம். இருந்தாலும் எமக்குத் தேவையாக இருந்தது, நாடு இருந்த நிலையிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கே நாம் ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஒத்துழைப்பினை வழங்கி வருகிறோம்.

எங்களுக்கு எல்லாவற்றையும் விடவும் எமது நாட்டு மக்களின் வாழ்க்கையே முக்கியமானது. எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்னவாகும் என்று எனக்குத் தெரியாது. இன்று டயனா கமகேயை வெளிநாட்டு பிரஜை என்று கூறும் சஜித் பிரேமதாஸ குழுவினரே அவரை பாராளுமன்றிற்கு அழைத்து வந்தார்கள்.

நாம் எமது அமைச்சினூடாக பாரியதொரு தொகை டொலரினை எமது நாட்டிற்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் மற்றும் குழந்தைகளுக்காகவும் நாடுபூராகவும் நாம் பல்வேறு திட்டங்களை மேற்கொள்வோம் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

## உடப்பு ஆண்டிமுனை ஸ்ரீகிருஷ்ணா ஆரம்ப பாடசாலைக்கு நிதியுதவி



**உடப்பு குறூப் நிருபர்**

உடப்பு, ஆண்டிமுனையிலுள்ள ஸ்ரீகிருஷ்ணா ஆரம்ப பாடசாலையின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்காக 08 இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பாரியார் சட்டத்தரணி சமரி பிரியங்கா கடந்த (13) திகதி அதற்கான காசோலையை வழங்கி வைத்தார். நௌசர் பௌசியின் "சைடா "அமைப்பு மூலம் இந்நிதி வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையின் கட்டடவேலையின் முதலாம் கட்டம் நிறைவடைந்துள்ளதையடுத்து இரண்டாம் கட்டத்துக்கான நிதி வழங்கப்பட்டது. மூன்றாம் கட்டத்துடன் சுமார் 35 இலட்சம் ரூபாவுடன் நிர்மாணப் பணிகள் நிறைவடையவுள்ளன. பாடசாலையின் முன்னாள் அதிபர் க.தொண்டமான் காசோலையை பெற்றுக் கொண்டார். முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம்.ரியாஸ், முன்னாள் ஆராச்சிக்கட்டு பிரதேச சபைத் தலைவர் க.தெட்சணாமூர்த்தி ஆகியோரும் இதன் போது கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கற்பிட்டி ஆண்டாங்கேணி பகுதியில் விபத்து

**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி நோக்கி பயணித்துகொண்டிருந்த டிப்பர் ரக வாகனமும், பின்னால் சென்ற கூலரும் மோதுண்டு விபத்தொன்று வியாழக்கிழமை பிற்பகல் கற்பிட்டி பாலாவி பிரதான வீதியில் ஆண்டாங்கேணி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் இரண்டு வாகனங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் வாகன சாரதிகள் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறனர்.

## நுவரெலியா சீதாஎலிய சீதையம்மன் மஹா கும்பாபிஷேகத்துக்கு வாழ்த்து

### முனைவர் வி.ஜி சந்தோசம்



நுவரெலியா சீதா எலிய சீதையம்மன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்றும், கிரியாரம்பம், எண்ணெய்க்காப்பு நிகழ்வுகள் அதற்கு முந்தைய இரு நாட்களிலும் நடைபெறவுள்ளமையை முன்னிட்டு எனது வாழ்த்துக்களை ஆலய அறங்காவலர் குழுவினருக்கு தெரிவித்துக்கொள்வதோடு எனக்கு அழைப்பு விடுத்தமைக்கும் எனது நன்றியினையும் முதற்கண் தெரிவித்துக்கொள்வதாக முனைவர் வி.ஜி சந்தோசம் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவரது வாழ்த்துச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் அமைச்சர் இராதாகிருஷ்ணனின் சீரிய தலைமையின் கீழ் நடைபெறவுள்ள இக்குடமுழுக்குத் திருவிழா, இறையன்பர்கள் பங்கு கொண்டு மகிழும் பேரின்பப் பெருவிழாவாக அமைந்து, மக்கள் யாவரும் அறக்கோட்பாடுகளைப் பின்பற்றி இன்புற்று வாழ

அடிகோலி நிற்கட்டும் என இச்சந்தர்ப்பத்தில் நெஞ்சார வாழ்த்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### புத்தளம் மாவட்ட அபிவிருத்தி தொடர்பில்

# ஆளுநர் ஹாபிஸ் நஸீருடன் அலிசப்ரி ரஹீம் எம்.பி சந்திப்பு

### சில பிரச்சினைகளுக்கும் உடனடித்தீர்வு





**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், வடமேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டை (15) குருநாகல் ஆளுநர் மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில், புத்தளம் மாவட்ட அபிவிருத்தி, கல்வித்துறை முன்னேற்றம், ஆசிரியர் இடமாற்றம், புத்தளத்தில் ஆரம்ப பாடசாலையொன்றை உருவாக்குதல், புதிய பட்டதாரிகள் நியமனம் மற்றும் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பிலும் இதன்போது பாராளுமன்ற உறுப்பினரினால் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனை அமைதியாக செவிமடுத்த ஆளுநர்,

மேற்படி பிரச்சினைகளை முடியுமானவரை விரைவாக தீர்ப்பதாகவும் அதுதொடர்பில் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து நிவர்த்தி செய்து தருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமிடம் உறுதியளித்தார். உடனடியாக செய்ய முடியுமான பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகளை பெற்றுக்கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜே.எம்.ஜௌசி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஏ.எச்.எம். பைரூஸ், சமூகவியலாளர் அதிபர் எஸ்.ஆர்.எம். முஹ்சி, அதிபர் அஷ்ஷெய்க் சன்ஹீர் (கபூரி), புத்தளம் வலய கல்வி பணிமனையின் சித்திரப்பாட ஆசிரிய ஆலோசகர் கலாநிதி எம்.எம்.முஹம்மது உள்ளிட்ட கல்வியியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## ராஜாங்கனை, அங்கமுவ; நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக, ராஜாங்கனை மற்றும் அங்கமுவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் நேற்று (16) திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி தெரிவித்தார்.

இதன்படி இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் 2 அடி உயரத்திலும், அங்கமுவ நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகள் 3 அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள்ளன.

இதனால், இராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 2400 கன அடி நீரும், அங்கமுவ நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 1800 கன அடி நீரும் வெளியேறுவதாகவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி மேலும் தெரிவித்தார்.



அரச பாடசாலைகளில் தொழிநுட்பக் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு, இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த நிபுணத்துவக் குழுவினர் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரை அமைச்சுக் காரியாலயத்தில்வைத்து சந்தித்து, கருத்துப்பரிமாறல்களை மேற்கொண்டனர்.

### இலங்கை மாணவர்களுக்கு

# அல்லாமா இக்பால் புலமைப்பரிசில்கள் சம்பந்தமான EXPO–2024 கல்விக் கண்காட்சி

**அஷ்ரப் ஏ. சமட்**

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம், பாகிஸ்தானின் உயர் கல்வி ஆணைக்குழுவுடன் (HEC) இணைந்து, இம் மாதம் 8 முதல் 15 வரை கல்விக் கண்காட்சி 2024 சம்பந்தமான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்ச்சிகளை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த பல வருடங்களாக இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தான் வழங்கி வரும் அல்லாமா இக்பால் புலமைப்பரிசில்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாகிஸ்தானின் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் பாகிஸ்தானின் உயர் கல்வி ஆணைக்குழுவால் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், பாகிஸ்தான் அரசாங்கம் இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தானின் முன்னணி பல்கலைக்கழகங்களில் இளங்கலை, முதுகலை மற்றும் கலாநிதி ஆகிய மட்டங்களில் பூரண மற்றும் பகுதியளவு நிதியுதவியுடன் கூடிய புலமைப்பரிசில்களை வழங்குகிறது.





EXPO2024 கல்வி கண்காட்சியின் இறுதி தினமான நேற்று முன்தினம் (15) கொழும்பு பண்டாரநாயக சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பெருமளவிலான இலங்கை மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் மற்றும் ஏனைய இலங்கை பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) பாஹீம் உல் அஸீஸ், கல்வித் துறையில் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான சிறந்த இருதரப்பு உறவுகளைப் பற்றி விளங்கப்படுத்தினார். மேலும், இரு சகோதர நாடுகளுக்குமிடையிலான மக்கள் தொடர்புகளை மேலும் மேம்படுத்தும் நோக்கத்தில் வருகை தந்த பாகிஸ்தானிய தூதுக்குழுவின் முயற்சிகளை உயர்ஸ்தானிகர் பாராட்டினார். முன்னேற்றத்தை நோக்கிய பயணத்தில் இலங்கைக்கு பாகிஸ்தானின் உறுதியான ஆதரவை எப்போதும் வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் பரிசளிப்பு விழா





**(ருஸைக் பாரூக்)**

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் கல்லூரி ஹாஜரா மண்டபத்தில், அதிபர் நஸ்ரியா முனாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆணையாளர் கலாநிதி நதீ திஸாநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான கல்லூரியின் மிகச் சிறந்த மாணவியர்களான பாத்திமா ரிப்தா மற்றும் பாத்திமா இமாரா ஆகியோர் பிரதம அதிதியிடமிருந்து தங்க நாணயங்கள் மற்றும் வெற்றிக் கிண்ணங்களை பெற்றுக்கொண்டனர். மாணவர்களின் சிறந்த வருகை, ஆசிரியர்களின் சிறந்த வருகை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த செயல்திறன், க.பொ.த சா/த பரீட்சை 9A, சிறந்த செயல்திறன் மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் ஆகியவற்றுக்கான விருதுகளும் இதன்போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியான கலாநிதி நதீ திஸாநாயக்கவுக்கு அதிபர் நஸ்ரியா முனாஸ் பாராட்டுச் சின்னம் வழங்கினார்.

## ரூ. 28 லட்சம் ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுக்கள் மீட்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாட்டிலிருந்து சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்டுள்ள 28 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் நபர் ஒருவர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபரை விமான நிலையத்தில் வருகை தரும் முனையத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டபோதே பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் அவரைக் கைது செய்துள்ளனர்.

இந்தியாவின் மும்பாய் விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளதாகவும் அந்த நபர் கொழும்பு 13 ஐச் சேர்ந்த 36 வயதுடையவர் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவர் நீண்ட நேரம் வரை விமான நிலையத்திலுள்ள 'டியூட்டி ப்ரீ' கடைகளில் நேரத்தைக் கழித்த பின்னரே அங்கிருந்து வெளியேற முற்பட்டுள்ளார். அந்த சந்தர்ப்பத்திலேயே மேற்படி அதிகாரிகள் அவரைக் கைது செய்துள்ளனர்.

அவர் கொண்டு வந்திருந்த பயணப் பையில் மேற்படி 21,000 சிகரெட்டுகள் 105 காட்களாக சூசகமாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டுபிடித்துள்ள நிலையில் அவரைக் கைது செய்துள்ளனர்.

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

SUNDAY OBSERVER adZ It's what you want | வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements**
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

**Mahara - 011 2 925 168**
1474 - H. M. Induka Herath - Adz soon Advertising, 57/D, Kandy Road, Mahara.

**Mirigama - 033 22 740 19**
1964 - M. D. Mohan Jayalal - No. 219, Pasyala Road, Mirigama.

**Veyangoda - 033 22 903 86**
1984 - H. M. De Seram - No. 37, Main Street, Veyangoda.

**Weliweriya - 077 4 965 266**
1986 - K. L. P. Perera - Nilanka Stores, No. 4, New Kandy Road, Weliweriya.

**Kaluthara District**

**Panadura - 072 6 267 432**
1730 - B. D. P. Perera - Sausiri Adds, No. 121, Horana Road, Mahawila, Panadura.

**Panadura - 038 22 324 80**
1776 - Mahen Silva - Suwena News and Adds, 28/A, Weeraman Road, Panadura.

**Panadura - 038 22 400 60**
1819 - G. R. Gunasingha - 467, Media Lick, Main Street, Panadura.

**Mathugama - 076 6 589 582**
1737 - D. C. S. Lakmal - Janahitha Newspaper Agency - Mathugama.

**Ingiriya - 077 9 806 680**
1757 - A. D. Nimal Chandra - Chandra Stores, No. 03, Main Street, Ingiriya.

**Beruwala - 034 22 775 84**
1784 - Upali Weerasingha - Kanthi Book Shop, No. 10, Market Road, Beruwala.

**Bandaragama - 071 4 475 504**
1785 - Sumith Kumara - Dawasa Book Shop, No. 17, Panadura Road, Bandaragama.

**Wadduwa - 077 2 671 013**
1850 - Chinthaka Cooray - No. 509, Galle Road, Wadduwa.

**Horana - 071 8 863 522**
1852 - D. Nandawathi - Add House, No. 262A, Rathnapura Road, Horana.

**Bandaragama - 070 2 424 240**
1860 - W. A. V. Perera - Nearest Gelanigama Highway Entrance, Kothalawala, Bandaragama.

**Kegalle District**

**Mawanella - 071 6 946 452**
9113 - D. K. R. Ranasingha - No.132, Main Street, Mawanella.

**Kegalle - 077 6 778 481**
9119 - M. M. Salgado & Sons - No. 88, Kandy Road, Kegalle.

**Mawanella - 077 0 217 854**
9131 - P. M. A. Indunil Bandara - Nimalasiri Book Shop, No. 14, Main Street Mawanella.

**Kegalle - 0702651515**
9145 - J. T. F. Corera - Kandy Road, Kegalle.

**Warakapola - 071 7 112 567**
9158 - A. A. Ariyawathi - Piumi Book Shop, Bus Satnd, Warakapola.

**Ruwanwella - 071 3 117 535**
9192 - U. K. D. Ariyawansa - No. 44, Kalyani Book Shop, Main Street, Ruwanwella.

**Rathnapura District**

**Sooriyawewa - 076 6 032 171**
9345 - M. A. Chaminda Kumara - Chathumi Agencies, Sooriyawewa.

**Kuruvita - 077 7 123 149**
9371 - Y. M. Roshan Bandara - Yapa Agencies, Kuruvita.

**Rathnapura - 071 2 900 035**
9377 - G. G. Karunarathne - Karunarathna Brothers, Rathnapura.

**Rathnapura - 077 7 221 939**
9378 - D. Liyanarachchi - Lake House Media Center, Rathnapura.

**Balangoda - 045 22 862 84**
9402 - B. K. D. Padmasiri Jinadasa - Jinadasa Trade Center, Balangoda.

**Eheliyagoda - 0712362035**
9404 - K. A. Premasinghe Kuruppu - Famous Cafe, Eheliyagoda.

**Embilipitiya - 0714784294**
9449 - K. V. D. Teja Karavita - Queens Agencies, Pallegama, Embilipitiya.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**

**உடைந்த வாகனங்கள் (SCRAP) (பதிவுச் சான்றிதழ் ரத்து செய்யப்பட்டது)**

| தொ / இல. | வாகன இலக்கம் | வாகன வகை | வாகன மாதிரி | மனு ஆவணம் பெற்றுக் கொள்ளக் கூடிய திகதி | மனு ஆவணம் வழங்கப்படும் இறுதித்திகதி | விண்ணப்பம் முடிவடையும் திகதி | மீளச் செலுத்தப்படாத மனு ஆவணக் கட்டணம் (ரூ.) | மீளச் செலுத்தப்படும் மனு ஆவணக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP LC 3057 | Tata Single Cab | Motor Lorry | | | | 5000.00 | 5,000.00 |
| 2 | WP LF 7791 | JMC Single Cab | Motor Lorry | | | | 5000.00 | 5,000.00 |
| 3 | WP MA 9332 | Motor Cycle | CT 100 | | | | 1000.00 | 2,500.00 |
| 4 | 18-5881 | Nissan Sanny Car | Motor Car | | | | 5000.00 | 5,000.00 |
| 5 | WP RX 8368 | Tractor Trailer | Land Vehicle | | | | 2000.00 | 2,500.00 |
| 6 | WP VH 4705 | Motor Cycle | CT 100/Bajaj | | | | 1000.00 | 2,000.00 |
| 7 | WP GP 5668 | Motor Cycle | YBX 125 | | | | 1000.00 | 2,000.00 |
| 8 | WP GD 3782 | Motor Cycle | CG 125 PKS | | | | 1000.00 | 2,500.00 |
| 9 | WP TE 9654 | Motor Cycle | Victor GLX | | | | 1000.00 | 2,500.00 |
| 10 | WP UN 9526 | Motor Cycle | XCD 125 | | | | 1000.00 | 2,500.00 |
| 11 | WP BEM 6653 | Motor Cycle | Motor Cycle | | | | 1000.00 | 2,500.00 |
| 12 | WP VH 3030 | Motor Cycle | Motor Cycle | | | | 1000.00 | 2,500.00 |
| 13 | WP VH 3039 | Motor Cycle | Motor Cycle | | | | 1000.00 | 2,500.00 |
| 14 | WP WR 7208 | Motor Cycle | Motor Cycle | 2024.05.20 | 2024.06.10 | 2024.06.11 (மு.ப.10.30 வரை | 1000.00 | 2,500.00 |
| 15 | WP MA 9587 | Motor Cycle | Motor Cycle | | | | 1000.00 | 2,500.00 |
| 16 | WP UM 7809 | Motor Cycle | Motor Cycle | | | | 1000.00 | 2,500.00 |
| 17 | WP VH 4700 | Motor Cycle | Motor Cycle | | | | 1000.00 | 2,500.00 |
| 18 | LD 1106 | Tata Single Cab | Single Cab | | | | 5000.00 | 5,000.00 |
| 19 | NA 7708 | Kia Van | JZ 309913 | | | | 5000.00 | 5,000.00 |
| 20 | WP UM 7807 | Motor Cycle | XCD 125 | | | | 1000.00 | 2,500.00 |
| 21 | WP TG 2037 | Motor Cycle | Victor GLX | | | | 1000.00 | 2,500.00 |
| 22 | WP WZ 5549 | Motor Cycle | XCD 127 | | | | 1000.00 | 2,500.00 |
| 23 | 2919 | Trailer Bowser | Water Trailer | | | | 2000.00 | 5,000.00 |
| 24 | 2241 | Trailer Bowser | Water Trailer | | | | 2000.00 | 5,000.00 |
| 25 | 4578 | Hand Tractor -C Fan | Land Vehicle | | | | 2000.00 | 2,500.00 |
| 26 | 5001 | Hand Tractor -C Fan | Land Vehicle | | | | 2000.00 | 2,500.00 |
| 27 | XYZ 4384 | Hand Tractor -C Fan | Land Vehicle | | | | 2000.00 | 2,500.00 |
| 28 | 550570q2 | Hand Tractor -Agri | Land Vehicle | | | | 2000.00 | 2,500.00 |
| 29 | 19-3175 | Bens Car | Motor Car | | | | 5000.00 | 5,000.00 |
| 30 | 63-3750 | Bens Van | Motor Coach | | | | 5000.00 | 5,000.00 |

**உடைந்த வாகனங்கள் (SCRAP) (பதிவுச் சான்றிதழ் ரத்து செய்யப்பட்டது)**

| தொ / இல. | வாகன இலக்கம் | வாகன வகை | வாகன மாதிரி | மனு ஆவணம் பெற்றுக் கொள்ளக் கூடிய திகதி | மனு ஆவணம் வழங்கப்படும் இறுதித்திகதி | விண்ணப்பம் முடிவடையும் திகதி | மீளச் செலுத்தப்படாத மனு ஆவணக் கட்டணம் (ரூ.) | மீளச் செலுத்தப்படும் மனு ஆவணக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Motor Cycle | Motor Cycle | 13 (Lot) | | | | 5000.00 | 15,000.00 |
| 2 | Trailer | Land vehicle Trailer | 1 (Lot) | 2024.05.20 | 2024.06.10 | 2024.06.11 (மு.ப.10.30 வரை | 2000.00 | 5,000.00 |
| 3 | Trailer Bowser | Water Trailer | 3 (Lot) | | | | 5000.00 | 10,00.00 |
| 4 | Hand Tractor Trailer | Land vehicle | 4 (Lot) | | | | 5000.00 | 15,000.00 |

02. மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. மேலே குறிப்பிட்டுள்ள மீளச்பெற முடியாத கட்டணத்தை பணமாக செலுத்திய பின்னர் பணிப்பாளர் பணம், சிவில் பாதுகாப்பு திணைக்களம், ஜெய மாவத்தை, கட்டுபெத்த,மொரட்டுவ எனும் முகவரியில் பொது விடுமுறைகள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி வரை** செலுத்தி மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

04. மனுதாரர்கள் **"வாகனங்கள் பொது ஏலத்தில் விற்பனை"** சிவில் பாதுகாப்பு பயிற்ச்சி பாடசாலை, சேருபிட்ட, களுத்துறை எனும் முகவரியில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.04.00 மணி வரை** மனு ஆவணங்களை பரிசீலனை செய்துகொள்ளலாம் மேலும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் - வழங்கல்
சிவில் பாதுகாப்பு திணைக்களம்,
ஜெய மாவத்தை, கட்டுபெத்த,
மொரட்டுவ.

பணிப்பாளர் வழங்கல் : 011- 2044854/5
தொலைநகல் இல : 011-2044855

**பணிப்பாளர் நாயகம்,**
**சிவில் பாதுகாப்பு திணைக்களம்.**

# விலைமனுக்கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

**விலைக்கேள்வி இலக்கம் - 022/T/2024**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் நடுத்தர மின்னழுத்த நிலத்தள காப்புச் சாதன கிலோவோட்ஸ் பதினொன்றின் (11 kV), 3C x 95 $mm^2$ மற்றும் 3C x 35 $mm^2$ கம்பிவடங்களை நிறுவுதல்**

**(INSTALLATION OF MEDIUM VOLTAGE 11kV, 3C x 95 $mm^2$ AND 3C x 35 $mm^2$ UNDER GROUND ARMORED CABLES AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்காக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் நடுத்தர மின்னழுத்த நிலத்தள காப்புச் சாதன கிலோவோட்ஸ் பதினொன்றின் (11 kV), 3C x 95 $mm^2$ மற்றும் 3C x 35 $mm^2$ கம்பிவடங்களை நிறுவுவதற்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பு திருப்பி தரப்படாத ரூபா பதினான்காயிரம் (ரூபா 14,000.00) தொகை வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் எழுத்து மூலமான கோரிக்கை விடப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் www.airport.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவிறக்கங்கள் மூலமும் (அமெரிக்கா டொலர் 40.00 ஆன தொகை நிகழ்நிலையில் செலுத்துவதனூடாக) இந்த விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் 2024.05.20 ஆம் திகதி முதல் 2024.06.11 ஆம் திகதி வரை அலுவல்கள் இடம்பெறும் ஏதேனும் நாளொன்றில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் விலைக்கேள்வி இணைப்புக் கோப்புகள் பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேலேயுள்ள விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களினால் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையிலும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2024.06.12 ஆந் திகதி புதன் பி.ப 2.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்களின் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகள் திறக்கும்போது அதில் கலந்துகொள்ள முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு கேள்வியின் அடிப்படையில் செலுத்தக்கூடியவாறு வெளியிடப்பட்ட ரூபா ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 650,000.00) பெறுமதியான வங்கி பிணை முறி , விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.05.28ம் திகதி 10.00 மணிக்கு இலங்கை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, புதிய நிர்வாக கட்டிடம், 4ம் மாடி, மாநாட்டு அறையில் நடைபெறும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கங்கள் : 011-2264103 / 011-2264102 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

**விலைக்கோரல் இல. 039/T/2024**

**வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்திலுள்ள IFS ERP முறைமையின் வருடாந்த பராமரிப்பு ஒப்பந்தம், ஒத்துழைப்பு, VERSION UPGRADE மற்றும் அபிவிருத்தி சேவைக்கு பணிக்கமர்த்துவதற்காக விலைமனுக்களை கோருதல்**

**(INVITATION OF BIDS FOR HIRING OF ANNUAL MAINTENANCE CONTRACT, SUPPORT, VERSION UPGRADE AND DEVELOPMENT SERVICES OF IFS ERP SYSTEM AT AIRPORT & AVIATION SERVICES (SRI LANKA) (PVT) LTD)**

தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்திலுள்ள IFS ERP முறைமையின் வருடாந்த பராமரிப்பு ஒப்பந்தம், ஒத்துழைப்பு, VERSION UPGRADE மற்றும் அபிவிருத்தி சேவைக்கு பணிக்கமர்த்துவதற்காக விமானநிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத கட்டணமாக பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (12,500.00) தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்தி அல்லது AASL உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.airport.lk) பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்கள் 2024-06-11ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதே முகவரியில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024 ஜுன் 12ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவு, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்நோக்கத்திற்காக மேற்கூறிய முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

விலைக்கோரல்கள் 2024 ஜுன் 12ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 இற்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவருக்கு செலுத்தும் வகையில் கோரும் போது செலுத்தப்படும் ஆறு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாவுக்கான (680,000.00 ரூபா) பெறுமதியான பிணை முறியொன்றை (விலைக்கோரல் உத்தரவாதம்) விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் நூற்றி எண்பது (180) நாட்களுக்கு விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், புதிய நிர்வாகக் கட்டிடம், 4ஆம் மாடி, மாநாட்டு அறையில் 2024-05-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

மேலதிக விபரங்களுக்கு www.airport.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

ஏதேனும் மேலதிக தகவல்களை தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்திலிருந்து 0112264103 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

# சீத்தாவக்கபுர நகர சபை

## கேள்வி கோரல்

01. சீத்தாவக்கபுர நகர சபையின் அதிகாரத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதற்காக தகுதியும் தகைமையும் உள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. தகைமை கொண்ட கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாது இருப்பதுடன் கீழே குறிப்பிடப்படும் தகைமைகளை ஒப்பீட்டு மற்றும் தகவுத்திறன்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | CIDA பதிவு வகுதி | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூபா) | கேள்விப் பிணை முறியின் செல்லுபடி கால எல்லை | ஒப்பந்த கால எல்லை | வரி இன்றிய ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சீத்தாவக்கபுர நகர சபைக்கு சொந்தமான அவிசாவளை ரயில் நிலைய வீதியில் மண்சரிவுக்கு உட்பட்டுள்ள பகுதியை அபிவிருத்தி செய்தல் S248152331001 | C7 C6 | 60,000/- | 104 நாட்கள் | 45 நாட்கள் | 5,963,362.96 | 3000/- |

03. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகோரல் மேற்கொள்ளப்படும்.

04. கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை சீத்தாவக்கபுர நகர சபையின் வேலை அதிகாரி (தொ.பே.இல. - 0714460563) இடம் விசாரித்து பெற்றுக் கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை வார நாட்களில் அலுவலக நேரங்களில் கைத்தொழில் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகச் செலுத்தி மற்றும் சீத்தாவக்கபுர நகர சபையின் செயலாளரிடம் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்த பின்னர் 2024.05.17 முதல் 2024.05.29 வரை அலுவலக நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணிக்கு இடையில் சீத்தாவக்கபுர நகர சபையின் கைத்தொழில் பிரிவில் கொள்வனவு செய்யலாம்.

06. தள வேலைத்தள பரிசீலனை சீத்தாவக்கபுர நகர சபைக்குச் சொந்தமான அவிசாவளை ரயில் நிலைய பாதையில் மண்சரிவுக்கு உட்பட்டுள்ள பகுதியில் 2024.05.28 மு.ப 10.00 இற்கு நடைபெறுவதுடன், அதன் பின்னர் கேள்விக்கு முன்னரான கூட்டம் சீத்தாவக்கபுர நகர சபையில் 2024.05.28 மு.ப. 11.00 இற்கு நடைபெறும். இச் சந்திப்புக்கு கேள்விதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

07. சகல கேள்வியுடனும் சீத்தாவக்கபுர நகர சபையின் செயலாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 2024.09.12ம் திகதி வரை இலங்கைக்குள் செயற்படும் செல்லுபடியாகும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட நிபந்தனையற்ற கோரும்போது செலுத்தப்படும் பிணைமுறியொன்று அல்லது இலங்கையில் செல்லுபடியாகும் பணத்தில் செயலாளர், சீத்தாவக்கபுர நகர சபையின் பெயரில் ரூ. 60,000/- பெறுமதியுடைய கேள்விப் பிணைமுறியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. பொறியிடப்பட்ட கேள்விகள் நகல்பிரதியுடன் “மூலப்பிரதி” மற்றும் “நகல்பிரதி”யுடன் 2024.05.30 பி.ப.1.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், சீத்தாவக்கபுர நகர சபை, அவிசாவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சீத்தாவக்கபுர நகர சபையின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அக் கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் சீத்தாவக்கபுர நகர சபை கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**எம்.பீ.கே. மிஹிரானி,**
**செயலாளர் மற்றும் சீத்தாவக்கபுர நகர சபையின் அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**சீத்தாவக்கபுர நகர சபை**
**அவிசாவளை.**
**2024.05.15**

# மத்திய மாகாண சபை

## கேள்விக்கான அழைப்பு

**மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்ட செயற்படுத்தலுக்கு தேவையான பொருட்கள் மற்றும் இயந்திராதிகளை கொள்வனவு செய்தல்.**

### மத்திய மாகாண விவசாயத் திணைக்களம்

மத்திய மாகாண விவசாயத் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால், அத்திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களுக்கு தேவையான கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் இயந்திராதிகளை கொள்வனவு செய்வதற்கு ஆற்றல் மற்றும் தகைமைகளுடன் அதற்காக ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. விலைமனுக்கள் கோரல் தேசிய போட்டி கேள்வி முறைமையின் கீழ் நடைபெறும்.

கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தின் நிதி உதவியாளரிடம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கேள்விப் பிணைமுறியை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டியதுடன், மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறிக்காக அவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 2024.09.10 வரை செல்லுபடியாகும் பிணைமுறியொன்றின் மூலம் அல்லது அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதியை காசாக வைப்புச் செய்வதன் மூலம் மேற்கொள்ளலாம். அதன் பிரகாரம் கேள்விதாரரால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் பொருட்கள் மற்றும் இயந்திராதிகளுக்காக வேறுவேறாக கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன், கேள்வி ஆவணங்கள் 2024.05.20 முதல் 2024.06.06 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் இல. 64, சரசவி மாவத்த, பேராதனையில் அமைந்துள்ள, மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தின் நிதி உதவியாளரிடம் பரீட்சிப்பதற்கு மற்றும் பெற்றுக்கொள்வதற்கு முடியும். பொருட்கள் மற்றும் இயந்திராதிகளை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட சகல விபரங்களும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்படுகின்றன.

| தொடர் இல. | தேவைப்படும் உருப்படி | தேவைப்படும் அளவு | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறி ரூபா | | மீளளிக்கப் படாத கேள்விப் பிணைமுறி ரூபா |
|---|---|---|---|---|---|
| | | | வங்கிப் பிணைமுறி ரூபா | காசாக வைப்புச் செய்தல் ரூபா. | |
| 01 | சூரிய சக்தி நீர் பம்பி | 21 | 95,000.00 | 47,500.00 | 3,250.00 |
| 02 | பெரகூட் தட்டு | 160,000 | 110,000.00 | 55,000.00 | 3,850.00 |
| 03 | பூச்சுத் தடை வலை ரோல் | 38 | 17,500.00 | 8,750.00 | 1,000.00 |
| 04 | விதைநெல் தயாரிக்கும் இயந்திரம் | 10 | 30,000.00 | 15,000.00 | 1,050.00 |
| 05 | பாதுகாப்பு மனைக்கான சொட்டுநீர் வழங்கல்கள் அமைப்பு (20'X50') | 40 | 41,000.00 | 20,500.00 | 2,000.00 |
| 06 | UV தடை பொலித்தீன் | 10,000$m^2$ | 77,500.00 | 38,750.00 | 2,700.00 |
| 07 | 1/2 ஏக்கர் விசிறும் நீர் வழங்கல் அமைப்பு | 06 | 8,200.00 | 4,100.00 | 1,000.00 |
| 08 | சூரிய சக்தியில் செயற்படும் மின் எனர்ஜயிசர் | 480 | 170,000.00 | 85,000.00 | 6,000.00 |
| 09 | விவசாய வேலி | 2100 | 184,500.00 | 92,250.00 | 6,500.00 |
| 10 | காளான் பயிர்ச்செய்கை மத்திய கலப்பு மற்றும் பைகள் நிரப்பும் இயந்திரம் | 09 | 31,500.00 | 15,750.00 | 1,100.00 |
| 11 | காளான் பயிர்ச்செய்கை மத்திய உயிரூட்டல் இயந்திரம் | 09 | 26,500.00 | 13,250.00 | 1,350.00 |

பெறுகைக்கு முன்னரான குழுக் கூட்டம் 2024.06.04 மு.ப. 10.30 இற்கு பேராதனை, மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தில் நடைபெறும். குறித்த கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் கேள்வி ஆவணங்களில் மாத்திரம் கேள்விகளைச் சமர்ப்பிக்க முடிவதுடன், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2024.06.07 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு மத்திய மாகாண விவசாயத் திணைக்களம், த.பெ. 64, சரசவி மாவத்த, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உங்களால் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகள் மூடப்பட்டவுடன் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி வேறுவேறாக உறைகளில் இடப்பட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென பெயர் குறிப்பிட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு அனுப்பப்படல் வேண்டும். அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் உங்களால் கேள்விகள் சமர்ப்பிக்கும் உருப்படியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். உ+ம் : “சூரிய சக்தி நீர் பம்பி கொள்வளவு செய்தல்” மாதிரிகளுக்கு அமைவாக பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்கியுள்ளதாக கவனத்தில் கொள்வதற்கு கேள்விகள் சமர்ப்பிக்கும் வேளையில் சாம்பில்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் தொ.பே இல. : 081-2384153 மூலம் விவசாயத் திணைக்களத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**மத்திய மாகாண விவசாயத் திணைக்கள பெறுகைக் குழு,**
**த.பெ. 64, சரசவி மாவத்த, பேராதனை,**
**2024.05.17**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கி.மீ. 1,500 வீதி செயற்திட்டங்களுக்கான விலைமனுக்கோரல் (வட மாகாணம்)

**வட மாகாணம்**

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளுடன்) ரூ.மில்லியன்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரு) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/SP/1500KM/NP/18 | வல்லை உடுப்பிட்டி-வல்வெட்டித் துறை வீதியை மேம்படுத்தல் (3+820 - 5+503 km (1683 m) | 43.8 | C5 மற்றும் C4 | 650,000.00 | 91 நாட்கள் |
| RDA/SP/1500KM/NP/19 | பொண்ணுசீமை வீதியை மேம்படுத்தல் (2040 m) | 36.5 | C5 மற்றும் C4 | 550,000.00 | 91 நாட்கள் |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக தேசிய மனுக்கோரல் போட்டி முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.05.17 ஆம் திகதி முதல் 2024.06.10 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

## மாஹோ பிரதேச சபை

### 2025ம் ஆண்டிற்காக அபிவிருத்தி ஆலோசனைகளைக் கோரல்

மாஹோ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் 2025ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உற்படுவதற்கான அபிவிருத்தி ஆலோசனைகள், 2024 ஜூன் 30ம் திகதிக்கு முன்னர் எனக்கு வழங்குமாறு 2020 பிரதேச சபை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தும் விதிக்கோவையின் 6(1) விதியின் பிரகாரம் அறிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.டி.கே. அமரஜீவ,**
**செயலாளர்,**
**மாஹோ பிரதேச சபை**

## அறிவித்தல்

கெப்பிட்டல் ட்ரஸ்ட் வெல்த் மனேஜ்மனட் (பிரைவட்) லிமிடெட் முதலீட்டு முகாமையாண்மை சேவை வழங்குநராக தனது செயற்பாடுகளை இடை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. ஏதேனும் வாடிக்கையாளர் ஒருவர் தமது கணக்கு தொடர்பாக எம்முடன் தொடர்பு கொள்ள விரும்பினால் இந்த அறிவித்தல் வெளியாகி 14 வேலை நாட்களுக்குள் கீழே தரப்பட்டுள்ள முகவரியுடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்.

**கெப்பிட்டல் ட்ரஸ்ட் வெல்த் மனேஜ்மனட் (பிரைவட்) லிமிடெட்**
**42, சேர் மொஹமட் மக்கான் மார்க்கார் மாவத்தை, கொழும்பு 3, ஸ்ரீலங்கா.**
**Tel: 0112 174174**

## அறிவித்தல்

கெப்பிட்டல் ட்ரஸ்ட் கிரெடிட் (பிரைவட்) லிமிடெட் எல்லா கடன் வழங்குநரான (Margin Trading) தனது செயற்பாடுகளை 2024 ஏப்ரல் 30ஆம் திகதி முதல் இடை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. ஏதேனும் உரிமை கோரல்கள் முறைப்பாடுகள் தொடர்பாக எம்முடன் தொடர்பு கொள்ள விரும்பினால் இந்த அறிவித்தல் வெளியாகி 14 வேலை நாட்களுக்குள் கீழே தரப்பட்டுள்ள முகவரியுடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்.

**கெப்பிட்டல் ட்ரஸ்ட் கிரெடிட் (பிரைவட்) லிமிடெட்**
**42, சேர் மொஹமட் மக்கான் மார்க்கார் மாவத்தை, கொழும்பு 3, ஸ்ரீலங்கா.**
**Tel: 0112 174174**

The Housewives' companion
Classifieds on
Daily News

# DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

# MINISTRY OF IRRIGATION

## REQUEST FOR BIDS (RFB) - GOODS

Climate Resilience Multi-Phase Programmatic Approach (L.N.: 8996-LK)

## INTERNATIONAL COMPETITIVE BIDDING

### SUPPLYING GOODS FOR REPAIRING AUTOMATIC WEATHER STATIONS AND AUTOMATIC RAIN GAUGES OF THE DEPARTMENT OF METEOROLOGY, SRI LANKA

**RFB Reference No.: SLMOI/CRES/DOM/G/ICB/22**

This is further to the advertisement published on 05th April 2024 on same procurement bearing RFB reference number **SLMOI/CRES/DOM/G/ICB/22**. It was decided to cancel the previous bid invitation and proceed with a fresh bid invitation with this advertisement. Bidders who have already purchased the bidding documents, will be issued a new set of bidding documents free of charge. Accordingly, bid submission, bid validity, bid security validity will be as per this new Request for Bids (RFB).

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received financing from the International Bank for Reconstruction and Development (IBRD) towards the cost of the Climate Resilience Multi-Phase Programmatic Approach of the Ministry of Irrigation and intends to apply part of the proceeds toward payments under the contract for Supplying and Installing of Hydrogen Generators for Department of Meteorology, Sri Lanka. For this contract, the Borrower shall process the payments using the Direct Payment Disbursement Method, as defined in the World Bank's Disbursement Guidelines for Investment Project Financing, except for those payments, that the contract provides to be made through a letter of credit.
2. The Chairman, the **Project Procurement Committee** on behalf of the **Climate Resilience Multi-Phase Programmatic Approach** now invites sealed Bids from eligible and qualified Bidders for **SUPPLYING GOODS FOR REPAIRING AUTOMATIC WEATHER STATIONS AND AUTOMATIC RAIN GAUGES OF DEPARTMENT OF METEOROLOGY, SRI LANKA.**
3. Bidding will be conducted through the International Competitive Bidding (ICB) procedure using a Request for Bids (RFB) as specified in the World Bank's "Procurement Regulations for IPF Borrowers 2020", and is open to all eligible Bidders as defined in the Procurement Regulations.
4. Interested eligible Bidders may obtain further information from **Procurement Division, Climate Resilience Multi-Phase Programmatic Approach, No. 11, Jawatta Road, Colombo 05, T.P.: 0112507855, Fax: 0112058451, E-mail: pdcresmpa@gmail.com** and inspect the bidding documents free of charge **from 20th May 2024 to 17th June 2024** during normal working days from 9.00 am to 3.30 p.m.
5. Bidding document in English language may be purchased by interested Bidders upon submission of a written application to the address below and upon payment of a non-refundable fee of **LKR. 18,000.00 or USD 65.00 from 20th May 2024 to 28th June 2024 between 9.00 a.m. and 3.00 p.m.** on any working day. The method of payment will be by Cash or Bank Transfer. The document will be sent by email or could be collected by hand.
6. Bid must be delivered in duplicate to the address below on or before **01st July 2024 at 11.00 a.m.** Electronic Bidding will not be permitted. Late Bids will be rejected. Bids will be publicly opened soon after closing in the presence of the Bidder's designated representative and anyone who chooses to attend at the address below.
7. All Bids must be accompanied by a **Bid-Security**, (as per the format given in the Bidding Document) of **LKR 540,000.00 or USD 1,830.00**. Bid Security shall be valid until **30th November 2024.**
8. Attention is drawn to the Procurement Regulations requiring the Borrower to disclose information on the successful bidder's beneficial ownership, as part of the Contract Award Notice, using the Beneficial Ownership Disclosure Form as included in the bidding document.
9. A Pre-Bid Meeting will be arranged on **31st May 2024 at 9.30 a.m.**, at the Conference Room of the address below.
10. The address referred to above is - Climate Resilience Multi-Phase Programmatic Approach, No.11, Jawatta Road, Colombo 05, Sri Lanka.

**Chairman,**
**Project Procurement Committee**
**Climate Resilience Multi-Phase Programmatic Approach**
**No. 11, Jawatta Road, Colombo 05.**
**T.P.: 011 2507855 / 011 2058452**

*17th May 2024*

CSIAP THE WORLD BANK

## விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

கமத்தொழில் அமைச்சு

### பிரதித் திட்டப் பணிப்பாளர்கள் அலுவலகம் – வட மேல் மாகாணம் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**திட்ட இல.: P163742**

**(தேசிய போட்டிரீதியான விலைமனு)**

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் செலவுகளை நோக்கியதாக 125 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையான உலக வங்கி – சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான தகுதியுடைய கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களின் பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பில் கனிஷ்ட திட்ட பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

| ஒப்பந்த இல. | பொருட்களின் விபரம் | | விலைமனு பிணை | | செல்லுபடி திகதி |
|---|---|---|---|---|---|
| | | | மீளளிக்காத கட்டணம் (இ.ரூபா) | பெறுமதி (இ.ரூபா) | |
| LK-MOA-333970-GO-RFB /NWP/ DPDO/ Rain shelters (21)/2023/35 | உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட வ.மே.மா. இல் நுண் நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 24 எண்ணிக்கையான மழைக் காப்பிடம் (60sqm), 60 எண்ணிக்கையான நீர் பம்பிகள் (டீசல்) 2", 84 எண்ணிக்கையான நீர் பம்பிகள் (மின்சாரம்) 2", மற்றும் 10 எண்ணிக்கையான உயர் அழுத்த டீசல் நீர் பம்பிகளின் (2") பெறுகை | | | | 2024 செப்டெம்பர் 6 ஆம் திகதி வரை |
| | கூறு 01. நீர் காப்புகள் | 24 | 2,500.00 | 216,000.00 | |
| LK-MOA-333948-GO-RFB /NWP/ DPDO/ Drip irrigation (07)/2023/32 | வ.மே.மா. இல் நுண் நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 40 எண்ணிக்கையான சொட்டு நீர்ப்பாசனம் (1/4 ac), 25 எண்ணிக்கையான பெர்டிகேஷன் உடன் சொட்டு நீர்ப்பாசனம் (1/2 ac), 72 எண்ணிக்கையான தெளிப்பு நீர்ப்பாசனம் (1/4 ac), 04 எண்ணிக்கையான மூடுபனி பாசனத்துடன் பொலித்தீன் கூடாரம் (1000 ft2), 11 எண்ணிக்கையான சூரிய நீர்ப்பம்பிகளின் பெறுகை | | | | |
| | கூறு 01. 1000 ft2 மூடுபனி பாசனத்துடன் பொலித்தீன் கூடாரம் | 04 | 2,500.00 | 72,0000.00 | |
| LK-MOA-415202-GO-RFB-NWP / DPDO/ Tarpaulin | CSIAP - வட மேல் மாகாணத்தில் உற்பத்தி தர முகாமைத்துவ திட்டத்தின் கீழ் PSs இற்கு 500 தார்ப்பாய்களின் (20ft * 30 ft) பெறுகை | | | | |
| | கூறு 01. தார்ப்பாய் (20ft * 30 ft) | 500 | 2,500.00 | 125,000.00 | |

4. மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்திற்காக எந்த ஒரு SOE (அரசுக்கு சொந்தமான வியாபார முயற்சிகள் - சபைகள், கூட்டுத்தாபனம், பணியகம் முதலியவை) விலைமனு மேற்கொண்டால், அப்போது அவை கூறப்பட்ட உட்பிரிவின் கீழ் தமது தகுதியை நிரூபிக்க உலக வங்கி மற்றும்/ அல்லது ஆவணத்தின் IPF கடன் பெற்றவர்களுக்கான பெறுகை ஒழுங்குமுறைகளின் 3.23 (பி) உட்பிரிவுடன் CSIAP இன் கீழ் ஒப்பந்தம் வழங்குவதற்கு ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு உலக வங்கியிடம் இருந்து பெறப்பட்ட "ஆட்சேபனை இல்லா" கடிதத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில், எந்த கேள்வியும் இன்றி பதிலளிக்காத விலைமனுவாகக் கருதி அவர்களின் விலைமனு நிராகரிக்கப்படும்.
5. விலைமனுதாரர்கள் குறித்த விலைமனு ஆவணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகேட்கலாம் மற்றும்/ அல்லது அதில் வழங்கப்பட்ட ஒரே விலைமனுவில் ஒன்று அல்லது மேற்பட்ட கூறுகளுக்காக கூறுவிலையிட குறிப்பிட்டிருந்தாலும், விலைமனுதாரரின் குறிப்பிட்ட அளவுகோல்கள், நிதி மற்றும் வேறு திறன் வரம்புகளுக்கு அமையவே தேர்வு மேற்கொள்ளப்படும்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் குருநாகல், யக்கபிட்டிய வீடமைப்பு, மிஹிந்து மாவத்தை, இல. 51, பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம் (NWP), ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதித் திட்ட பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.பே. இல. 037-2227950, தொலைநகல் இல. 037-2227950, மின்னஞ்சல் - dpdcsiapnwp@gmail.com) என்பதோடு 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024 மே 17 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூன் 06 ஆம் திகதி வரை வேலை நாட்களில் அதே இடத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
7. 2024 மே 17 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூன் 06 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 14:00 மணி வரை ரொக்கப்பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி (தொகைக்காக மேலுள்ள அட்டவணையை பார்க்கவும்) பந்தியில் குறிப்பிடப்பட்ட முகவரியில் பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு நிறுவன முகவரி அச்சிடப்பட்ட அசல் கடிதத் தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து தகுதியுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை வாங்க முடியும்.
8. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட இடத்தில் 2024 மே 29 ஆம் திகதி 10.00 மணிக்கு நடத்த ஏற்பாடாகியுள்ளது.
9. விலைமனுக்களானது மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனு ஆவணத்தில் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறான செல்லுபடியான விலைமனு பிணை ஒன்று இல்லாத எந்த ஒரு விலைமனுவும் பதிலளிக்காததாக கருத்தில் கொள்ளப்படுவதோடு எந்த விசாரணையும் இன்றி நிராகரிக்கப்படும்.
10. விலைமனு ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களிலும் விலைமனுதாரர் கையொப்பமிட்டு அவரது முத்திரை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. விலைமனுக்களை அசல் மற்றும் பிரதி என சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் பிரதி இரண்டும் வெவ்வேறு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் மூடப்பட்டு முறையே "அசல்" மற்றும் "பிரதி" என குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளையும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றைக் கடித உறையில் மூடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை எழுத வேண்டும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024 ஜூன் 07ஆம் திகதி 14.00 மணி (பி.ப. 2.00) அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், பெறுகைக் குழு, பிரதித் திட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (வட மேல் மாகாணம்), காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், இல. 51, மிஹிந்து மாவத்தை, யக்கபிட்டிய வீடமைப்பு, குருநாகல் என்ற முகவரிக்கு இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவது அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.
13. கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் 2024 ஜூன் 07ஆம் திகதி 14:00 மணிக்கு (பி.ப. 2.00) மூடப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். அரசாங்கத்தின் அறிவித்தல் காரணமாக மேலே குறிப்பிடப்பட்ட விலைமனுக்களை மூடப்படும் அலுவலகம் மூடப்பட்டால், விலைமனுக்களை மூடப்படும் திகதி உடன் அடுத்து வரும் வேலை நாளில் அதே இடத்தில் மற்றும் அதே நேரத்தில் திறக்கப்படும்.
14. திட்ட பெறுகைக் குழுவின் முடிவு இறுதி மற்றும் முடிவானதாகும். ஒற்றை, எந்த ஒரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் சொந்த விருப்பில் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதித் திட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (வட மேல் மாகாணம்),**
**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**இல. 51, மிஹிந்து மாவத்தை,**
**யக்கபிட்டிய வீடமைப்பு, குருநாகல்.**

**திகதி: 2024.05.16**

## டி20 உலகக் கிண்ணம்:

# விசா தாமதத்தால் இலங்கை வீரர்கள் சிலர் அமெரிக்கா செல்வதில் தொடர்ந்தும் இழுபறி



அமெரிக்கா செல்வதற்கான விசாவை பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதால் டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் இலங்கை அணி வீரர்கள் மற்றும் உதவி பணியாளர்கள் சிலர் தொடர்ந்து நாட்டிலேயே தங்கியுள்ளனர். இது இலங்கையின் டி20 உலகக் கிண்ண ஏற்பாடுகளில் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட வீரர்களில் முன்னணி வீரர் குசல் மெண்டிஸும் உள்ளார். அவர் அமெரிக்கா சென்றிருக்கும் அணியுடன் இல்லாதது அணியின் தயார்படுத்தல்களில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

டி20 உலகக் கிண்ண போட்டி அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் எதிர்வரும் ஜூன் 1 தொடக்கம் 29 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடர் நெருங்கியுள்ள நிலையில், மெண்டிஸ் அணியுடன் இணைவதில் ஏற்பட்டிருக்கும் தாமதம் 11 பேர் கொண்ட கடைசி அணியை திட்டமிடுவதில் பாதிப்பை செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஏமாற்றத்தை வெளிப்படுத்தி உள்ள இலங்கை கிரிக்கெட் சபை, விசா நடைமுறையை விரைவுபடுத்தத் தவறியது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் (ஐ.சி.சி.) மீது குற்றம்சாட்டியுள்ளது. பங்கேற்கும் அனைத்து நாடுகளின் அணிகளினதும் விசா வசதிகளை வழங்குவதற்கு ஐ.சி.சி. உடன் போட்டியை நடத்தும் அமெரிக்க கிரிக்கெட் சபையும் பொறுப்பாகும். தற்போது இந்தப் பிரச்சினையை தீர்ப்பதில் அந்த நிர்வாகங்கள் பெரும் அழுத்தத்தை சந்திக்க ஆரம்பித்துள்ளன.

சில வீரர்களுக்கு விசா வழங்குவதில் ஏற்பட்டிருக்கும் தாமதம் குறித்து கொழும்பில் இருக்கும் அமெரிக்க தூதரக அதிகாரிகளுடன் இலங்கை அரசு தொடர்பை ஏற்படுத்தி இருப்பதாக தெரியவருகிறது. இது தொடர்பில் முறையான பதிலுக்காக காத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதுவரையில் டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் அணிகளில் இலங்கையில் மாத்திரமே விசா தாமதம் ஏற்பட்டிருப்பதோடு மற்ற அணிகள் அமெரிக்காவை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளன.

டி20 உலகக் கிண்ணம் முதல் முறை அமெரிக்காவில் நடத்தப்படுவது முக்கியமான மைல்கள் என்றும் அது கிரிக்கெட் வளர்ச்சிக்கு உதவும் என்றும் பாராட்டப்படுகிறது. என்றாலும் சுமூகமான பயண ஏற்பாடுகளை செய்வதில் ஏற்பட்டிருக்கும் குழப்பம், முழு ஏற்பாட்டு ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு தீர்வு காண்பதில் இலங்கை கிரிக்கெட் சபையும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. காலம் கடந்து செல்லும் சூழலில் அவசர நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை, சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலை வலியுறுத்தி வருகிறது.

டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்பதற்காக இலங்கை அணி கடந்த மே 14 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியம் வழியாக அமெரிக்காவை நோக்கி புறப்பட்டுச் சென்றது. இதில் குசல் மெண்டிஸ் உடன் அசித்த பெர்னாண்டோவுக்கு இன்னும் விசா கிடைக்காத நிலையில் தொடர்ந்தும் இலங்கையில் தங்கி உள்ளனர். அதேபோன்று இந்தியாவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் இலங்கை வீரர்கள் இன்னும் இலங்கை அணியுடன் இணையவில்லை. அவர்கள் அங்கிருந்து நேரடியாக இலங்கை அணியுடன் இணைவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ளவுள்ளது. இதற்காக முன்கூட்டியே அமெரிக்கா சென்றிருக்கும் இலங்கை அணி அங்கு பயிற்சி முகாம் ஒன்றை நடத்துகிறது.

# மேற்கிந்திய தீவுகளின் மகளிர் அணி இலங்கை சுற்றுப்பயணம்



மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணி எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டு இலங்கை மகளிர் அணியுடன் மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடவுள்ளது.

மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் ஒக்டோபரில் பங்களாதேஷில் நடைபெறவுள்ள நிலையிலேயே இந்த சுற்றுப்பயணம் இடம்பெறவுள்ளது. அண்மையில் நடைபெற்ற டி20 உலகக் கிண்ணத்திற்கான தகுதிகாண் தொடரில் இலங்கை மகளிர் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றிருந்தது.

இதில் இலங்கை வரும் மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணி முதலில் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் அடவுள்ளது. இந்தப் போட்டிகள் முறையே ஜூன் 15, 18 மற்றும் 21 ஆம் திகதிகளில் காலியில் நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணிகள் மோதும் டி20 தொடர் ஹம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது. இதில் முதல் போட்டி ஜூன் 24 ஆம் திகதியும் தொடர்ந்து ஜூன் 26 மற்றும் 28 ஆம் திகதிகளில் கடைசி இரு போட்டிகளும் நடைபெறவுள்ளன.

# யங் அல் பத்தாஹ் சம்பியன்



*மாளிகைக்காடு குறூப் நிருபர்*

ஏறாவூர் கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஏறாவூர் யங் அல் பத்தாஹ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது. 30 அணிகளுடன் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலாம் சுற்றில் செங்கலடி யுனைடெட் கழகத்தையும், காலிறுதியில் ஏறாவூர் ஆதவன் கழகத்தையும், அரையிறுதியில் ஏறாவூர் கோல்ட் ஸ்டார் கழகத்தையும் இறுதி ஆட்டத்தில் மட்டக்களப்பு கலற்றி யோற்றஸ் கழகத்தையும் வீழ்த்தி யங் அல் பத்தாஹ் சம்பியனாக தெரிவானது.



## சர்வதேச செய்திகள்

# வடக்கு காசாவில் முன்னேறிவரும் இஸ்ரேலிய படைக்கு கடும் எதிர்ப்பு

## ரபாவில் முன்னேறாது சரமாரித் தாக்குதல்

வடக்கு காசாவில் உள்ள ஜபலியா நகரின் மையப் பகுதியை நோக்கி இஸ்ரேலிய டாங்கிகள் நேற்று முன்னேறியதோடு அங்கு நிலைகொண்டிருக்கும் பலஸ்தீன போராளிகள் டாங்கி எதிர்ப்பு ரொக்கெட்டுகள் மற்றும் மோட்டார் குண்டுகளை வீசி கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர். தெற்கின் ரபா நகரில் இஸ்ரேலியப் படை முன்னேறாமல் கடும் தாக்குதல்களை நடத்தியதாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த எட்டு மாதங்களாக நீடிக்கும் காசா போரில் இஸ்ரேலிய படைகள் முன்னேற்றம் காண்பதில் தடுமாற்றம் கண்டு வரும் சூழலில் அங்கு ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் பிரதமர் நெதன்யாகுவின் திட்டத்தில் பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

ஹமாஸ் ஆயதப் பிரிவு மற்றும் அதன் கூட்டணியான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு இஸ்ரேலிய துருப்புகளுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது. குறிப்பாக இஸ்ரேல் வடக்கில் ஜபலியா மற்றும் தெற்கில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவில் அதிக அவதான செலுத்தி இருப்பதோடு அங்கு பதில் தாக்குதல்களும் தீவிரமாக உள்ளன.

கடந்த ஒக்டோபரில் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கடத்தப்பட்ட பணயக் கைதிகளுடன் ஹமாஸின் நான்கு படைப் பிரிவுகள் ரபாவில் இருப்பதாக இஸ்ரேல் குறிப்பிடுகிறது. எனினும் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா மீது தரைவழி படை நடவடிக்கை ஒன்றை இஸ்ரேல் முன்னெடுப்பதற்கு நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா உட்பட சர்வதேச அளவில் கடும் எதிர்ப்பு உள்ளது.

அங்கு இடம்பெறும் படை நடவடிக்கை பேரழிவை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்படுகிறது.

'ரபா படை நடவடிக்கை தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களை இலக்கு வைத்ததாக உள்ளது' என்று இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் லெப்டினன்ட் கேர்ணல் நவாட் ஷொபானி நேற்று தெரிவித்தார். இராணுவ செயற்பாடுகள் தொடர்பான உளவுத் தகவல்கள் அடிப்படையிலேயே தாக்குதல் நடத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் கான் யூனிஸில் உள்ள குடும்ப வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய செல் தாக்குதலில் குறைந்தது ஐவர் கொல்லப்பட்டதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. முன்னதாக நடந்த படை நடவடிக்கையில் கான் யூனிஸ் நகர் பெரும் அழிவுக்கு உள்ளாகி உள்ளது. எனினும் ரபாவில் இருந்து வெளியேறும் பலஸ்தீனர்கள் பலர் இந்த நகரில் அடைக்கலம் பெற்று வருகின்றனர்.

மறுபுறம் ஜபலியா நகரின் அல் பலூஜா பகுதியில் வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் கர்ப்பிணி பெண் ஒருவர் உட்பட நால்வர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது. ரபா நகரிலும் வீடு ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய தாக்குதல்களில் குறைந்தது 39 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 35,272 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 79,205 பேர் காயமடைந்திருப்பதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



வடக்கு காசாவில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் நிறைவடைந்ததாக இஸ்ரேல் இராணுவம் சில மாதங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

அங்கு ஹமாஸ் மீண்டும் ஒருங்கிணைவதை தடுப்பதாகவும் அது குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் அங்கு ஒரு வாரத்துக்கு முன் மீண்டும் படை நடவடிக்கையை ஆரம்பித்த நிலையில் நேற்று ஜபலியாவின் இதயப் பகுதியில் இருக்கும் பிரதான சந்தைப் பகுதி மீது டாங்கிகள் குண்டு மழை பொழிந்தன. இதன்போது பல கடைகள் தீப்பற்றியதாக குடியிருப்பாளர்கள் மற்றும் காசா ஹமாஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

ஜபலியாவில் இஸ்ரேலிய துருப்புகளின் வாகனங்களை உள்ளூர் தயாரிப்பு அல் யாசிஸ் 105 டாங்கி எதிர்ப்பு ரொக்கெட்டுகளை கொண்டு போராளிகள் தாக்கி அழித்ததாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு முன்னதாக குறிப்பிட்டிருந்தது.

'அவர்கள் பைத்தியம் பிடித்தது போன்று குண்டுகளை வீசி முகாமில் உள்ள வீடுகள் மற்றும் சந்தைகளை அழித்து வருகின்றனர்' என்று அந்த முகாமில் உள்ள குடியிருப்பாளர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அந்தப் படையினர் மீதான எதிர்ப்பு நடவடிக்கைகள் வலுத்திருப்பதாலேயே அவர்கள் இவ்வாறு செயற்படுகிறார்கள் என்றும் அந்தக் குடியிருப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

டாங்கிகள் வடக்கு நகரான பைத் ஹனுன் வாயில் வரை பின்வாங்கியதாகவும் இஸ்ரேலிய புல்டோசர்கள் தொழிற்சாலைகள் மற்றும் சொத்துகளை அழித்து வருவதாகவும் குடியிருப்பாளர்கள் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர்.

காசாவின் தெற்கு முனையில் ரபா புறநகர் மற்றும் அதன் கிழக்கு பகுதியில் இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேறாமல் நிலைகொண்டிருப்பதோடு வான் மற்றும் தரைவழியாக தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

ரபாவில் பத்து நாட்களுக்கு முன் இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் அந்த நகரில் இருந்து சுமார் 600,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் வடக்கு காசாவில் இஸ்ரேலிய டாங்கி நடத்திய தாக்குதல் ஒன்றில் சிக்கி தமது ஐந்து படை வீரர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபரில் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் அதிக படையினர் கொல்லப்பட்ட சம்பவம் இது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

'எமது படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக புதன்கிழமை மாலை ஜபலியா முகாமில் 202 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த ஐந்து படையினர் கொல்லப்பட்டனர்' என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்தது.

இந்தப் படைப் பிரிவு பயன்படுத்திய கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேலிய டாங்கிகள் இரண்டு தாக்குதல் நடத்தியதில் இந்தப் படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஸ்லோவாக்கிய பிரதமரை சுட்ட சந்தேக நபர் கைது



ஸ்லோவாக்கிய பிரதமர் ரொபட் பிகோ துப்பாக்கிச் சூட்டில் படுகாயத்திற்கு உள்ளான நிலையில் படுகொலைக்கு முயற்சித்த குற்றச்சாட்டி ஆடவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் விபரம் வெளியிடப்படாதபோதும் அவர் லவிஸ் நகரைச் சேர்ந்த 71 வயது ஆடவர் என்று ஸ்லோவாக்கிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் 59 வயதான பிரதமர் பிகோ மீது பல தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இது அரசியல் நோக்கம் கொண்ட தாக்குதல் என்று அவரது சகாக்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் தாக்குதல்தாரி தனிப்பட்ட முறையில் செயற்பட்டிருப்பதாகவும் அவர் கடந்த காலங்களில் அரச எதிர்ப்பு போராட்டங்களில் பங்கேற்றிருப்பதாகவும் உள்துறை அமைச்சர் மாடு சுடாஜ் எஸ்டொக் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பட்டப்பகலில் ஆதரவாளர் கூட்டம் ஒன்றுக்கு மத்தியில் இருந்த பிரதமர் மீது நெருக்கமான தூரத்தில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிதாரி ஐந்து முறை சுட்டிருப்பதோடு இதில் அவரது வயிறு மற்றும் கைகளில் துப்பாக்கிக் காயம் ஏற்பட்டுள்ளது.

# பள்ளிவாசலுக்கு தீ வைத்து தாக்குதல்: பதினொருவர் பலி



நைஜீரியாவின் வடக்கு கானோ மாநிலத்தில் உள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது ஆடவர் ஒருவர் நடத்திய தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டதாக அந்த மாநில அரசு குறிப்பிட்டுள்ளது.

அந்த ஆடவர் பள்ளிவாசல் மீது பெற்றோலை தெளித்து அதன் கதவுகளை மூடிவிட்டு தீவைத்துள்ளார். அப்போது பள்ளிலாசலுக்குள் 40 பேர் வரை சிக்கியுள்ளனர். குடும்பப் பிரச்சினை ஒன்று காரணமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

38 வயதான அந்த ஆடவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கானோ மாநிலத்தின் கெசாவா பகுதியில் கடந்த புதனன்று (15) காலைத் தொழுகைக்காக வழிபாட்டாளர்கள் திரண்டபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூடிய பள்ளிவாசல் கதவை திறப்பதற்கு உள்ளே சிக்கியவர்கள் போராடிய நிலையில் தீ பள்ளிவாசல் எங்கும் பரவியதாக உள்ளூர் மக்கள் தெரிவித்துள்ளனர். வெடிப்புச் சத்தம் கேட்டதை அடுத்து அங்கிருக்கும் குடியிருப்பாளர் உள்ளிருப்பவர்களை காப்பற்ற விரைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் சிறுவர்கள் உட்பட பலரும் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 17ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.